

'லக்ஷ்மி'
பூங்கொடி பதிப்பகம்
மரகதம்

## அமரர் 'லக்ஷ்மி'யின் நூற்கள் பற்றி...

சாகித்ய அகடமி பரிசு பெற்ற ''லக்ஷ்மி'' அவர்களைப் பாராட்டி பூங்கொடி பதிப்பகம் நடத்திய விழாவில் இந்திய மாதர் சங்கத்தின் பொறுப்பாளரும் சிறந்த எழுத்தாளருமான திருமதி வசுமதி ராமசாமி...

''பல எழுத்தாளர்களின் நூல்களை நாம் நமது குழந்தைகளிடம் காண்பிக்க முடியாது. ஆனால் ''லக்ஷ்மி'' யின் நூல்களை எல்லோரும் படிக்கலாம். பூஜை அறையிலும்கூட வைக்கலாம்.''

- தமிழரசு 16-4-84

# மரகதம்

## 1

''சங்கதி தெரியுமா உனக்கு? இந்த மாணிக்கம் இப்படிச் செய்வான்னு நான் நினைக்கலை. மரகதத்தை வேலாயுதத்திற்குக் கட்டிக் கொடுக்கப்போகிறானாம். இரு தரப்பிலும் பேச்சுவார்த்தையெல்லாம் நடந்து விட்டதாம். கலியாணத் தேதி வைக்கிறதுதான் பாக்கியாம்'' என்று முத்துப்பிள்ளை ஒரு திடுக்கிடும் விஷயத்தைக் கூறிவிட்டு, இலையில் சாப்பிட உட்கார்ந்தார்.

''யாரு நம்ப மரகதத்தையா? அந்த நொண்டிப் பயல் வேலாயுதத்துக்கா?'' என்று ஆச்சர்யத்துடன் கூச்சலிட்ட அபிராமியம்மாள், ஒரு கணம் ஸ்தம்பித்துப் போய் நின்றாள். இந்தச் செய்தியைத் தன் கணவர் முத்துப் பிள்ளை கூறியிராவிட்டால், அவள் நிச்சயமாக நம்பி யிருக்க மாட்டாள்.

''அவனுக்கேதான்! மாணிக்கத்துக்கு இப்படி ஒரு கெட்ட புத்தி எதுக்காக தோணுச்சோ தெரியலை. எல்லாம் பணம் செய்கிற வேலை'' என்று பெருமூச்செறிந்தார் முத்துப்பிள்ளை.

"அப்படியென்ன, வீட்டிலே கலியாணமாகாது ஐந்து ஆறு பொண்ணு நிக்கிறதா! இருந்திருந்தும் செங்கமலத்திற்கு இருக்கிறது ஒரு பொண்ணு. அதைக் கொண்டு போய் இப்படி ஒரு பாழுங் கிணற்றிலே தள்ளுவானேன்?'' என்று சிறிது கோபத்துடன் வினவினாள் அபிராமியம்மாள்.

"அந்தப் பெண்ணின் தலையெழுத்து அப்படி இருக்கிறது. இந்தச் சங்கதியைக் கேள்விப்பட்டதிலிருந்து என் மனசுகூடக் கஷ்டப்படுகிறது. என்று முத்துப்பிள்ளை போஜனத்தை முடித்துக்கொண்டு இலையைவிட்டு எழுந்திருந்தார். இலையில் சோற்றை வடித்துக்கொண்டு சாப்பிட உட்கார்ந்த அபிராமியம்மாளுக்கு அன்று உணவு இறங்கவேயில்லை. மரகதத்தின் துர்ப்பாக்கியத்தை தன்னுள் சிந்தித்து அவளது பெற்றோர்கள் மீது கட்டுக்கடங்காத கோபங்கொண்ட அவள் அவசரமாக போஜனத்தை முடித்துக் கொண்டு, கூடத்தில் வந்து உட்கார்ந்து கொண்டாள்.

அடுத்த வீட்டு மாணிக்கம்பிள்ளையின் மகள் மரகதத்தின் மீது அபிராமியம்மாளுக்கு தனியான வாத்ஸல்யம் இருந்தது உண்மைதான். மாங்குடி தெற்குத் தெருவிலே அடுத்தடுத்த வீட்டிலே வசித்து வந்த மாணிக்கம்பிள்ளையும் முத்துசாமிபிள்ளையும் அப்படி நெருங்கிய நண்பர்கள் என்று கூற முடியாவிட்டாலும், அடுத்த வீட்டுக்காரர்கள் என்ற ஹோதாவில் அவர்கள் ஒருவரையொருவர் விரோதியாக மதிக்கவில்லை. ஆனால் மாணிக்கம்பிள்ளை மனைவி செங்கமலமும், முத்துப் பிள்ளை மனைவி அபிராமியம்மாளும் அந்யோன்யமாகப் பழகிய சிநேகிதிகள்.

அபிராமியம்மாள் தனது வீட்டு முற்றத்திலிருந்து "செங்கமலம்!'' என்று உரத்த குரலில் கூப்பிடுவாள். "என்ன



அண்ணி!'' என்று சமையலறையிலிருந்து பதிலுக்குக் கேட்பாள் செங்கமலம். "உங்க அண்ணாவுக்கு காப்பிக்குப் பால் எடுத்து வைக்க மறந்து விட்டேன். கொஞ்சம் மரகதத்திடம் கொடுத்து அனுப்பு'' என்பாள். "இவ்வளவு தானே காப்பியா வேணுமானாலும் போட்டு அனுப்பி வைக்கிறேன்'' என்று உள்ளேயிருந்தபடி உரத்த குரலில் கூறி நகைப்பாள் செங்கமலம். அபிராமியம்மாளும் தங்கள் புழக்கடை தோட்டத்தில் காய்த்த பூசணிக்காயையோ பரங்கிக்காயையோ உடைத்தால் ஒரு பெரிய துண்டத்தைப் பத்திரமாக தனியே எடுத்து வேலைக்காரியிடம் கொடுத்து அடுத்த வீட்டிற்கு அனுப்ப மறக்கமாட்டாள். புதுத்தினுசா பலகாரமோ, குழம்போ, ஊறுகாயோ செய்திருந்தால், அதில் கொஞ்சம் அடுத்த வீட்டிற்கு அனுப்பாதிருந்தால் அபிராமியம்மாளுக்குத் தூக்கமே வராது. ஆண்பிள்ளைகள் பகல் போஜனத்திற்குப் பிறகு கடைத் தெருவிலிருந்த தங்கள் கடைகளைக் கவனிக்கக் கிளம்பிவிட்டதும் இரண்டு வீட்டுப் பெண்களும் தங்களது வம்புக்கடையை ஆரம்பித்து விடுவார்கள். மாணிக்கம் பிள்ளை வீட்டுத் தோட்டத்தையும் முத்துப்பிள்ளை வீட்டுத் தோட்டத்தையும் இடையே பிரித்து நின்ற சுவர் ஒரு பெருமழைக்குப் பொத்தென்று விழுந்து விட்டது. அவர்களுக்கு மிகவும் சௌகர்யமாக இருந்தது. பகல் போஜனத்திற்குப் பிறகு வாசற்கதவைத் தாளிட்டுக்கொண்டு புழக்கடை வழியே அபிராமியம்மாள் செங்கமலத்தின் வீட்டிற்குள் வந்து குந்திக்கொண்டு விடுவாள். பிறகு அவள் எழுந்து வீட்டிற்குத் திரும்புவதற்குள் பொழுது அஸ்தமித்துப் போய்விடும். "தாயும் பிள்ளையும் போலப் பழகினோம். அக்காள் தங்கையைப் போல் அன்பாக இருக்கிறோம்'' என்று கூறிக்கொண்டு, இரண்டு வீட்டுப் பெண்களும்

அப்போதைக்கப்போது தங்களது இல்வாழ்க்கையில் நடக்கும் இன்ப துன்ப சம்பவங்களைக் கூறி ஆறுதல் பெறுவார்கள். சுருங்கச் சொன்னால் செங்கமலத்திற்குத் தெரியாமல் அபிராமியம்மாள் வீட்டில் அடுப்புக் கூடப் புகையாது. அபிராமியம்மாளுக்குத் தெரியாத குடும்ப ரகசியம் செங்கமலத்தின் வீட்டில் ஒன்றுமில்லை. அபிராமியம்மாளுக்கு அடுத்த வீட்டின் மீது நாட்டம் அதிகம் ஏற்படுவதற்கு இன்னொரு காரணமும் இருந்தது. கல்யாணமாகி முப்பது வருஷ காலமாகியும் தனது என்று சொல்லிக்கொள்ள அபிராமியம்மாளுக்கு குழந்தை ஒன்று கூடப் பிறக்கவில்லை. அந்தக் குறையை அவள் ஓரளவு மரகதத்தின் மூலம் தீர்த்துக் கொண்டாள்.

செங்கமலம் நாட்டுப் புறத்துப் பெண், கொட்டிலில் கட்டியிருக்கும் பசுக்களை வேளை தவறாமல் கவனிப் பதையும் வேளா வேளைக்குப் பொங்கிப் போடுவதையும் தவிர, உலக விஷயங்கள் ஒன்றுமே அறியாதவள். அபிராமி யம்மாள் அப்படியல்ல. நாலுந் தெரிந்த கெட்டிக்காரி. ஒரு புடவை எடுக்கவோ, அல்லது பாத்திரம் வாங்கவோ, செங்கமலத்திற்கு தனியே செல்ல துணிச்சல் ஏற்படாது. அடுத்த வீட்டு அபிராமி அண்ணிதான் அவற்றுக்கு யோசனை சொல்லி உதவ வேண்டும்.

''மல்லிகை மொக்கை இப்படிக் கொண்டா! உனக்கு வயசு ஆச்சுதே ஒழிய ஒரு இழவும் தெரியலை'' என்று உரிமையுடன் அதட்டிவிட்டு, அபிராமியம்மாள் தானே மரகதத்தின் தலையைச் சீவி மல்லிகை மொக்கை வரிசை யாக வைத்துத் தைத்து கூந்தலை அலங்காரம் செய்வாள். மரகதத்திற்கு தலைவாரிப் பொட்டிட்டு மையிட்டு அழகு பார்ப்பதில் செங்கமலத்தை விட அபிராமிக்குத்தான் அதிகமான ஆர்வம். ''பச்சைப் பசுங்கிளிபோல் இருக்கிறாளே!



இவளைக் கட்டிக்கக் கொடுத்து வச்சவன் எவனோ?'' என்று அடிக்கடி செங்கமலத்திடம் வியப்புடன் கூறுவாள். மரகதத்தின் மேல் அபிராமியம்மாளுக்கு அன்பு அதிகம் ஏற்பட்டிருந்ததற்கு இன்னொரு சிறிய காரணமும் இருந்தது.

மரகதம் சுபாவத்திலே வெகு சுட்டிப்பெண். சின்னஞ் சிறு வயதிலேயே அவளுக்குத் தனது காரியங்களைச் சாதித்துக்கொள்ளும் வழிகள் நன்கு பிடிபட்டுப் போயிருந்தன. திருநாட் கடையில் விற்கும் பொம்மை யையோ வளையல்களையோ மரகதம் அடைய ஆசைப் பட்டால், அடுத்த வீட்டு அபிராமியம்மாளைப் போய்ப் பிடித்துக்கொண்டு விடுவாள். ''என்னடி செங்கமலம்! உன் பணத்தைக் கொண்டு உடைப்பிலே போடு. பச்சைக் குழந்தைக்கு ஆசைப்பட்ட வளையல்களை வாங்கிக் கொடுத்தால் உனக்கென்னடி வந்திடுச்சு? நகை போடணும், நல்லது உடுத்தணும்னு ஆசைப்படுகிறது நடு வயசிலே தானடி. உன்னாட்டியும் என்னாட்டியும் தலைவெளுக்க ஆரம்பிச்ச பிறகு இந்த ஆசை எங்கே வரப்போகுது?'' என்று அதட்டுவாள்.

உங்களை வக்காலத்துக்கு கூட்டி வந்து விட்டாளா இந்தக் குட்டி? என்ன அண்ணி, அவ தொந்தரவு பொறுக்க முடியவில்லை'' என்று பாதி கோபமும் பாதி பெருமை யுமாகச் செங்கமலம் மரகதத்தின் விருப்பத்திற்குப் பணிந்து விடுவாள். தனது காரியங்களைச் சாதிக்க ஒரு கருவியாக அமைந்திருந்த அபிராமியம்மாளிடம் மரகதம் ஒட்டிக் கொண்டு மிகவும் உறவாடினாள். 'அத்தை! அத்தை!' என்று அன்பு கனியும் குரலில் கூப்பிட்டுக் கொண்டு, தன்னைச் சுற்றி வளைய வந்து கொண்டிருந்த அந்தப் பெண் மரகதத்தின் மீது அபிராமிக்குப் பாசம் ஏற்பட்டிருந்ததில் வியப்பில்லை. செங்கமலத்திற்கு மகள்மேல் பெற்ற பாசம்.

அபிராமிக்கோ வளர்த்த பாசம். ஆகவே மரகதத்தின் திருமணச் செய்தி அபிராமியம்மாளின் நெஞ்சைப் பதை பதைக்கச் செய்தது.

அன்று முத்துப்பிள்ளை கடைக்குப் புறப்பட்டுச் சென்றவுடன், அவசரமாகக் கதவைத் தாளிட்டுக்கொண்டு புழக்கடைக்கு ஓடி வந்தாள்.

''ஏண்டி செங்கமலம்! இது என்னடி அநியாயம்! நான் கேள்விப்பட்டது நெசமா? எனக்கு ஒரு வார்த்தை கூட நீ இதுவரை சொல்லலையே!'' என்று அடுக்கடுக்காகக் கேட்டுக் கொண்டு ஆத்திரத்துடன் தொப்பென முற்றத்து நிழலில் வந்து உட்கார்ந்து கொண்டாள் அபிராமி.

இரவு முழுவதும் கணவனுடன் பெண்ணின் கல்யாண விஷயமாக விவாதித்து அழுதது போதாதது போல், மாணிக்கம் பிள்ளை கடையிலிருந்து சாப்பிட வந்திருந்த பொழுது ஒரு மூச்சு சண்டை போட்டிருந்தாள். தனது கட்சி கணவனின் பிடிவாதத்தின் முன் தோற்று விட்டதையுணர்ந்து மனம் இடிந்து குமுறி அழுது கொண்டிருந்த செங்கமலத்தின் கண்களும் முகமும் ஒரே செங்கமலமாகச் சிவந்து போயிருந்தன.

''அண்ணி? நான் என்ன செய்வேன்? பச்சைப் பசுங்கிளியை பூனை கையிலே பிடிச்சுக் கொடுக்கப் போகிறார் அவர்'' என்று கூறிவிட்டு, புடவைத் தலைப்பால் முகத்தை மூடிக்கொண்டு குலுங்கக் குலுங்க அழுதாள்.

''ஓங்கி அடிச்சு நீ பேசியிருந்தா அவருக்கு இந்த யோசனை தோணியிருக்குமா? கேட்டதிலிருந்து எனக்கு மனசை என்னமோ பண்ணுது செங்கமலம்'' என்று அதட்டினாள் அபிராமி.



''எத்தனையோ எடுத்துச் சொல்லி முட்டிக் கொண்டேன். ஒரு வாரமா வீட்டிலே எனக்கும் அவருக்கும் இது விஷயமா ஒரே சண்டைதான் அண்ணி! நேத்து ராத்திரிதான் அவர் நிச்சயமா அவனுக்கு கொடுக்கப் போகிறார்னு எனக்குத் தெரிஞ்சது. மரகதம் ராத்திரியிலிருந்து பச்சைத் தண்ணீர் கூட வாயில் விடவில்லை. அந்தப்பாவி கந்தசாமிக்கு இவர் மூவாயிரம் ரூபா கடன் கொடுக்கணுமில்லையா? அதைக் கொடுக்கும்படி ரொம்ப நெருக்கினான். அவனைத் திருப்தி செய்ய வழியில்லாமல் தன் பொண்ணைப் பலி கொடுக்க ஒத்துக்கிட்டார். என் வயிற்றெரிச்சலைச் சொல்லக்கூட மனம் சகிக்கலை'' என்று கண்ணீர் உகுத்தாள் செங்கமலம்.

''ஒரு நிலத்தை வித்து வீட்டை வித்து அவன் கடனை அடைக்கப்படாதா! மரத்திலேயிருந்து விழுந்த வேலாயுதத்திற்கு இடுப்பு எலும்பு முறிஞ்சு போய் இரண்டு காலும் உதவாம நொண்டியாகப் போயிட்டானே! அவனுக்கு கலியாணம் என்ன வச்சிக்கிடக்கு. அவனுக்கு கருமாதி தான் பாக்கி! அவனுக்கு பெண்ணைக் கட்டிக் கொடுக்கிறதைவிட விதவையாயிட்டான்னு வீட்டிலேயே வச்சுக்கிடலாமே'' என்று ஆத்திரத்தில் படபடப்பாகப் பேசிய அபிராமி, தாழ்ந்த குரலில் ''செங்கமலம்! உனக்கு கந்தசாமியைப் பத்தி சங்கதி பூராவும் தெரியாதா?'' என்றாள்.

''நான் வீட்டை விட்டு வாசல்படிகூட மிதிச்சதில்லையே அண்ணி, எனக்கு அவர்களைப் பத்தி என்ன தெரியும்?'' என்று துக்கத்துடன் அரற்றினாள் செங்கமலம்.

''சிலோனிலே கங்காணியாக வேலை பார்த்து நல்ல ரொக்கத்துடனே இங்கே வந்து நிலபுலன் வாங்கிக் காசு

சேர்த்து வச்சிருக்கான். மனுசன் பெரிய போக்கிரி. எமதர்ம ராஜாபோல கன்னங்கரேலுன்னு பிடி மீசையும் கண்ணையும் பார்த்தாலே கதிகலங்கிப் போகும். போன வருஷந்தான் அவன் பெண்டாட்டியும் மூத்த மகன் தங்கதுரையும் செத்துப் போனார்கள், தங்கதுரை செத்த நாலாம்நாள் அவன் பெண்சாதி அந்தப்பெண் செந்தாமரையும் செத்துப்போச்சு. அவளும் காலராவிலே தான் செத்துப்போனான்னு சொல்லி சட்டுபுட்டுனு சவத்தை எடுத்துக் கொளுத்திவிட்டான். அவள் காலராவிலே சாகவில்லை. எருக்கம் பாலைக் குடிச்சுட்டு தற்கொலை பண்ணிக்கொண்டு விட்டா. உனக்குத் தெரியுமா அது?'' என்று கேட்டாள்.

''அப்படியா?'' என்று கண்ணீரைத் துடைத்துக் கொண்டு வியப்புடன் கேட்டாள் செங்கமலம்.

''ஆமாம்! கந்தசாமி சுத்த அயோக்கியன். கன்னக் கோல் வைக்கிற சாத்துகிற இடம். சாத்தாத இடம் என்று அவனுக்கு நியதியே கிடையாது. அந்தப் பெண் செந்தாமரை நம்ப மரகதத்தைப் போல பார்க்க நல்லா இருப்பாள். ரொம்ப நாளாக அவனுக்கு மருமகள் மேலே ஒரு கண். அந்தப் பொண்ணு, பாவம் இல்லாதவள் வீட்டுப் பொண்ணு. மாமனார் தங்கிட்ட பல்லை இளிச்சிப் பேசறான். கொஞ்சம் தவறாக நடந்துகொள்கிறான்னு புருஷனிடம் சொல்லப் பயந்து கொண்டு, தினமும் நரக வேதனையை சகிச்சுக்கொண்டு வாழ்ந்து கொண்டிருந்தாள். மகனைக் கொண்டு கொளுத்திட்டு வீட்டுக்கு வந்தவுடனேயே மருமகளிடம் அந்த அயோக்கியன் கேவலமாக நடந்து கொண்டானாம். மானத்துக்கு அஞ்சி, அந்தப் பெண் வெளியில் சொல்லப் பயந்து கொண்டு, எருக்கம்பாலைக் கரந்து குடிச்சு உயிரைவிட்டு விட்டாள். தெரியுமா உனக்கு?



மரகதத்தைத் தன் மகனுக்குக் கட்டி வச்சுவிட்டு, அந்த அயோக்கியப் பயல் என்ன ஆட்டம் ஆடுவான் தெரியுமா? ஏராளமாகப் பணம் கிடக்கிறதுன்னு ஒரு சாக்கடையிலே உன் புருஷன் காலை வச்சுட்டார். எனக்கு நெஞ்சு கொதிக்குது. இந்தக் கலியாணச் செய்தியைக் கேட்டு'' என்று மூச்சுவிடாது கூறி முடித்தாள் அபிராமி.

''ஐயையோ, இதையெல்லாம் கேக்கையிலேயே என் வயிற்றைக் கலக்குதே அண்ணி! அவருகிட்ட இதை யாரு எடுத்துச் சொல்லுவாங்க!'' என்று ஓலமிட்டாள் செங்கமலம்.

அடுக்களையில் அழுத கன்னமும் சிவந்த முகமுமாக முற்றத்தில் நடந்த சம்பாஷணை முழுவதையும் கேட்டுக் கொண்டு உட்கார்ந்திருந்த மரகதத்தின் உள்ளத்திலே திகில் குடி கொண்டது.

''அத்தை!'' என்று ஆவேசம் பிடித்தவள்போல் கூவிக் கொண்டு ஓடிவந்து பொத்தென அபிராமியம்மாள் மடியில் முகத்தைப் புதைத்துக்கொண்டு விம்மியழுதாள் மரகதம்.

''என் தங்கக் கண்ணு! அழாதேடி! தெய்வம் உன்னைச் சதி செய்கிறது!'' என்று அன்புடன் அவளது முதுகைத் தடவிய அபிராமியம்மாள், தொண்டை கரகரக்கத் தானும் 'ஓ' வென்று அவளுடன் கூட அழுது விட்டாள்.

## 2

வெட்டிச் சாய்த்த மரம்போல் நிம்மதியாகத் தன்னை மறந்து நன்றாக தூங்கிய சிவராஜன் முற்றத்திலே பாத்திரங்கள் உருளும் சப்தம் கேட்டு விழித்துக் கொண்டு எழுந்து உட்கார்ந்தான். ''ஏன் அதுக்குள்ளே எழுந்துட்டே!

சித்த தூங்கியிருக்கிறதுதானே! கிணற்றடியில் போய் பல்லைத் துலக்கி விட்டுவா. காப்பி பலகாரம் எடுத்து வைக்கிறேன்'' என்றாள் முற்றத்து ஓரத்தில் அண்டா ஒன்றை அவசரமாகத் தேய்த்துக் கழுவிக் கொண்டே அபிராமியம்மாள்.

முதல் நாள் இரவு வண்டிக்குத்தான் சிவராஜன் பல வருஷங்களுக்குப் பிறகு முதன் முதலாக தனது சிறிய தாயின் இல்லத்திற்கு விருந்தாளியாக வந்திறங்கினான். அக்கா உயிருடன் இருக்கும் பொழுதுதான் அவனை அபிராமி யம்மாள் பார்த்தாள். அக்கா உயிர் துறந்த பின்பு அவளுக்கு அந்த வீட்டிற்குப் போகும்படியான சந்தர்ப்பம் ஒன்றும் வாய்க்கவில்லை. கடைசி முறையாகத் தான் பார்க்கையில் சின்னஞ்சிறு பையனாக வாயில் விரலை வைத்து சப்பிக் கொண்டு வீதியில் ஓடி விளையாடிக் கொண்டிருந்த சிவராஜன் வாட்ட சாட்டமான யௌவன புருஷனாக வளர்ந்துவிட்டதைக் காண அவளுக்கு ஆச்சர்யமும் மகிழ்வுமாக இருந்தது. ''வா தம்பி! ஊரிலே எல்லோரும் சௌக்கியந்தானே!'' என்று வாயெல்லாம் பல்லாக அக்கா மகனை வரவேற்று உபசரித்தாள் அபிராமி. அன்று முத்துப்பிள்ளை மட்டும் குறுக்கிட்டு அதட்டித் தடுத்திராவிடில் அபிராமியம்மாள் வாய் ஓய்ந்திருக்க மாட்டாள். பல வருஷங்களுக்குத் தனது பால்ய நினைவுகள் யாவும் குமிழியிட்டுப் பெருகி வரும் ஊற்றுப் போல் நெஞ்சிலே பசுமையாகத் தோன்ற ஆரம்பித்து விட்டன. வெகுநேரம் வரை சிவராஜனைத் தூங்கவிடாது பழங்கதைகளைத் தொண தொணவென்று பேசிக் கொண்டிருந்தாள்.

கூடத்து அறையிலே வைத்திருந்த தனது பெட்டியைத் திறந்து சிவராஜன் பல்துலக்க பிரஷையும் பேஸ்டையும்



எடுத்துக் கொண்டான். சலவையிலிருந்து வந்த துவாலையை எடுத்து தோளில் போட்டுக் கொண்டு புழக்கடைக் கிணற்று மேடைக்குச் சென்றான். கொட்டிலில் நின்று கொண்டிருந்த கறுப்புப் பசுமாட்டை வேடிக்கை பார்த்துக் கொண்டு நிதானமாக பல் துலக்கியவாறு நின்று கொண்டிருந்தான் சிவராஜன். அருகிலே காலடிச் சப்தம் கேட்பதையுணர்ந்து வெடுக்கெனத் திரும்பிப் பார்த்தான். விவரிக்க இயலாத ஒரு ஆனந்தத்தில் அவனது இருதயம் வேகமாகத் துடித்தது. கண்கள் ஆச்சர்யத்தில் அகன்றன. இரு வீட்டையும் பிரித்து நின்ற இடைச்சுவரின் இடிந்த இடுக்கு வழியே அடுத்த வீட்டிலிருந்து வேகமாக வந்து கொண்டிருந்த அந்த யுவதி சட்டென்று பின்வாங்கியபடி இடிந்த சுவரை ஆதாரமாகப் பிடித்துக் கொண்டு மருண்ட மானைப்போல் அவனைக் கண்டு விழித்தாள். அழகிய யௌவனப் பெண்களை சிவராஜன் அதுவரை பார்த்ததில்லை என்று சொல்வதற்கில்லை. அவன் வேலை செய்யுமிடத்தில் அவன் யௌவனமும் புதுமையும் நிறைந்த இளம் பெண்கள் பலரைக் கண்டிருக்கிறான். ஓரிருவருடன் அவன் நெருங்கிப் பேசிப் பழகியுமிருக்கிறான். இருந்த போதிலும் அன்று காலை எதேச்சையாகத் தன் எதிரே வந்து நின்ற அந்த இளம் பெண்ணைக் கண்டு சிவராஜன் தன்னை மறந்து சொக்கிப் போனான்!

மரகதத்தின் நெஞ்சு வெடித்துவிடும்போல துரித மாகத் துடித்தது! குப்பென்று முகம் குங்குமம் போல் சிவந்து விட்டது. நெற்றியில் அரும்பிய வியர்வையைத் துடைத்துக் கொண்டு அபிராமியம்மாள் வீட்டுக் கிணற்றடியிலே நின்று கொண்டிருந்த அந்த கட்டழகனை பிரமிப்புடன் பார்த்தாள். ''மரகதம்!'' என்று இடியோசை

போன்று உள்ளிருந்து எழுந்த குரலைக் கேட்டு திடுக்கிட்டுப் போன அவள், சிட்டுக்குருவி போல சரக்கென்று உள்ளே ஓடி மறைந்து விட்டாள்.

பகல் போஜனத்திற்குப் பிறகு முத்துப்பிள்ளை கடைக்கு புறப்பட்டுச் சென்று விட்டார். ஒரு கூடை உளுத்தம் பருப்பை எடுத்துக்கொண்டு அறைக்க உட்கார்ந்து விட்டாள் அபிராமியம்மாள். கூடத்தில் கிடந்த கயிற்றுக் கட்டிலின் மீது ஓய்வாகப் படுத்திருந்தான் சிவராஜன். மௌனமாக எந்த வேலையையும் செய்வது என்பது அவளால் ஆகாத காரியம். ஆகவே அவள் பேசத் துவங்கி விட்டாள்.

''என்ன தம்பி! நீ என்ன வேலை செய்து கொண்டிருக்கேன்னு சொன்னே! மறந்து போச்சுதே!'' என்று ஆரம்பித்த அவள், ஓயாது என்ன வேலை, எவ்வளவு சம்பாதிக்கிறான். எத்தனை சேர்த்து வைத்திருக்கிறான் என்று எல்லா விவரங்களையும் ஒன்று விடாது கேட்டுத் தெரிந்துகொண்டாள்.

''என்னவோ தம்பி! நல்லாத்தான் சம்பாதிக்கிறாய். புத்திசாலித்தனமாகத் தானிருக்கிறாய். ஆனால் இன்னும் கல்யாணம் கட்டிக்காம தனியா நீ இருக்கிறதுதான் எனக்குப் பிடிக்கலை. வயது கொஞ்சமாகவா ஆகிறது? அந்தக் காலமாக இருந்தால் இத்தனை வருஷத்துக்கு உனக்கு பத்து வயசிலே ஒரு பிள்ளை இருந்திருப்பான்'' என்று முத்தாய்ப்பாய்ச் சொன்னாள் அபிராமி.

''அப்படி என்ன வயசாயிடிச்சு? இருபத்தைந்து வயது தானே எனக்கு நடக்குது. இந்தக் காலத்திலே ஒவ்வொருத்தன் நாற்பது வருஷத்துக்கு மேலேதான் கலியாணம் செய்து கொள்கிறான். நான்கூட நல்லாப் பணம் சேர்த்தபிறகு நிதானமாக ஒரு நாற்பது வயதுக்குத்தான் கல்யாணம்



கட்டிக்கப் போறேன். இப்போது கட்டிக்கொண்டால் ரொம்ப உபத்திரவமாகி விடும்'' என்று கேலியாகக் கூறி விட்டுச் சிரித்தான். ஆனால் கல்யாணம் என்ற பேச்சு அவனுக்கு ஒருவித ஆனந்தத்தை ஊட்டியது. ஏனோ அது சமயம் அவனுக்கு காலையில் தான் கண்ட அந்த அண்டை வீட்டுப் பெண்ணின் முகம் நினைவுக்கு வந்தது.

பொழுது சாயும் வேளையில் அபிராமியம்மாள் ஒரு கரண்டி உப்பு கடனாக வாங்கி வர அடுத்த வீட்டிற்கு வந்தாள். அப்படியே செங்கமலத்துடன் வம்புபேச உட்கார்ந்து விட்டாள். புகையும் அடுப்பை ஊதிக் கொண்டிருந்த மரகதம் கை வேலையைப் போட்டுவிட்டு தாயும் அண்டை வீட்டம்மாளும் சுவாரஸ்யமாகப் பேசிக்கொண்டிருந்த அந்தச் சம்பாஷணையை முற்றும் கேட்டாள். அபிராமியம்மாளின் அன்றைய வம்புப் பேச்சு முழுவதும் அவளது அக்காள் மகனைப் பற்றியதாக இருந்தது. ''கெட்டிக்காரன். மாசம் இருநூற்றுக்கு மேலே சம்பாதிக்கிறான். இன்னும் கலியாணம் செய்து கொள்ளவில்லை. ரொம்ப பிடிவாதக்காரன். சின்ன வயசிலே அம்மா செத்துவிட்டாள். இரண்டாங் கலியாணம் செய்து கொண்ட அப்பன் அவனை சரியாக நடத்தலைன்னு அவனுக்குக் கோபம். அதனாலே கலியாண விஷயத்திலே அவங்க பேச்சு ஒண்ணும் அவன் காதிலே ஏறாது. மனசுக்குப் புடிச்சிருந்தாப் போதும். ஏழையோ, பாழையோ, எவளானாலும் சரி. கட்டிக்கொண்டு விடுவானாம்'' என்று அபிராமியம்மாள் அக்கா மகனின் பிரதாபத்தைப் பற்றி அளந்து கொண்டிருந்தாள். கொட்டிலில் கட்டியிருந்த வெள்ளைப் பசுக்கன்றுக்குட்டி கத்திக் கொண்டிருந்தது. அடுப்பில் கொதித்துக் கொண்டிருந்த குழம்பைக் கிளறிவிட்டு மரகதம் வெளியே வந்தாள். செங்கமலம் சம்பாஷணை சுவாரஸ்யத்தில் அவளைக் கவனிக்கவில்லை. ரேழியில் கிடந்த

அகத்திக்கீரைக் கட்டைத் தூக்கிக் கொண்டு புழக்கடைக்கு வந்த மரகதம், திடுக்கிட்டுப் போய் கையிலிருந்து கீரைக் கட்டைக் கீழே போட்டு விட்டாள். கிணற்றடியில் முகத்தை கழுவிக் கொள்ளச் சோப்புப் பெட்டியும் துவாலையும் சகிதமாக புழக்கடைக்கு வந்திருந்த சிவராஜன், தனது எதிர்பாராத அதிர்ஷ்டத்தைக் கண்டு வியப்படைந்தவன் போல் அவளை வைத்த விழி வாங்காது பார்த்தபடி நின்று கொண்டிருந்தான்.

சீரகத்தைப் பொரித்து எடுத்துக் கொண்டு கன்றுக் குட்டி அருகில் சென்ற மரகதத்தின் நெஞ்சு படபடத்தது. கால்கள் தடுமாறின. விவரிக்க இயலாத இன்பத்தைத் தரும் அந்த ஆனந்த உணர்ச்சியில், அவளது வாய் உலர்ந்து நெஞ்சு வரண்டு போயிற்று. சுற்றுமுற்றும் பார்த்தான் சிவராஜன். ஆவலைக் கட்டுப்படுத்த முடியாதவன்போல், சுவரின் ஓரமாக வந்து,''சித்தி உங்கள் வீட்டில் இன்னுமா பேசிக் கொண்டிருக்கிறாள்?'' என்று கேட்டான். திடுக்கிட்டு அவனை நிமிர்ந்து பார்த்த மரகதம் மெய்சிலிர்த்துப் போனாள். ''முன்பின் தெரியாத அந்த வாலிபனுக்கு எத்தனை துணிச்சல்! வலியப் பேச வந்துவிட்டானே' எனத் தனக்குள்ளே எண்ணி ஆச்சர்ய மடைந்த அவள், வெடுக்கென்று பூனையைக் கண்டு மிரண்டு ஓடும் குழந்தையைப்போல் உள்ளே ஓடி விட்டாள்.

அன்று இரவு சிவராஜனுக்கு தூக்கமே வரவில்லை. படுக்கப் போகுமுன் சித்தி கூறிய அந்த சமாசாரத் தைக் கேள்விப்பட்டதிலிருந்து அவன் மனம் ஒரு காரணமுமின்றி ஆத்திரத்தில் துடித்தது. 'பணத்திற்காகப் பொற்சிலை போன்ற அழகான பெண்ணை மாணிக்கம் பிள்ளை ஒரு நொண்டிப் பயலுக்குக் கட்டிக் கொடுக்கப் போகிறாராமே! என்ன அக்கிரமம்! என்று அபிராமியம்மாள்



கூறிய கதைகளைக் கேட்டு மனம் சோர்ந்து போனான் சிவராஜன். மரகதத்தைப் போன்ற அழகான இளம் பெண்களை மணந்து கொள்ள சிவராஜனைப் போன்ற வாலிபர்கள் பலர் இருக்கையில் மாணிக்கம்பிள்ளைக்கு இப்படியா புத்தி போக வேண்டும்! கண்ணால் ஒரு தடவை கூடத் தரிசிக்காத அந்த மாணிக்கம்பிள்ளை மீது அவனுக்கு கோபம் குமுறிக் கொண்டு வந்தது.

மறுநாட் காலை மாணிக்கம்பிள்ளையின் வீடு இரண்டு பட்டுக்கொண்டிருந்தது. நீங்க ஒவ்வொருத்தரும் உங்களை என்னான்னு நினைச்சுகிட்டீங்க?'' என்று வீடு இடிந்து விடும்போல் மாணிக்கம் பிள்ளை கூச்சலிட்டார்.

''ஊரைக் கூட்டறதுக்கு முந்தி கடைக்குப் போயிடுங்க. உங்களுக்குப் புண்ணியமாயிருக்கும் பிறகு அவளுக்கு நான், நல்ல வார்த்தை சொல்லி சரிப்படுத்துகிறேன்'' என்று செங்கமலம் தாழ்ந்த குரலில் வருத்தத்துடன் சொன்னாள். தாழ்வாரத்துத் தூணின் மீது சாய்ந்து கொண்டு நின்று கொண்டிருந்த மரகதம் விம்மி விம்மி அழுது கொண்டிருந்தாள். காலையில் விடிந்ததும் விடியாதது மாகக் கோடி வீட்டு குப்பம்மாள் இரண்டு வாழைப்பூக்களை எடுத்துக்கொண்டு வம்பு கிரகிக்கும் நிமித்தம் அங்கு வந்தாள். மாணிக்கம்பிள்ளை புழக் கடையில் ஏதோ வேலையாக இருந்ததனால் தைரியத்துடன் அவள் உள்ளே வந்து மரகதத்திடம் பேச உட்கார்ந்து விட்டாள். அவள் கூறிய சங்கதிகளைக் கேட்ட மரகதம் வெட்கத்தினால் உடல் குன்றிப் போனாள். ஆத்திரமும் கோபமும் அழுகையும் ஒருங்கே தாளாது அவள் விம்மிக் கொண்டு உள்ளே சென்று விட்டாள். மரகதம் வாயாடி, திமிர் பிடித்தவள், பிடிவாதக்காரி என்று ஊரிலே பிரசித்தி பெற்றிருந்தாள். வாயாடி மரகதத்திற்கு

ஒரு நொண்டிக் கணவன் வந்து வாய்த்தது குறித்து அவளைக் கண்டு பொறாமை கொண்டிருந்த ஊர்ப் பெண்கள் சிலர் மிகவும் கேவலமாகப் பேசிச் சிரித்தனர். மரகதத்தின் கர்வத்திற்கும் திமிருக்கும் இதுவும் வேண்டும், இன்னமும் வேண்டுமென்று அவர்கள் கேலி செய்து கொக்கரித்தனர். குப்பம்மாள் சொன்ன செய்தியைக் கேட்டு மரகதத்திற்கு அவமானம் தாளமுடியவில்லை. பச்சிளங் குழந்தைப் பருவத்திலேயே நினைத்ததை அடைய வேண்டுமென்று பிடிவாதம் செய்து வெற்றி பெறும் வழக்கமுடையவள். பெற்றோருக்கு ஒரே பெண். அழகி, தனக்கு ஊரில் யாரும் நிகரில்லை என்ற கர்வத்தில் அவள் தன்னொத்த பெண்கள் எல்லோரையும் துச்சமாகத் தூக்கியெறிந்து வெடுக்கென்று தான் பேசுவாள். மரகதத்தின் கர்வத் திற்கும், அகங்காரத் திற்கும் உண்மையிலேயே ஒரு வீழ்ச்சிதான் ஏற்பட்டிருக் கிறது. குழந்தைப் பருவத்தில் விருப்பங்கொண்ட பொம்மையை வாங்கிக் கொடுத்த மாணிக்கம்பிள்ளை, அவளது அழுகைக்கும் பிடிவாதத் திற்கும் பயந்து அவள் விருப்பத்திற்கெல்லாம் இடங் கொடுக்கும் சுபாவமுள்ள மாணிக்கம்பிள்ளை இப்பொழுது முற்றிலும் மனம் மாறியிருந்தார். கலியாண விஷயத்தில் மகளது கண்ணீரையும், கூச்சலையும் கண்டு அவர் அசைந்து கொடுக்கவில்லை. காலையில் கிணற்று மேடையருகில் அந்த யௌவன புருஷனைச் சந்தித்ததி லிருந்து ஒவ்வொரு நிமிஷமும் அவள் தனக்கு வரப் போகும் பயங்கர வாழ்க்கையை எண்ணி மனம் புண்ணாகிக் கொண்டிருந்தாள். குப்பம்மாள் கூறிய சங்கதி அவளது மனப்புண்ணை அதிகரிக்கச் செய்யவே அவள் அழுது விட்டாள்.



பெண்ணுக்கு வேண்டிய சேலைகளை அவளே பார்த்து எடுத்துக்கொள்வதே உசிதம் என்று கந்தசாமிப் பிள்ளை முதல் நாள் சாயங்காலம் மாணிக்கத்துடன் ஆரணிப் பட்டுச் சேலை மூட்டையொன்றை அவனிடம் கொடுத்து அனுப்பியிருந்தார். அவரது தாராளத்தைக் கண்டு அதிசய மடைந்த மாணிக்கம்பிள்ளை, மூட்டையை வீட்டிற்குக் கொண்டு வந்திருந்தார்.

கடைக்குப் புறப்படும்முன் மூட்டையைப் பிரித்துக் கூடத்தில் உட்கார்ந்த மாணிக்கம் பிள்ளை, "மரகதம், இங்கே வா! இதோ பார். உனக்கு இதிலே எந்தச் சேலை பிடித்திருக்கிறதுன்னு பார்த்து எடுத்துக்கோ!" என்று அழைத்தார்.

துக்கத்தில் குமுறிக்கொண்டிருந்த மரகதம் ஆத்திரத் துடன் வெளியே வந்தாள். 'வெள்ளம் தலைக்குமேல் போகிறது. 'சாண் போனால் என்ன, முழம் போனால் என்ன' என்று அவளுக்கு அதிகத் துணிச்சல் ஏற்பட்டது. "எனக்கு ஒரு எழவும் வேண்டாம்! இந்தச் சேலையை எடுத்து என் பிணத்துக்குப் போடுங்க" என்று துக்கம் தொண்டை யடைக்க கண்களில் நீர் பொங்கக் கத்தினாள்.

தாங்க முடியாத கோபத்துடன் "என்ன சொன்னே?" என்று கர்ஜித்தார் மாணிக்கம்பிள்ளை.

"ஆமாம்! என் பிணத்துக்குப் போடுங்கோன்னு சொன்னேன்! கந்தசாமி மகனைக் கட்டிக்கொண்ட பிறகு கூட நான் உசிரைவச்சுக்கிட்டு இருக்கப்போறேன்னு நினைச்சுட்டீங்களா?" என்று ஆத்திரத்துடன் எதிர்த்துக் கத்தினாள்.

''என்ன சொன்னே!'' என்று கூவிக்கொண்டு ஆக்ரோஷமாகக் கையை ஓங்கினார் மாணிக்கம்பிள்ளை. 'இந்தாங்க சித்த நிறுத்துங்க, அவகிட்டபோயி இப்ப என்ன பேச்சு வச்சிருக்கு'' என்று சமாதானப்படுத்தும் தோரணையில் செங்கமலம் பதறிக்கொண்டு குறுக்கிட்டாள். ''அடுத்த வெள்ளிக்கிழமை கலியாணமின்னு தேதி வைத்தாச்சு. காரியத்தை சட்டுபுட்டுனு நடத்தணும்னு கந்தசாமி அவசரப்படுகிறார். கொட்டாரப் பந்தல்போட ஏற்பட்டாயிருக்கு. மேளக்காரன், ஊர்வலம், விருந்து, நகை நட்டு, துணிமணி எல்லாத்துக்கும் துரிதமா ஏற்பாடு செய்து கொண்டு வருகிறார் அந்த மனுஷன். இந்தப் பொண்ணு இங்கே ரொம்பத் துள்ளுதே'' என்று கூச்சலிட்ட மாணிக்கம்பிள்ளை கோபத்துடன் எழுந்திருந்தார். ''நீங்க கடைக்குப் போங்க. நான் பிறகு புத்தி சொல்லி வேண்டியதைப் பொறுக்கி எடுத்து வைக்கச் சொல்றேன். பகலுக்குக் கடையிலிருந்து யாராவது ஆளு அனுப்புங்க மீதியை கொடுத்தனுப்பி விடுகிறேன்'' என்று சமாதானம் செய்த பிறகு, மாணிக்கம்பிள்ளை மகளை முறைத்துப் பார்த்துவிட்டு வெளியே சென்றார்.

அன்று பகல் சிவராஜனுக்கு போஜனத்தை உட்கொள்ளவே மனம் வரவில்லை. ஒரு கிண்ணம் நெய் கடனாக வாங்கி வர அண்டை வீட்டுக்குசென்று திரும்பி வந்த அபிராமியம்மாள் கூறிய விஷயத்தைக் கேள்விப் பட்டதிலிருந்து, அவன் மனம் சஞ்சலத்தில் தவித்தது. 'பாவம்! அந்த பெண் அந்த நொண்டிப் பயலை மணந்து கொள்ள அவளுக்குச் சிறிதும் விருப்பமில்லை. அவளது மனவிருப்பு வெறுப்பைக் கவனிக்காது மாணிக்கம்பிள்ளை ஒரே பிடிவாதமாக அவளது வாழ்நாட்களையே பாழடிக்க முன்வந்து விட்டார்! சே! சே! என்ன அக்கிரமம்?'' என்று



தனக்குள்ளே எண்ணிப் பதைபதைத்த சிவராஜனின் இரத்தம் கொதித்தது. சமூகத்திலே இப்படி அநேக அநியாயங்கள் நடந்துகொண்டிருக்கையில், அவனைப் போன்ற பரந்த நோக்கம் கொண்ட வாலிபர்கள், அதைப் பார்த்துக்கொண்டு வாளாவிருப்பதா?

இருட்டியதும் விளக்கைப் பொருத்தி மாடத்தில் வைத்த செங்கமலம் பானைக்குள் கையைப் போட்டுத் துழாவினாள். பானை காலியாக இருந்தது. குழம்பிற்கு வீட்டில் ஒரு மிளகாய்வற்றல்கூட இல்லையென்று உணர்ந்த அவள், ''ஏய் மரகதம் ஓடி வா. உன் அத்தையிடம் நான் கேட்டதாக ஒரு கை மிளகாய் வாங்கியா?'' என்று உத்தரவிட்டபடி அடுப்பை மூட்டத் துவங்கினாள்.

பகல் முழுவதும் தாயுடன் ஒரு மூச்சு சண்டை போட்டு அலுத்திருந்த மரகதம், கோபத்துடன் தூணின் மீது சாய்ந்து கொண்டு உட்கார்ந்திருந்தாள். ''அடி, உன்னைத் தாண்டி மரகதம்! சீக்கிரம் போய் வாங்கியா. அடுப்பு காயுது'' என்று செங்கமலம் அதட்டினாள். பிறகு துள்ளிக்கொண்டு மரகதம் எழுந்து புழக்கடைக்கு ஓடினாள். அண்டை வீட்டிற்குப் போவதில் என்றுமில்லாத ஒரு உற்சாகம் திடீரென்று அவளுக்கு அன்று ஏற்பட்டது.

அபிராமியம்மாள் வீட்டுக் கூடத்தில் பிரகாசமாக ஒரு ஹரிக்கேன் விளக்கு எரிந்து கொண்டிருந்தது. விளக்கின் அருகில் ஏதோ புத்தகமொன்றைப் புரட்டிக் கொண்டு உட்கார்ந்திருந்த சிவராஜன், காலடி ஓசை கேட்டு வியப்புடன் நிமிர்ந்து பார்த்தான். அது சமயம் ஏற்பட்ட ஆனந்தத்தில் புத்தகத்தை சடக்கென்று மூடிவிட்டு எழுந்திருந்தான்.

''அத்தை!'' என்று மெல்லிய குரலில் கூப்பிட்ட மரகதத்திற்கு நெஞ்சு திக் திக்கென்று அடித்துக் கொண்டது.

உள்ளே அவனைத் தாண்டிக்கொண்டு வரவும் அவளுக்குப் பயமாக இருந்தது. திரும்பிப் போகவும் மனம் வரவில்லை. குழப்பத்துடன் அவனை நிமிர்ந்து பார்க்கத் துணிவின்றி தலையை மெல்லத் தாழ்த்திக் கொண்டு நின்றாள்.

"சித்தி கோயிலுக்குப் போயிருக்கா, வரச் சிறிது நேரம் ஆகும்" என்றான் அவன்.

"ஒண்ணுமில்லே, கொஞ்சம் மிளகாய் வாங்கிட்டு" என்று கூறிய மரகதம், மெல்ல அவனை நிமிர்ந்து பார்த்தாள். அவளுக்கு தூக்கிவாரிப் போட்டது. வெள்ளை வெளே ரென்றிருந்த தனது பற்கள் சிறிது வெளியே தெரிய அவன் அவளைப் பார்த்து மெல்லச் சிரித்தான்.

"நீ இந்த வீட்டிலே வளர்ந்த பெண் என்று சித்தி உன்னைப் பற்றி சொல்லியிருக்கா. மிளகாய் எங்கே வைத்திருக்கான்னு உனக்குத்தான் விவரம் தெரியுமே. உள்ளே வந்து எடுத்துக் கொண்டு போகலாமே" என்று கூறியபடி அவன் மெல்ல நகைத்தான்.

சங்கோசமும் வெட்கமும் திடீரென்று மரகதத்தை விட்டு ஓடிச்சென்றன. சிவராஜனை அலட்சியமாக ஒரு முறை ஏறிட்டுப் பார்த்துவிட்டு, "என்ன பழக்க மிருந்தாலும் நான் அத்தையைக் கேட்காமல் ஒன்றும் எடுக்க மாட்டேன். அப்படிச் செய்தால் திருடியதுபோல் ஆகும்" என்றாள் மரகதம்.

"எனக்கு ஒரு பொருள் வேண்டுமென்றால் நான் உன்னைப் போல காத்திருக்கமாட்டேன். திருடிக் கொண்டு விடுவேன்" என்றான் சிவராஜன்.

அவனது பேச்சு அவளது குழப்பத்தை அதிகரித்தது. என்ன பதில் சொல்வதென்று அவள் விழித்தாள்.



"உதாரணமாக எனக்குக் காலையிலிருந்து ஒரு யோசனை ஏற்பட்டிருக்கிறது. நேற்றுக் காலையிலேயிருந்து என் மனசு ஒரு பெண் மேல் லயித்துவிட்டது. அவள் வேறு ஒருவனுக்குச் சொந்தமாகப் போகிறாள் என்ற சங்கதியும் எனக்குத் தெரியும். ஆனால் நான் முந்திக் கொண்டு அவளை திருடிக்கொண்டு போகப் போகிறேன், நிச்சயம்" என்று பரிகாசமாகச் சொன்னான் சிவராஜன்.

திகைப்படைந்த மரகதம் சிவராஜனின் முகத்தை நிமிர்ந்து மறுமுறை பார்த்தாள். அவனது கண்களிலே மிருந்த பரிவும், உதட்டிலே தவழ்ந்து கொண்டிருந்த அந்தப் புன்னகையும் அவள் மனதை என்னவோ செய்தன. "மரகதம், நான் ஒன்று செய்கிறேன்" என்று தாழ்ந்த குரலில் கூறிய சிவராஜனைத் திரும்பிப் பார்க்க பயந்தவள் போல் தலைதெறிக்க அங்கிருந்து ஓடியே போய் விட்டாள் மரகதம்.

கலியாண நாள் நெருங்கிக் கொண்டிருந்தது. ஆசாரியிடம் செய்யக் கொடுத்திருந்த மாம்பிஞ்சு அட்டிகை கைக்கு வரவில்லை. 'முகூர்த்த சமயத்திலே கூட கொடுக்க மாட்டான் போலிருக்குதே! பெண்பிள்ளை விவகாரம் இப்படித்தான் என்று கணவர் கூச்சலிடுவாரே' என அஞ்சிய செங்கமலம் நேரே சென்று விசாரித்து நகையை வாங்கி வரக் கடைத்தெருவுக்குச் செல்லத் தீர்மானித்தாள். மாணிக்கம்பிள்ளை வெளியே சென்றதும், அவசரமாகச் சமையலை முடித்துக் கொண்டு முற்றத்தில் வந்து "அண்ணி! கொஞ்சம் கடைத்தெருவரை கூட வரீங்களா?" என்று இரைந்து கேட்டாள். அபிராமியம்மாள் வேலைகளை முடித்துவிட்டு விச்ராந்தியாக உட்கார்ந்திருந்தாள். "தம்பி, இரு வாசல் பூட்டு சாவியைத் தருகிறேன். நான் இந்த கடைத்தெரு வரை போய்வர வேண்டியிருக்கிறது. நீ அதற்கு

முன்னே திரும்பி விட்டாக்க இந்தச் சாவியைப் போட்டுத் திறந்து உள்ளே வந்துக்கலாம்'' என்று கூறிவிட்டு சாவிக் கொத்திலிருந்த ஒரு சாவியைப் பிரித்துக் கொடுத்தாள்.

அபிராமியும் செங்கமலமும் கடைதெருவுக்குக் கிளம்பினார்கள். மரகதத்திற்கு தாயாரின் மீது மிகவும் கோபம். தந்தையிடம் பிடிவாதமாக எடுத்துக்கூறி, இந்தக் கலியாணத்தைத் தடுக்க முயலாது அவரது இஷ்டத்திற்கு ஒத்துக்கொண்டு தாயும் தன்னை ஒரு படுகுழியில் மனமுவந்து தள்ள முன் வந்து விட்டாள் என்று அவளுக்கு ஆத்திரம் குமுறிக்கொண்டு வந்தது.''எனக்கு மாம்பிஞ்சு அட்டிகையும் வேண்டாம், ஒரு இழவும் வேண்டாம். அதை வாங்கி வர நீ போக வேண்டாம்!'' என்று இரைந்து உச்சஸ்தாயியில் அவள் ஆக்ரோஷத்துடன் கத்தினாள்.

''நீங்க சொல்லுங்க அண்ணி இந்தப் பொண்ணுக்குப் புத்தி! அந்தக் காலத்திலே நாமெல்லாம் கலியாணத்தை பத்தி பெத்தவங்களுக்கு எதிரே ஒரு வார்த்தை பேசியிருப்பமா?'' என்று சலித்துக் கொண்டாள் செங்கமலம்.

அபிராமியம்மாள் பதிலுக்கு ஒரு பெருமூச்செறிந்து விட்டு, ''மரகதம், கண்ணைத் துடைச்சுக்கோ! இனி மேலே நீ என்ன சொல்லித்தான் உங்கப்பா கேட்கப் போகிறாரா? நம்ம விதி அவ்வளவுதான். மனசு உறுதியாக இரு. எல்லாம் சரியாயிவிடும். நல்ல காரியமாகப் புறப்படுகிறோம். இப்படி வம்பு செய்து அழுது கொண்டு நிக்காதே'' என்று புத்தி கூறிக்கொண்டு வாசல்பக்கம் நடையைக் கட்டினாள். ''சீக்கிரம் வந்துவிடுகிறோம். கதவைத் தாளிட்டுக்கொண்டு பத்திரமாயிரு!'' என்று உபதேசித்துவிட்டு, விட்டுப்போக மனமற்றவள்போல் செங்கமலம் தயங்கிக்கொண்டு கடைத்தெருவுக்குச் சென்றாள். தனது ஆத்திரத்தை



யெல்லாம் கதவின்மேல் காட்டுகிறவள்போல், ''படார்'' என்று அதைத் தாளிட்டுக் கொண்டு உள்ளே வந்த மரகதத்தின் இதயம் துக்கத்தில் சுக்கல்சுக்கலாக வெடித்தது. நிமிஷம் மணியாகி வெகுவிரைவில் நாட்களாக மாறி கலியாண தினம் என்ற அந்தப் பயங்கரமான நாள் அவளை விழுங்க வாயைப்பிளந்துகொண்டு வேகமாக வருவதைப் போன்று அவளுக்கு ஒரு கிலி ஏற்படவே, ''வாழ்க்கையின் முடிவு இதுதானா? இந்தப் படுகுழியிலிருந்து தப்ப மார்க்க மில்லையா?'' என்று துக்கத்தில் குமுறிய அவள் மனந்தாளாமல் ஓவென்று அழுதுகொண்டு புழக்கடைக் கிணற்றடியில் வந்து உட்கார்ந்து விட்டாள்.

கையால் முகத்தை மூடிக்கொண்டு விம்மி வெகுநேரம் அழுது கொண்டிருந்த மரகதம், சமீபத்தில் காலடி சப்தம் கேட்பதை உணர்ந்து திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தாள். அடுத்த வீட்டு சிவராஜன் அவள் அருகில் நின்று கொண்டிருந்தான்!

''மரகதம்! ஏன் இப்படி அழுது உயிரை மாய்த்துக் கொள்கிறாய்?'' என்று இரக்கம் மிகுந்த கனிந்த குரலில் வினவினான்.

கண்ணீரைத் துடைத்துக்கொண்டு விசுக்கென எழுந்து நின்ற மரகதம் அவனைத் திகைப்புடன் விழித்துப் பார்த்தாள். பதில் கூறுமுன் அவளது கை கால்கள் பயத்தால் பதறின. 'சாவைத் தவிர மார்க்கம் ஒன்றுமில்லை' என்று திணறினாள் பதிலுக்கு.

''இரண்டு நாளாக நானும் உன்னிடம் சொல்ல வேண்டுமென்று துடித்துக்கொண்டிருந்தேன். சந்தர்ப்பமே இல்லாமல் இருந்தது. சித்தியும், உன் தாயாரும் கடைக்குப் போவது தெரிந்தது. வெளியே போகக் கிளம்பிய நான்

சந்தர்ப்பத்தை விட மனமில்லாமல் திரும்பி வந்தேன். நான் ஒரு யோசனை கூறுகிறேன் கேட்கிறாயா? உன்னைப் பார்த்ததிலிருந்து என்மனம் ஒரு நிலையில் இல்லை. உன்னை அந்த நொண்டிப் பயலுக்கு கட்டிக் கொடுப்பதைக் கேட்கக்கூட என்னால் சகிக்க முடியலை. மரகதம் என்னை நீ கல்யாணம் செய்து கொள்வாயா?'' என்று உணர்ச்சியுடன் கேட்டான் சிவராஜன்.

மரகதம் வியப்புடன் அவனை உற்றுப் பார்த்தாள். அவளது மூளையில் பளிச்சென்று ஒரு யோசனை மின்னலைப் போல் உதயமாகவே அவளது உள்ளத்தில் கொந்தளித்துக் கொண்டிருந்த துயரம் வினாடிப்பொழுதில் மறைந்து அதில் துணிச்சல் குடிகொண்டது. ''எப்படி முடியும்?'' என்றாள்.

''மனம் வைத்தால் மார்க்கமில்லையா? நீ மட்டும் நான் சொல்வதற்குச் சம்மதித்தால் உனக்கும் விடுதலை. எனக்கும் சுவர்க்க வாழ்க்கை. என்ன சொல்கிறாய்? நான் சொல்வதைக் கேள். சரி என்று நீ சம்மதித்து விட்டால் உன்னை யாருங்காணாத இடத்திற்கு அழைத்துக் கொண்டு சென்று விடுகிறேன்'' என்றான் பரபரப்பாக. மரகதம் பதில் கூறாது வாளா இருப்பதைக் கண்டு பொறுமையற்ற சிவராஜன். ''சட்டென்று சரி என்று ஒத்துக்கொள். யாரும் வருவதற்குள் நான் போய் விடவேண்டும். ஊரார் பலவிதமாகப் பேசுவார்கள் என்று தானே அஞ்சுகிறாய், பயப்படாதே'' என்றான். மரகதம் ஒரு கணம் குழப்பத்துடன் விழித்துக் கொண்டு நின்றாள். முடிவில் அவளையும் மீறி அவளது வாயினின்று ''சரி'' என்ற சொல் எழுந்தது.

''நான் வேண்டிய ஏற்பாடுகள் செய்துவிட்டு உனக்கு அதைப் பற்றி ஒரு கடிதத்தில் எழுதித் தெரிவிக்கிறேன். இன்று



சாயங்காலம் இந்த இடிந்த சுவரருகில் ஒரு காகிதப் பொட்டலம் கிடக்கும் அதை எடுத்து படித்துப் பார். விவரம் தெரியும்'' என்று கூறிவிட்டு சிவராஜன் வேகமாக அங்கிருந்து உள்ளே சென்று வாயில் கதவைத் திறந்து கொண்டு, வெளியே முன்போல் பூட்டி விட்டுச் சென்றான்.

முகத்தைத் துடைத்துக்கொண்டு உள்ளே வந்து தாழ்வாரத்துத் தூணில் சாய்ந்துகொண்ட மரகதம் நகத்தைக் கடித்துக்கொண்டு, யோசனையில் மூழ்கி விட்டாள்.

அன்று சாயங்காலம் தண்ணீர் எடுக்கக் குடத்தை எடுத்துக்கொண்டு மரகதம் புழக்கடைக்குச் சென்றாள். சூரியன் மறைந்து இருள் வேகமாகப் பரவிக்கொண்டு வரும் அந்த நேரத்தில், அவளது கூரிய கண்களுக்கு, சுவர் ஓரமாகக் கிடந்த காகிதப் பொட்டலம் நன்கு புலப்பட்டது. யாரும் காணாத சமயம் சட்டென விரைந்து அதை எடுத்து இடுப்பில் சொருகிக்கொண்டள் அவள். அன்று இரவு எல்லோரும் போஜனம் முடிந்து தூங்கச் சென்றபின், நிதானமாகப் பொட்டலத்தைப் பிரித்து அதனுள் கிடந்த சிறிய கற்களைத் தூர எறிந்துவிட்டு கூடத்திலே இருந்த மங்கிய விடிவிளக்கு ஒளியில் மரகதம் அதைப் படித்தாள். ''எல்லா ஏற்பாடும் செய்து விட்டேன். நாளை இரவு பன்னிரெண்டு மணிக்குப் புழக்கடைச் சுவருக்கு அருகில் வந்து காத்துக்கொண்டிரு'' என்று எழுதியிருந்ததைக் கண்டாள். காரணமற்றதொரு பயத்திலும், இந்தக் கல்யாணத்திலிருந்து தப்பிச் செல்லுகிறோம் என்ற மகிழ்ச்சியிலும், அவளுக்கு அன்றிரவு தூக்கமே வரவில்லை.

மறுநாள் முழுவதும் மரகதம் மிகவும் அமைதியாகக் காணப்பட்டாள். கலியாணத்திற்கு இன்னும் நான்கே நாட்கள்

தானிருந்தன. இனிமேல் புரட்சி செய்து பயன் இல்லை என்று சமாதானமடைந்துதான் மகள் அமைதியாக இருக்கிறாள் என்று எண்ணி, செங்கமலம் நிம்மதியடைந்தாள். கலியாணத்திற்கு வேண்டிய பலகாரங்களைத் தயாரிப்பதில், அவளும் அபிராமியும் அன்று முழுவதும் மும்முரமாகப் பலவித வேலைகளில் ஈடுபட்டிருந்தனர். நாலைந்து நாட்களாக கலியாண முஸ்தீபுகளில் அலைந்து திரிந்து கொண்டிருந்த மாணிக்கம்பிள்ளை, இரவு அளவுக்கு மீறி சாப்பிட்ட களைப்புத் தாளாமல் குறட்டை விட்டுக்கொண்டு நன்றாகத் தூங்கிக்கொண்டிருந்தார். பகல் முழுவதும் பணியாரம் சுடுவதில் உடம்பை அலட்டிக் கொண்டிருந்த செங்கமலம் மெய்மறந்து தூங்கிக் கொண்டிருந்தாள். இரவு பன்னிரெண்டு மணியடிப்பதைக் கேட்ட மரகதம் மெல்ல எழுந்து ஓசைப்படாது புழக்கடைக் கதவைத் திறந்து கொண்டு வெளியே சென்றாள். அவளது வருகையை ஒவ்வொரு வினாடியும் எதிர்பார்த்துக்கொண்டு சுவரருகில் நின்று கொண்டிருந்தான் சிவராஜன்.

## 3

மறுநாட் காலை கொட்டாவி விட்டுக்கொண்டு மெல்லத் துயிலினின்று எழுந்த செங்கமலம், ''மரகதம்! கொஞ்சம் அடுப்பைப் பற்றவை. முகத்தைக் கழுவிக்கிட்டு வருகிறேன்'' என்று கூடத்திலிருந்த வெறும் படுக்கைக்கு உத்தரவிட்டு, புழக்கடைக்கு பல் துலக்கச் சென்றாள். முகத்தைக் கழுவிக் கொண்டு நிதானமாக உள்ளே வந்து அவள், அடுப்பில் பூனை தூங்கிக்கொண்டிருப்பதைக் கண்டு எரிச்சலுடன், ''மரகதம், மரகதம், உனக்கு காது செவிடா? இன்னுமா தூங்குகிறாய்?'' என்று அதட்டி அழைத்தாள். மரகதத்தின் பதில் ஏதும் கேட்காததை



அறிந்து சிறிது கோபத்துடன் கூடத்திற்கு வந்தாள். ''மரகதம்! மரகதம்'' என்று இரைந்து நாலைந்து தடவை கூப்பிட்டாள். 'இந்த மரகதம் விடிவதற்குள் எழுந்து எங்கே போயிருப்பாள். புழக்கடைக்குப் பல் துலக்கப் போயிருப்பாளோ? புழக்கடையிலிருந்துதானே வருகிறோம். எதிர்ப்படவில்லையே' எனத் தனக்குள்ளே எண்ணிய செங்கமலம் உக்கிரான அறையை எட்டிப் பார்த்தாள். தாழ்வாரத்தைச் சுற்றிலும் கவனித்தாள். மரகதத்தை அங்கு எங்கேயும் காணவில்லை. திடீரென்று அவளுக்கு ஒரு பயம் ஏற்படவே, சட்டென்று ஓடி புழக்கடைக் கிணற்றை எட்டிப் பார்த்தாள். அதற்குள்ளேயும் மரகதத்தைக் காணவில்லை. செங்கமலத்தின் கை கால்கள் கிலியில் நடுங்கின. துக்கம் நெஞ்சை அடைத்துக் கொண்டது.

'ஐயோ! இந்த மரகதம் எங்கே போய்விட்டாள்? நான் என்ன செய்வேன்!' என்று எண்ணிக் கலங்கிய அவள் ''இந்தாங்க, எழுந்திருங்க, மரகதத்தைக் காணவில்லையே!'' என்றாள். மாணிக்கம்பிள்ளை அலறி அடித்துக்கொண்டு எழுந்து உட்கார்ந்தார், ''என்ன மரகதத்தைக் காணவில்லையா! எங்கே போயிருப்பா? நல்லா வீடு முழுவதும் சுத்திப் பார்த்தியா?'' என்று ஆத்திரத்துடன் கத்தினார்.

சிறிது நேரத்தில் மாணிக்கம்பிள்ளையின் வீடு அல்லோலகல்லோலப்பட்டது. இரண்டு வீடுகளிலும் ஏற்பட்ட குழப்பத்தையும் கூச்சலையும் கண்டு தெருவில் மக்கள் வேடிக்கை பார்க்கக் கூடிவிட்டனர். மாணிக்கம்பிள்ளை, அவமானத்திலும் ஆத்திரத்திலும் குதித்தார். என்ன பேசுகிறோம் என்று அறியாது அவர் உரத்த குரலில் முத்துப்பிள்ளையைப் பார்த்துக் கத்தினார்.

"டேய்! உன்னை நான் சும்மா விடமாட்டேன். நீ தான் இத்தனைக்கும் காரண பூதம். அந்தப் பயலை ஏவி விட்டவன் நீதான்" என்று கத்தினார் அவர். முத்துப் பிள்ளையின் மீசை கோபத்தால் படபடத்தது.

"இந்தாய்யா! வாயில் வந்ததைப் பேசிவிட்டு பின்னால் வருத்தப்படாதே நாவை அடக்கிப் பேசு. உன் பெண்ணை அடக்கி வீட்டில் வைத்துக்கொள்வதை நானா வேண்டா மென்றேன்? வயது வந்த பெண் தானே வருத்தத்துடன் கிளம்பி ஓடிவிட்டால் அதற்கு ஊரிலுள்ள எவனும் பொறுப்பாளியா? கன்னாபின்னாவென்று பேசினால் பல்லைத் தட்டிக் கையில் கொடுத்து விடுவேன்' என்று கத்தினார்.

பதிலுக்கு... "ஐயோ கேட்டியா சங்கதியை மரகதம் முத்துப்பிள்ளை வீட்டிற்கு வந்திருந்த விருந்தாளியை அழைத்துக்கொண்டு ஓடிவிட்டாளாம்" என்று மோவாயில் ஆச்சர்யத்துடன் கையை வைத்துக் கொண்டு விமர்சனம் செய்தனர் ஊர்ப் பெண்கள் சிலர்.

செங்கமலம் தனது பங்கை விட்டுக்கொடுக்க விருப்பமற்றவள்போல், "அண்ணி! இப்படி கழுத்தை அறுத்திட்டீங்களே. அந்தப் பயலுக்கு உடந்தையாக இருந்து என் மகளைக் கூட்டி அனுப்பிச்சுட்டீங்களே. இது நியாயமா? தெய்வத்திற்கு அடுக்குமா?" என்று வீட்டின் முற்றத்தி லிருந்து கத்தினாள்.

"அப்படி ஒரு பேச்சு உங்கிட்ட கேக்கணுங்கிறது தான் பாக்கியாக இருந்தது. நல்லாச் சொன்னாய், தெய்வம் உன்னைச் சும்மாவிடாது. வீண் பழியை என்மேலே போட்டியானால் தெரியுமா?" என்று ஆக்ரோஷத்துடன் கூக்குரலிட்டாள் அபிராமியம்மாள்.



வாசலில் ஒரு மூச்சு சண்டை போட்டுவிட்டு உள்ளே வந்த முத்துப்பிள்ளையின் கோபமெல்லாம் தனது மனைவி மீதுதான் திரும்பியது. "அப்பவே சொன்னேன். கேட்டியா? அந்த ஊதாரிப்பயல் எப்போ பெத்தவங்களை விட்டுத் தத்தாரியாக தனியா குடித்தனம் செய்கிறானோ, அப்பவே அவனை நம்பறதுக்கில்லை யென்று சொன்னேனே.

"அக்கா மகன் அப்படியிப்படியின்னு அந்த போக்கிரி நாயை வச்சு சோறு போட்டாய் ஊரே என்னைப் பார்த்து சிரிக்குது. இப்போ தலைநிமிர்ந்து நான் இன்னிக்குக் கடைத்தெருவுக்கு எப்படிப் போவேன்? சும்மா சிவசிவான்னு கிடந்த என்னை வம்பிலே மாட்டி வைத்து விட்டாயே!" என்று உக்கிரமான கோபத்தில் இரைந்தார்.

"பார்த்தால் இந்தப் பையனும் இப்படிச் செய்வானா என்று நல்லவன்போல், சிரித்துப் பேசிக்கொண்டிருந்த சிவ ராஜன் இப்படியும் படு போக்கிரித்தனமான காரியத்தைச் செய்து அவர்களைப் பழிச்சொல்லுக்கு இலக்காகி விட்டுப் போய்விட்டானே?" என்று எண்ணிக் குமுறிய அபிராமி யம்மாள், தனது துக்கம் தாளாது 'ஓ'வென்று வாய்விட்டு அழுது விட்டாள்.

முத்துப்பிள்ளை தனது ஆத்திரம் அடங்குமுன் ஒரு காரியத்தைச் செய்தார். இரண்டு கொத்தர்களை அழைத்து வந்து இருவீட்டையும் பிரித்துக்கொண்டு விழுந்து கிடந்த மண்சுவரை உடனுக்குடனே எழுப்பச் செய்தார்.

இடையிலே எழும்பி, இரு வீட்டிற்குமிடையே அது வரை ஓங்கிவளர்ந்த நட்பிற்கு ஒரு முற்றுப்புள்ளி வைத்து விட்டு, அவமானத்தினாலும் துயரத்தினாலும் வாடிய முகத்துடன் அன்று கடைக்குப்புறப்பட்டுச் சென்றார்.

இதற்குள் விஷயம் காட்டுத்தீ போல் ஊர் முழுவதும் பரவி விட்டது.

''மரகதம் ஓடிப்போய் விட்டாள்!'' என்ற விஷயம் பலருடைய வாயினின்று பலவிதமான கதையாக திரிந்து வேகமாக எட்டுத் திக்கிலும் பரவிக் கொண்டிருந்தது.

விஷயத்தைக் கேள்விப்பட்ட கந்தசாமிபிள்ளைக்கு வெட்கமும் கோபமும் தாளமுடியவில்லை. எல்லோர் முன்னிலையிலும் இத்தனை அவமானத்தை உண்டாக்கிய பின்பு மாணிக்கம்பிள்ளையை லேசில் விட்டுவிடுவதா?'' என்று கருவிக்கொண்டு, தனது இரட்டை மாட்டு வில்வண்டியில் பறந்துகொண்டு நேரே வந்து மாணிக்கம் பிள்ளை வீட்டில் இறங்கினான்.

''நல்லவேளை! உன் மகள் கலியாணத்திற்கு முந்தியே இந்தக் காரியத்தைச் செய்து விட்டாள். கலியாணம் ஆனபின் செய்திருந்தால் நான் அவமானத்தால் நாக்கைப் பிடுங்கிக் கொண்டு சாகவேண்டியது தான். எனக்கு உன் சம்பந்தம் இனி வேண்டாம். கலியாணத்திற்கு இதுவரை ஏற்பட்ட செலவையும், முன்கொடுக்க வேண்டிய கடன் தொகையை யும் ஒரு வாரத்தில் கொடுத்துவிடு போதும். இல்லையேல் உன்னைச் சும்மா விடமாட்டேன்'' என்று சவால் கூறி விட்டுச் சென்றான்.

அதைக் கேட்ட மாணிக்கம்பிள்ளையின் சப்த நாடியும் ஒடுங்கிவிட்டது. கடன்தொகையுடன் கலியாணச் செலவும் என்றால் நிலம், கடை எல்லாவற்றையும் ஈடு கொடுத்தால் கூடத் தாளாது.

மரகதம் இப்படி ஒரு காரியம் செய்வாளா? 'அந்தப் பெண்ணை அணு அணுவாகக் கொன்றாலும் குற்றமில்லை'



என்று மரகதத்தின் மீது எல்லையற்ற சினம் கொண்ட அவர், அது சமயம் தமது ஆத்திரம் முழுவதையும் செங்க மலத்திடம்தான் காட்ட வேண்டியிருந்தது.

''துப்புக்கெட்டவளே! மகளைத் திறமாக கவனித்துக் கொண்டிருப்பது உன் பொறுப்பல்லவா? நான் நம்ப முடியாது. தாய் அறியாத சூல் உண்டா? இந்த வேலைக்கு நீ அவளுக்கு உடந்தையாகத் தானிருந்திருப்பாய்'' என்று கூச்சலிட்டார்.

''ஐயோ! நான் ஒரு பாவத்தையுமறியேன். இந்தப் பாவிப் பெண் என்னைச் சந்தியிலே இழுத்துவிட்டுப் போய் விட்டாள்!'' எனத் தலையில் அடித்துக்கொண்டு செங்கமலம் புலம்பி அழுதாள் பதிலுக்கு.

## 4

நொண்டி ஒருவனுடன் வாழ்வு பிணைக்கப்படும் என்ற பயங்கரத்திலிருந்து விடுதலையை நாடி ஓடிய மரகதத்தின் உள்ளத்திலே நிலவி நின்ற துணிச்சல் கொஞ்சம் கொஞ்சமாக மறைந்து, விவரிக்க இயலாத ஒருவிதக் கிலி அவளது உள்ளத்தை உலுக்க ஆரம்பித்தது.

சிவராஜன் வேண்டிய ஏற்பாடுகளை விரைவில் செய்திருந்தான். ஊரிலிருந்து புறப்பட்டவர்கள் வண்டி யிலும், ரயிலிலும் பிரயாணம் செய்து நூறு மைலுக்கு அப்பாலிருந்த நகரத்திற்கு வந்து சிவராஜனுக்கு வேண்டிய நண்பன் ஒருவனின் வீட்டில் தங்கினர்.

அன்று காலையே அவர்களிருவரும் தங்களது கலியாணத்தை நகரத்திலே ரிஜிஸ்டர் ஆபீஸில் பதிவு செய்து கொண்டனர். மேளதாளம் இன்றி, அக்னி சாட்சியின்றி

ஒரு லிகிதத்தில் கையெழுத்திட்டு பதிவு செய்த இந்த விவாகமுறை மரகதத்திற்கு சிறிதும் பிடிக்க வில்லை. ஏதோ தவறானதொரு காரியத்தைத் தான் செய்து விட்டதுபோல் எண்ணி அவள் துயரமடைந்தாள்.

அதை அறிந்து கொண்ட சிவராஜன் அவளது மனத்திற்கு சமாதானம் ஏற்படுத்த எண்ணி அருகிலிருந்த மலைக்கோயிலில், அன்றுமாலையில், கொட்டு மேளத் துடன் வைதீக முறைப்படி விவாகத்திற்கு ஏற்பாடு செய்தான். கடவுள் சன்னிதானத்தில் இரண்டொரு நண்பர்களுடன் அவள் கழுத்திலே சிவராஜன் மந்திரமும், மேளதாளமும் முழங்க சாஸ்திரோக்தமாக மாங்கல்யத்தைக் கட்டினான்.

கலியாணமும் விருந்தும் முடிந்தது. நண்பனின் வீட்டிற்குத் திரும்பி வந்த சிவராஜன் தனது மனைவியை பெருமிதத்துடன் நிமிர்ந்து பார்த்து, "இனிமேல் நாம் இங்கே தங்குவது உசிதமல்ல. ஊருக்குப் போகலாம் உனது சாமான்களை எடுத்து மூட்டை கட்டிக்கொள்" என்றான்.

"எங்கே?" என்று திகிலுடன் வினவினாள் மரகதம். கடவுளின் சன்னிதானத்திலே சாஸ்திரம் தவறாது நடந்த தென்றாலும் மரகதத்திற்கு சமாதானம் ஏற்படவில்லை. ஊரார் ஒருவரும் இன்றி கள்ளத்தனமாகத் தாலி கட்டிக் கொண்ட இந்த விவாகம் அவளுக்கு விவாகத்தைப் போன்றே தோன்றவில்லை. திடீரென்று அவளுக்கு சிவராஜன் மீது சந்தேகம் ஏற்பட ஆரம்பித்து விட்டது.

கல்யாணம் என்ற பயங்கர பந்தத்திலிருந்து தப்பவே அவள் ஓடிவந்தாள். சிவராஜன் மீது அவளுக்குக் கரை காணாக் காதல் ஒன்றும் பொங்கிக் கொந்தளித்துக் கொண்டிருக்கவில்லை. அந்தப் பயங்கர பந்தத்தினின்று அவள் நிரந்தரமாக விடுதலை அடைந்து விட்டாள்.



சிவராஜனை ரிஜிஸ்டர் விவாகம் செய்துகொண்டு விட்டாள் என்று அறிந்த பின்பு அவளைப்பற்றி இனி ஒரு வரும் விவாக சம்பந்தமாகக் கனவிலும் நினைக்க மாட்டார்கள். ஆகவே இனி அந்தப் பயமில்லை. கந்தசாமி யின் மகன் நொண்டி வேலாயுதத்திற்கு மனைவியாக மறுத்து அதனின்று தப்பவே அவள் துணிவுடன் சிவராஜனுடன் புறப்பட்டு ஓடிவந்தாள். இப்பொழுது சிவராஜனிடன் அகப்பட்டுக் கொண்டாள். அவனிடமிருந்து தப்புவது எப்படி? தீவிரமாக வேலை செய்த மரகதத்தின் மூளையில் பளிச்சென்று இன்னொரு யோசனை உதயமாயிற்று.

"அப்பாவையும் அம்மாவையும் கண்டு காலில் விழுந்து மன்னிப்புக் கேட்டுக் கொண்டபிறகுதான் போக வேண்டும்.இல்லாவிடில் என் மனம் சமாதானமடையாது. பெற்றவர்கள் மனம் புண்படும்படி செய்துவிட்டுச் சென்றால் நமது வாழ்க்கை நலமாக இருக்குமா?" என்று மெல்ல சிவராஜனிடம் கூறினாள்.

"அவர்கள் கோபம் ஆறுவதற்குள் அங்கே சென்றால் நமக்கு நல்ல வரவேற்புக் கிடைக்காதே!" என்று சிவராஜன் தடுத்துக் கூறினான். ஆனால் மரகதத்தின் விழிகள் உகுத்த கண்ணீரைக் கண்டு அவன் மனம் பாகாய்க் கரைந்து போயிற்று. "சரி, உன் இஷ்டப்படியே செய்தால் போச்சு" என்று துணிச்சலுடன் அவளை அழைத்துக்கொண்டு மாணிக்கம்பிள்ளையைச் சந்தித்து ஆசீர்வாதம் பெற ஊருக்குத் திரும்பினான்.

மரகதம் சென்று மறைந்து இரண்டு நாட்கள் சென்ற பின், அன்று காலை வாயிலில் வந்து நின்ற குதிரை வண்டியைக் கண்டு வியப்புடன் மாணிக்கம்பிள்ளை வாயிலில் வந்து எட்டிப் பார்த்தார். தொப்பென்று குதித்த

மரகதம் அவரைத் தள்ளிக்கொண்டு உள்ளே ஓடித் தாழ்வாரத்தில் உட்கார்ந்திருந்த தாயின் மடி மீது போய் விழுந்தாள்.

'அம்மா! என்னைக் காப்பாற்று! அவரு சொக்குப் பொடி தூவி என்னை மயக்கி அழைத்துக்கொண்டு போயிட்டாரு! ஐயோ எனக்குப் பயமாக இருக்குதே?'' என்று அலறியபடி மூர்ச்சித்துவிட்டாள்.

''அயோக்கியப் பயலே! உனக்கு என் வீட்டு வாசல் படி ஏற தைரியமிருக்கிறதாடா!'' என்று கையை ஆத்திரத்துடன் ஓங்கிக்கொண்டு சிவராஜனை நோக்கிப் பாய்ந்த அவரைத் தெருவிலிருந்த சிலர் தடுத்தனர். அதற்குள் வீட்டிலும் வெளியிலும் கூட்டம் நிறைந்து விட்டது.

கதவைத் தாளிட்டுக்கொண்டு உள்ளே வந்த மாணிக்கம்பிள்ளையின் கண்கள் இரண்டும் கோவைப் பழம்போல் சிவந்திருந்தன. தாயின் மடியிலே துவண்டு பூங்கொடிபோல் மூர்ச்சித்துக் கிடந்த மகளைக் கண்டதும், அவரது இரத்தம் கொதித்தது.

''அந்தச் சண்டாளியின் கழுத்தை முறிச்சுப் போட்டு விடுகிறேன் பாரு. மானங்கெட்ட மகள். இவள் பிறக்க வில்லையென்றுதான் நான் தவமிருந்தேனாக்கும்'' என்று மீசையைத் தடவிக்கொண்டு முற்றத்திற்கு ஒரே பாய்ச்சலில் வந்து நின்றார்.

ஆனால் அதற்குள் வீட்டிற்குள்ளே மரகதத்தைச் சூழ்ந்து நின்ற தெருப்பெண்களில் கிழவி ஒருத்தி முன்னால் வந்து சமாதானம் பேச ஆரம்பித்து விட்டாள். ''தம்பி கோபம் பொல்லாதது. நடந்தது நடந்துவிட்டது. ஆத்திரப்படறதிலே லாபம் என்ன? அந்தப் பொண்ணு மேலே குற்றமில்லை.



அந்தப் பயல் ஏதோ மந்திரம் தந்திரம் செய்து கூட்டிக் கொண்டு போய்விட்டான். அவன் சூனியக்காரன்னு மூஞ்சியிலே எழுதி ஒட்டியிருக்குதே!'' என்றாள்.

''ஐயோ! அத்தையம்மா! நீங்க சொல்வது சரிதான். இந்தப் பாவிப்பயல் என் பெண்ணை மருந்துவச்சி மயக்கி விட்டான். இல்லாட்டி இந்த மாதிரி அவள் ஏதும் செய்யமாட்டாளே!'' என்று தலையிலும் மார்பிலும் அடித்துக்கொண்டு செங்கமலம் கதறி அழுதாள்.

சுற்றிலும் நின்று கொண்டிருந்த பெண்களும் மற்றவர்களும் தலைக்குத்தலை தன்னைப் பற்றிப் பலவிதமாகப் பேசுவது எல்லாம் மரகதத்தின் செவிகளிலே நன்கு விழுந்தன. உக்கிரமான கோபத்துடன் நின்று கொண்டிருந்த தந்தையைப் பார்க்கப் பயந்துபோன அவள் கண்களை இறுக்கமாக மூடிக்கொண்டு மயங்கியவள் போல் அசைவின்றிக் கிடந்தாள்.

''தம்பி, உன் கோபம் அப்புறம் இருக்கட்டும். முதலிலே கோடித்தெரு சுந்தரம்பண்டிதரைக் கூட்டி வந்து சட்னு காட்டு. இந்தப்பொண்ணு கண்ணைத் திறக்காமல் கட்டையோட கட்டையாக மயங்கிக் கிடக்கு. அதுக்கு உசிரு வரட்டும். பிறகு பின்னாடி பேசிக்கலாம். அந்தப் பயலைச் சும்மா விடக்கூடாது. கள்ளத்தனமா அழைச்சுக் கிட்டு போய்த் தாலி கட்டிவிட்டா, கல்யாணம்னு ஒப்புக்க முடியுமா? நீ கலங்காதே தம்பி நாங்கள் உன்னை விட்டுக்கொடுத்துட மாட்டோம்!'' என்றார் எதிர்வீட்டு ஏகாம்பரம்.

''ஐயையோ! கண்ணு சொருகிட்டு மூச்சு இல்லாம கிடக்கிறாளே. என் மகளைப் பாவி கொன்னுட்டானே! பசுங்கிளி போயிட்டாளே'' என்று அலறிக்கொண்டு உரத்த குரலில் செங்கமலம் ஓலமிடுவதைக் கண்டு பதை

பதைத்துப் போன மாணிக்கம்பிள்ளை கோபத்தை மறந்து சுந்தரம்பண்டிதரைக் கூட்டிவரக் கதவைத் திறந்து கொண்டு தெருவில் ஓடினார்.

தெருவே ஒரே கலவரத்தில் மூழ்கியிருந்தது. அடுத்த வீட்டில் கூச்சலும் குழப்பமுமாக இருந்தது. இத்தனைக்கும் காரணபூதமாகவிருந்த சிவராஜன் மௌனமாக தெருத் திண்ணையிலே யாரும் கவனிப்பாரற்று உட்கார்ந்திருந்தான். வாசல் கதவுவரை வந்து மெல்ல எட்டிப்பார்த்த அபிராமிக்கு அவனைக் கண்டதும் ஆத்திரம் பற்றிக் கொண்டு வந்தது.

"அயோக்கியப் பயலே, நல்லவனைப்போல் வேஷம் போட்டு ஊரில் தலைகாட்டாதபடி செய்து விட்டாயே" என்று திட்ட வேண்டுமென்று ஆவலில் மெல்ல வெளியே வந்தவள் கனல் பறக்கும் கண்களுடன் முத்துப்பிள்ளை தன்னை முறைத்துப் பார்ப்பதை உணர்ந்து உள்ளே திரும்பி விட்டாள்.

உடனடியாக வீட்டுக் கதவைத் தாளிட்டுக் கொண்டு உள்ளே வந்த முத்துப்பிள்ளை, "வாயிற் படியினைத் தாண்டி வெளியே போனியோ பார்த்துக்க. காலு ரெண்டும் முறிஞ்சிடும். ஜாக்கிரதை!" என்று உறுமினார். கட்டுக் கடங்காது பொங்கி எழுந்த கோபத்தில் அவருக்கு அதுசமயம் சிவராஜன் முகத்தில் விழிக்கக்கூட மனமில்லாதிருக்கவே, வீட்டிற்குள்ளே வந்து உட்கார்ந்து கொண்டு, அடுத்த வீட்டில் நடந்து கொண்டிருந்த ஆர்ப்பாட்டங்களை உற்றுக் கேட்டுக் கொண்டிருந்தார்.

குதிரை வண்டிக்காரனுக்கு கூலியைக் கொடுத்த னுப்பி விட்டு, சிவராஜன் மாணிக்கம்பிள்ளை வீட்டுத் திண்ணையில் உட்கார்ந்து கொண்டிருந்தான். உள்ளே



நுழைந்து சென்றவர்களும், வெளியே சென்றவர்களும், தெருவில் போவோரும் வருவோரும் அவனைப் பொருட் காட்சி சாலையிலே விநோதமானதொரு பொருளை வெறித்துப் பார்க்கிறவர்கள்போல் பார்த்து விட்டுச் சென்றனர்.

அன்று மாணிக்கம்பிள்ளை வீட்டில் ஒரு வேலையும் நடக்கவில்லை. சூரியன் உச்சிப்பொழுதை யடைந்த பொழுதுதான் மரகதம் மெல்லக் கண்ணை விழித்துப் பார்த்தாள்.

"அப்பா! எனக்குப் பயமாக இருக்குதே! அவரைக் கண்டாலே பயமாக இருக்குதே! என்னைக் காப்பாற்றுங் கள். ஐயையோ என் புத்தி கலங்கிப் போகுதே! அதோ பாருங்க! ஒரு பிசாசு வந்திருக்குதே" என்று அலறினாள்.

மாணிக்கம்பிள்ளைக்கு கொஞ்ச நஞ்சமிருந்த சந்தேகமும் இப்பொழுது மறைந்துவிட்டது. "சந்தேக மில்லாது அந்தப் பயல் சிவராஜன் ஏதோ சூனியம் வைத்திருக்கிறான். இல்லாவிடில் மரகதம் மிரள மிரள ஏன் விழிக்க வேண்டும்? கண்களிலும் இத்தனை பீதிக் குறை ஏன் ஏற்படவேண்டும்? மரகதம் சுபாவத்தில் தாறுமாறாக நடந்து கொள்ளும் பெண் அல்லவே. கொஞ்சம் பிடிவாதக்காரியே ஒழிய தங்கமான குணமுடையவளாச்சே! அந்தக் கிழவி சொல்லுவதுபோல் இது ஏதோ மாந்திரீக வேலைதான். அந்தப் பயலைச் சும்மா விடக்கூடாது. ஏழுகோர்ட் என்றாலும் சரி, ஏறி ஒரு கை பார்த்துவிடவேண்டியதுதான்!" என்று தமக்குள்ளே எண்ணி வெகுண்டார். கதவைத் திறந்து கொண்டு வாசல் பக்கம் வந்தார்.

காலையில் புறப்படும் அவசரத்தில் ரயிலடியில் ஒரு டம்ளர் காப்பியை இரண்டு வாயாகக் குடித்துவிட்டு வந்திருந்த சிவராஜனுக்குப் பசி ஒருபுறம். மரகதத்தின்

விசித்திரமான நடத்தையினால் ஏற்பட்ட ஏமாற்றம் ஒருபுறம். எனவே அவன் மனம் எரிமலையைப் போல் குமுறிக் கொண்டிருந்தது.

''ஏண்டா அயோக்கியப் பயலே இன்னும் இங்கே உனக்கு என்ன வேலை?'' என்று மாணிக்கம்பிள்ளை உரத்த குரலில் கத்தினார்.

''மாப்பிள்ளை என்று முகமன் கூறி வரவேற்க வேண்டுமென்பதை நான் இது சமயம் தங்களிடம் எதிர்பார்க்கவில்லை. உங்கள் வீட்டில் விருந்து சாப்பிட நான் வரவில்லை. என் மனைவியை அழைத்துச் செல்ல வந்தேன்'' என்றான் சிவராஜன்.

''உன் மனைவி என்று இங்கு ஒருவரும் இல்லை'' என்று சீறினார் மாணிக்கம்பிள்ளை.

''மரகதம் என் மனைவியாகி விட்டாள். சட்டப்படியும் சாஸ்திரப்படியும் அவளை நான் மணந்து கொண்டு விட்டேன். அதனால் அவளை அனுப்பி விட்டால் நான் வம்பு செய்யாது போய்விடுகிறேன். மறுபடி இந்த வீட்டு வாசற்படியை மறந்துகூட மிதிக்க மாட்டேன்'' என்றான் அவன்.

''கள்ளத்தனமாக ஒரு பெண்ணைக் கடத்திச் சென்று விட்டால் அது கலியாணமாகி விடுமோ? இது கலியாணம்னு நாங்கள் ஒப்புக் கொள்ளப்போவதில்லை. உன்னைச் சும்மாவும் விடப்போவதில்லை. வந்தது வரட்டும்னு கோர்ட்டுவரை போகத் தீர்மானிச்சுட்டோம்'' என்று எதிர்வீட்டு ஏகாம்பரம் கச்சையைக் கட்டிக் கொண்டு சண்டைக்கு வந்தார்.



''ஏழு கோர்ட் என்ன எழுபது கோர்ட் வேணும்னாலும் ஏறுங்களேன். யாருக்கென்ன? அவள் வயதைத் தாண்டிய பெண். இஷ்டப்பட்டு மணந்து கொண்டாள் என்கிறதை நான் நிரூபித்து விடுவேன். என்னத்திற்கு இத்தனை எதிர்வாதம்? நான் உங்களுடன் வம்பு செய்ய இங்கு வரவில்லை. எனக்கு உங்கள் மரியாதைகளோ, சீர் வரிசையோ எதுவும் வேண்டாம். என் மனைவியை அவள் மேல் போட்டிருக்கும் இரண்டொரு ஆபரணங் களையும் கழற்றிக் கொண்டு, வெறும் கையுடன் என்னுடன் அனுப்பினால் போதும். ஏன் வம்பு செய்து வீண் கூச்சல் போடுகிறீர்கள்?'' என்றான் அதிகாரமான குரலில்.

''இதோ பார் மாணிக்கம். காலம் போகும். வார்த்தைதான் நிற்கும். அந்தப் பையன் சொல்றதையும் கொஞ்சம் காதில் வாங்கிப் பிறகு பேசு. கோர்ட்டு கீர்ட்டு அதெல்லாம் என்ன? நடந்தது நடந்தாச்சு, பேசாமல் பெண்ணை அவனுடன் கூட்டியனுப்பு'' என்றார் தெருவிலிருந்த வயோதிகர் ஒருவர்.

''கிழவா, உன்-வேலையைப் பார்த்துக்கிட்டு வாயை மூடிக்கிட்டு கிட. இந்த மாதிரி அயோக்கிய பசங்களுக்கு ஒரு பாடங் கற்பிக்காட்டி ஊரு பின்னாடி ஒரேயடியாகக் கெட்டுப்போகும். இவனைச் சும்மா விடாதே. தம்பி, போலீஸிலே ஒப்டைச்சு விடு'' என்று இரைந்து கத்தினார் எதிர்வீட்டு ஏகாம்பரம்.

''எம் பொண்ணு வாழ்க்கை மண்ணானாலும் சரி உன்னை நான் சும்மா விடமாட்டேன். உன் மேலே கேஸ் போட்டு உன்னை சந்தியிலே நிறுத்தினால்தான் என் மனசு ஆறும்'' என்று மாணிக்கம் பிள்ளை மீசையைக் கோபத்துடன் தடவிக் கொண்டு இரைந்தார்.

''கோர்ட்டுக்குப் போகுறது பிறகு இருக்கட்டும் முதலில் அந்தப் பெண்ணைக் கூப்பிட்டுக் கேளுங்கள். அவள் வாயாலே என் மீது குற்றம் என்றால் உங்கள் தண்டனையை ஏற்றுக் கொள்கிறேன்'' என்று சிவராஜன் உறுதியாகச் சொன்னன்.

''ஓ, பேஷாக நீயே கேளப்பா. இத்தனை பேரும் உன் அயோக்கியத்தனத்திற்குச் சாட்சியாக இருக்கட்டும்'' என்று கொக்கரித்தார் எதிர்வீட்டு ஏகாம்பரம்.

''மரகதம்!'' என்று இடியோசை போன்ற குரலில் இரைந்து கூப்பிட்டார் மாணிக்கம்.

''ஏன் அப்பா'' என்று கேட்ட மரகதத்தின் குரல் கிணற்றிலிருந்து ஒலிப்பதைப் போல் இருந்தது. வாசற் படியைப் பிடித்துக்கொண்டு தள்ளாடியபடி அவிழ்ந்த கூந்தலுடன் அலங்கோலமாக நின்று கொண்டிருந்த மரகதத்தை பச்சாதாபமாக சிவராஜன் நிமிர்ந்து பார்த்து விட்டு, ''மரகதம்! உண்மையைச் சொல்! நீ இஷ்டப்பட்டுத்தானே என்னை மணந்து கொண்டாய். இவர்கள் ஒருவரும் நம்பமாட்டேன் என்கிறார்கள். உன் புருஷனை மதிக்காத இந்த இடத்தில் உனக்கு என்ன வேலை? புறப்படு. நாம் ஊருக்குப் போகலாம்'' என்றான் சிவராஜன்.

மரகதம் அவனை நடுக்கத்துடன் வெறித்துப் பார்த்தாள். 'அய்யோ அப்பா! இவர் பொய் சொல்கிறார். எனக்கு மந்திரம் போட்டு மயக்கி, அய்யய்யோ அதோ ஒரு பிசாசு இருக்குதே. என் ரத்தத்தைக் குடிச்சுடுமே! காப்பாற்றுங்க, என்னைக் காப்பாற்றுங்க'' என்று கூறி விட்டு அலறி, படார் என்று வாசற்படி மீது மூர்ச்சித்து விழுந்தாள். தலைமீது வாசற்படி மோதியதால் ஏற்பட்ட சிறு காயத்தினின்று இரத்தம் குபுகுபுவென்று பொங்கித் தரை மீது வழிந்து ஓடியது.



''இப்போ என்ன சொல்கிறாய்?'' என்று கோபமும் குரோதமுமாக ஏகாம்பரம் கர்ஜித்தார். ''இப்படி நடக்குமா, அந்தப் பாவி லேசுப்பட்டவனில்லை. சும்மா விடக்கூடாது! பிடியுங்கள். உதையுங்கள்'' என்று ஏககாலத்தில் பலர் கூக்குரலிட்டனர். கையை ஓங்கிக் கொண்டு சிவராஜனை நையப்புடைக்க முன்னேறிய மாணிக்கம்பிள்ளை யைக் குறுக்கே தடுத்து நிறுத்தினார். ''தம்பி, குடிமுழுகிப் போய்விடவில்லை. இவனைப் பிறகு பார்த்துக் கொள்ளலாம்'' என்று சமாதானம் செய்தனர்.

## 5

சிவராஜன்மீது வழக்குத் தொடர்வதற்கோ, வம்பு செய்து அவனை இம்சித்து தமது வஞ்சத்தைத் தீர்த்துக் கொள்ளவோ மாணிக்கம்பிள்ளைக்கு சிறிதும் பொழுது இருக்கவில்லை. அடுத்த சில தினங்களில் தொடர்ந்தாற் போல் அவருக்கு வீட்டிலும் வெளியிலும் பல தொல்லைகள் வந்து கவிழ்ந்து கொண்டன. விவாக விஷயமாக மிகவும் அவமானத்திற்குள்ளாகி இருந்த கந்தசாமிப்பிள்ளை இதுதான் சமயம் என்று தான் கொடுத்த பணத்தை திருப்பி தரும்படி நெருக்கினான்.

திரும்பி வந்ததிலிருந்து மரகதத்தின் தேக நிலை மிகவும் கவலைக்கிடமானதாக இருந்தது. பித்தம் பிடித்தவள் போல் அவள் எல்லோரையும் வெறித்துப் பார்த்தாள். எதையோ நினைத்துக் கொண்டு அடிக்கடி அழுதாள். காரணமற்ற சிறு விஷயத்திற்கெல்லாம் கை கொட்டி நகைத்தாள். இரவு வேளையில் நித்திரையிலிருந்து திடுக்கிட்டு விழித்துக் கொண்டு அலறினாள்.

கந்தசாமியின் தொந்தரவு பொறுக்க முடியாது மகளைக் கொடுத்துக் காப்பாற்றிக் கொள்ளலாம் என்று ஆசை கொண்டிருந்த மாணிக்கம்பிள்ளை தமது நிலங்களைக் கடனுக்கு எழுதிக் கொடுத்துவிட நேர்ந்தது. விவாக சம்பந்தமான செலவுத் தொகைக்கு ஈடு செய்ய, மகளின் மேலிருந்த இரண்டொரு ஆபரணங்களையும், செங்கமலத்தின் கெட்டிக் கொலுசு காப்புகளையும் விற்க வேண்டி வந்தது.

சில நாட்களாகக் கடையையும் சரியாகக் கவனிக்காததினால் ஏற்பட்ட பொருள் நஷ்டம், மரகதத்தின் வியாதியைத் தீர்க்க செங்கமலம் நடத்திய பூஜை புனஸ்காரங்களினால் ஏற்பட்ட அதீதமான செலவு எல்லாம் சேர்ந்து மாணிக்கம்பிள்ளையை மிகவும் கவலையில் ஆழ்த்தி விடவே அவர் முன் போல் சகஜமாக யாரிடமும் பேச விரும்பாதவராக தனிமையை நாடி, தனது உள்ளத் துயரத்தைத் தாமே பகிர்ந்து அனுபவித்துக் கொண்டிருந்தார்.

மரகதத்தின் தேக நிலையைக் கண்ணுற்ற அவருக்கு ஆரம்பத்தில் அவள் மீது ஏற்பட்டிருந்த கோபம் குறைந்து அதற்குப் பதில் அனுதாபம் மேலோங்கியது. நடந்தது நடந்துவிட்டது. அவமானப்பட வேண்டிய வேளை அனுபவித்தாகிவிட்டது. இந்தப் பெண்ணாவது பிழைத்தால் போதும் என்றவரைக்கும் அவரது மனம் வெகுவாக மாறி விட்டது. மந்திரங்கள், பூஜைகள், மருந்துகள் என்று பலவித உபசரணையால் மரகதம் ஒரு மாத காலத்தில் நோயினின்று குணமடைந்து போனாள்.

சில தினங்கள்வரை அவளுக்குத் தைரியமாகவே வெளியே வரத் துணிச்சல் இல்லாமலிருந்தது. வாசலில் வந்து எட்டிப் பார்த்தால்கூட "மாணிக்கம்பிள்ளை மகள் இவள்தான் கலியாணத்திற்கு இரண்டு தினங்களிருக்கையில் ஒருவனுடன் ஓடிப்போனவள்" என்று அவளைப் பற்றி தெருவில் உள்ளவர்கள் தெரியாதவர்களுக்கு அறிமுகம் செய்து ரகசியம் பேசிக் கொண்டனர்.



மாணிக்கம்பிள்ளை வீட்டில் இந்த அமர்க்களம் நடந்த புதிதில், செங்கமலத்திடமோ, மரகதத்திடமோ தெருவி லிருந்த பெண்கள் யாரும் முகங்கொடுத்துப் பேசத் துணியவில்லை. ஓடிப்போனவள். அவளுடன் உனக்கென்ன பேச்சு?" என்று தமது பெண்களை அடக்கி உள்ளே வைத்துக் கொண்டனர். மற்றத் தாய்மார்கள், நாட்கள் செல்லச் செல்ல மரகதத்தின் மீது ஏற்பட்டிருந்த பழியின் சுமையும் மெல்லக் குறைய ஆரம்பித்தது.

எத்தனை நாட்கள்தான் நைந்துபோன பழங் கதையைக் கிராமத்து மக்கள் பேசிக்கொண்டிருக்க முடியும்? மரகதம் ஓடிப்போய் திரும்பிவந்த விஷயம் மிகவும் பழையதாகி விடவே, அதைப்பற்றி அவர்கள் பேசுவதை நிறுத்தி மெல்ல மறக்கக்கூட ஆரம்பித்தனர்.

தெருவிலிருந்த நொண்டிப் பெண் ஒருத்தி புருஷனுடன் கோபித்துக் கொண்டு பழைய சாவடியில் தூக்குப் போட்டுக் கொண்டு மாண்டுவிடவே, கிராமத்து மக்களின் ஆவலும் வம்பும் அந்தப் பெண்ணின் மரணத்தைப் பின்பற்றிச் செல்ல ஆரம்பித்தன. எனவே, அவர்கள் நினைவினின்று மரகதம் அறவே மறைந்து விட்டாள்.

முன்போலத் தெருப் பெண்கள் மரகதத்தைக் கண்டு முகத்தைச் சுளித்துச் செல்லவில்லை. புன்னகை செய்து அவளுடன் வலிய வந்து பேசத் தலைப்பட்டனர்.

ஒரு சில பெண்கள் ஊராருடன் ஒத்துப் போக வேண்டி வெளிக்கு மரகதத்தை வெறுப்பவர்கள்போல் ஆரம்பத்தில் நடித்தனரே ஒழிய, அவர்களுக்கு உள்ளூர அவளது துணிச்சலைக் கண்டு வியப்பும், அதற்காக அவள் மீது ஒரு பரிவும் ஏற்பட்டிருக்கத்தானிருந்தது. தெருவிலிருந்த மற்ற எல்லாப் பெண்களும் மரகதத் துடன் முன்போல் சகஜமாகப் பழகுவதைக் கண்ணுற்ற அவளது ரகசிய சினேகிதிகள் முன்னைக் காட்டிலும் பன்மடங்கு அன்புடன் அவளை வந்து சூழ்ந்து கொண்டு உறவு கொண்டாடினார்கள்.

ஆறுமாத காலம் சென்றபின், மரகதம் தன்மேல் ஏற்பட்ட பழியை அறவே மறந்து, சுதந்திரப் பறவையாக ஊரில் திரிந்து கொண்டிருந்தாள். கலீர் என்று கேட்ட அவளது சிரிப்பின் ஒலி தெருக்கோடி வரை சென்று எதிரொலித்தது. கோவில், கல்யாணம், ஊரில் நடந்த கேளிக்கைகள் எங்கிலும் இவள் தனது சிநேகிதிகள் புடைசூழ தென்பட்டுக் கொண்டிருந்தாள்.

நொண்டிப் பையனின் மனைவி என்ற வாழ்க்கையிலிருந்து அவள் தப்பிக்கொண்டுவிட்டாள். முன்பின் அறியாத சிவராஜனின் மனைவி என்ற பயங்கர நிலையிலிருந்தும் தந்திரமாகத் தப்பிவிட்டாள். ஊராரும் அவளது குற்றத்தை மறந்து மன்னித்து அவளைத் திரும்ப ஏற்றுக் கொண்டு விட்டனர். இனி கவலை என்ன? மரகதம் நிம்மதியாக ஆனந்தமாக வாழ்க்கையை நடத்திக் கொண்டிருந்தாள்.

ஒருநாள் அந்திப்பொழுது மரகதம் குடத்தை எடுத்து இடுப்பில் வைத்துக்கொண்டு நாலைந்து சிநேகிதிகளுடன் ஆற்றுக்கு நீர் எடுத்துவரக் கிளம்பினாள். "சீக்கிரம் திரும்பி விடுங்க. பொழுது சாயும்நேரம். ஆற்றங்கரையில் வம்பு



பேசிக்கிட்டு நிக்காதீங்க" என்று செங்கமலம் மகள் புறப்படும்பொழுதே மிகவும் எச்சரித்தாள்.

ஆற்றங்கரையிலே அவர்களுக்குப் பொழுது போனதே தெரியவில்லை. சிரிக்கச் சிரிக்கக் கதைகள் சொல்லிக் கொண்டிருந்த மரகதத்தின் வாயைப் பார்த்துக்கொண்டு குடத்தை மெல்லத் துலக்கிக் கொண்டு அவர்கள் எல்லோரும் நின்றனர். "இப்படியே நின்னாப் பொழுது விடிஞ்சு போயிடும். நீர் முகர்ந்து கொண்டு கிளம்புங்க. நேரமாகலை?" என கூடவந்தவர்களில் ஒருத்தி அதட்டிய பொழுதுதான், சூரியன் நன்கு அஸ்தமித்து இருள் வேகமாய் பரவிக்கொண்டு வருவதை அவர்கள் உணர்ந்து திடுக்கிட்டுக் காரியத்தைக் கவனிக்க ஆரம்பித்தனர்.

மரகதம் அவசரமாகக் குடத்தைத் துலக்கிக் கழுவி விட்டு நீரை முகர்ந்து இடுப்பில் எடுத்து வைத்துக் கொண்டு கரையை நோக்கி முன்னால் நடந்தாள். மற்ற பெண்களும் அவசரம் அவசரமாக தத்தம் குடத்தில் நீரை முகர்ந்து எடுத்துக்கொண்டு அவளைப் பின்பற்றி ஓடி வந்தனர்.

ஆற்றங்கரையில் அவள் சில கஜ தூரங்கள் கூடச் சென்றிருக்கமாட்டாள். அது சமயம் வேகமாக அவளது அருகிலே ஒரு கறுப்பு நிறக் கார் வந்து நின்றது. மின்னல் தெரிந்து மறையும் பொழுதில் அதனின்று ஒரு யுவன் சட்டெனக் கீழே இறங்கினான். அவனைக் கண்டதும் மரகதம் "ஐயோ!" என்று அலறிக்கொண்டு குடத்தைக் கீழே நழுவவிட்டு ஓட ஆரம்பித்தாள்.

ஆனால் அவளால் எங்கும் ஓடமுடியவில்லை. இரும்பு போன்ற கரங்களால் அவளை இறுக்கி, அணைத்துப் பிடித்து, அவளை ஓடவிடாது பலவந்தமாகத் தூக்கி, காரில் தொப்பென்று போட்டான் அந்த யுவன் "ஐயோ!" அம்மா

என்ற மரகதத்தின் குரல் வானைப் பிளந்தது. கூட வந்த பெண்களுக்கு ஏற்பட்ட திக்பிரமை கலைந்து அவர்கள் பேசும் சக்தியை அடையுமுன் கார் வேகமாகப் புறப்பட்டு வந்த திக்கிலே சென்று மறைந்து விட்டது.

கார் கடும் வேகமாக ஓடிக்கொண்டிருந்தது. "எங்கே போகிறோம்? எதற்காகப் போகிறோம்" என்று நினைத்துப் பார்க்க முடியாதபடி மரகதத்தின் உள்ளத்தில் பீதியும் துயரமும் குடி கொண்டன.

ஆற்றங்கரையினின்று கார் புறப்பட்டதும் கொஞ்ச நேரம் வரைதான் மரகதம் கூக்குரலிட்டு கை கால்களை சிறு குழந்தையைப்போல் உதைத்துக்கொண்டு காரினின்று குதித்து ஓட முயற்சி செய்தாள். ஆனால் அவளது முயற்சி பலிக்கவில்லை. "பேசாமல் வம்பு செய்யாது வந்தாயானால் பிழைத்தாய்! இது உன் அப்பன் வீடு என்று நினைத்துக் கொண்டு சண்டித்தனம் செய்யாதே! உனது கூக்குரலையும் கூச்சலையும் கேட்டு யாரும் இங்கே உதவி செய்ய வரப்போகிறதில்லை. காரை ஓட்டிச் செல்கிறவர் என் சிநேகிதர்.

நமது அழகான கல்யாணத்திற்குச் சாட்சியாக இருந்து உதவி செய்தவர். நமது கல்யாணம் எவ்வாறு வெற்றிகரமாக முடிந்தது என்பதையும் அவர் அறிவார். அதனால் உனது சாகசம் எல்லாம் இனிப்பலிக்காது" என்று கூறிப்பிடித்திருந்த அவளது கரங்களைத் தளர விட்டு அவளை உற்றுப் பார்த்தான் சிவராஜன்.

நேரிடையாக அதற்கு ஏதும் பதில் அளிக்காது, மரகதம் முகத்தைக் கரங்களால் மூடிக்கொண்டு விம்மி விம்மி அழ ஆரம்பித்தாள். சிவராஜனின் பலமான பிடியிலே அதுவரை சிக்குண்டிருந்த கரங்களிரண்டும் சிவந்து வலியெடுக்க ஆரம்பித்தன.



அவள் எண்ணியிருந்ததுபோல் சிவராஜன் சாதாரணமான மனிதன் அல்ல. மனைவி தன்னை மதிக்காது எல்லோர் முன்னிலையிலும் அவமானப்படுத்தி அனுப்பி விட்டாள் என்பதை அவன் மறக்கவேயில்லை. பூனை போல் பதுங்கியிருந்து, சமயம் வந்ததும் அவளைப் பலவந்தமாகத் தன்னுடன் கூட்டிச் செல்ல வந்து விட்டான். இனி அவன் அவளை எப்பாடுபடுத்துவானோ இவ்வளவு நாட்களாக சண்டித்தனம் செய்து ஏமாற்றியதற்காக அவளை அவன் மிகவும் இம்சித்துத் துன்பப் படுத்தக் கூடும்.

தெரிந்தவர்கள், உற்றார் உறவினர் ஒருவரும் இல்லாத கண்காணாத இடத்திற்கு அவளை அழைத்துச் சென்று, அங்கே அவன் அவளைக் கொலை செய்தாலும் உதவிக்கு ஒருவரும் வரப்போவதில்லை. பலவாறு எண்ணி மனம் குமுறிய மரகதத்திற்கு அவனை ஏறிட்டுப் பார்க்கக்கூட பயமாகத்தான் இருந்தது.

இந்தக் கண்ணீரும் கம்பலையும் எதற்கு? உன்னை நான் மென்றா தின்றுவிட்டேன்? புருஷன் வீட்டிற்குப் புறப்படும் பெண்ணின் முகத்தைப் பார்! முதல் தடவை என்னுடன் புறப்பட்டு இரவில் ஓடி வரும் பொழுது இந்தக் கண்ணீர் எங்கே மறைந்து கிடந்தது? அப்பொழுது உன்னை மந்திரத்தால் மயக்கி அழைத்துக் கொண்டு போய் விட்டேன் இல்லையா?" என்று அதட்டினான், அவன்.

மரகதம் பதில் பேசாது தலையைக் குனிந்து கொண்டு மெல்ல விம்மிக் கொண்டிருந்தாள். "போதும் அழுதது. கண்ணைத் துடைத்துக் கொண்டு முகத்தைச் சரிப்படுத்திக்கொள். ஸ்டேஷனுக்குச் சமீபத்தில் வந்து விட்டோம். உன் தந்திரம் ஜாலவித்தை யெல்லாம் என்னிடம் இனிப் பலிக்காது என்பதை இன்றைய அனுபவம் உனக்கு

அறிவிக்கட்டும். ஆமாம், முகத்தைச் சீக்கிரம் துடைத்துக் கொள். கட்டின கணவனுடன் ஊருக்குப் போவதற்கு எ இந்த ஓலம்?'' என்றான் கோபத்துடன் உரத்த குரலில். அதற்கு மேல் அழுது கொண்டிருக்க மரகதத்திற்கு துணிச்சல் ஏற்படவில்லை. முகத்தைத் திரும்பிப் பாராது பயத்துடன் அவள் சட்டென கண்ணீரைத் துடைத்துக் கொண்டு மௌனமானாள்.

இரண்டாம் வகுப்பு பெட்டியிலே எங்கே போகிறோம் என்று யோசனையின்றி மரகதம் கணவனு டன் ரயிலிலே பிராயணம் செய்து கொண்டிருந்தாள். அவர்களுடன் அந்தப் பெட்டியில் வேறு இரண்டு பிரயாணிகள் இருந்தனர். சிவராஜன் அவளிடம் பேச்சுக் கொடுக்காது வாளா விருந்தான். இரவின் நிசப்தத்தைக் கிழித்துக் கொண்டு வேகமாக ஓடிக்கொண்டிருந்த வண்டித் தொடரைப்போல் மரகதமும் துயரப் பெரு மூச்செறிந்தாள்.

ஜன்னல் ஓரமாக வெளியே தெரிந்த இருண்ட வானத்தை வெறித்துப் பார்ப்பவள்போல் உட்கார்ந்திருந்த அவள், அடிக்கொரு தடவை, எதிர்ப்புற ஆசனத்தில் அன்றைய தினசரிப் பத்திரிக்கை ஒன்றைப் படித்துக் கொண்டு உட்கார்ந்திருந்த சிவராஜனை பீதியுடன் கடைக் கண்ணால் கவனித்துக் கொண்டிருந்தாள். கண்ணுக்குப் புலனாகாது வெளியே பரவிக்கிடந்த இருளைப் போல், அவளால் ஊகிக்க முடியாதிருந்த அவளது எதிர்கால வாழ்க்கை அவளுக்குத் தாங்கொணா திகிலை உண்டாக்கியது.

'சங்கதியைக் கேள்விப்பட்டதும் அம்மா துடித்துப் போய் விடுவாளே? அப்பா என்ன நினைப்பார்? கூட வந்த பெண்கள் ஊரில் போய் என்னவெல்லாம் கதை திரித்துப்



பேசிக்கொள்கிறார்களோ?' என்று பலவாறு தனக்குள்ளே எண்ணிக் குழம்பிக் கொண்டிருந்தாள் மரகதம்.

அடுத்த ஸ்டேஷனில் வண்டியிலிருந்த இரண்டு பிரயாணிகளும் இறங்கிவிட்டனர். உடனே வேறு எவரும் வந்து ஏறிக்கொள்ளாததினால், பெட்டியில் அவர்கள் இருவரும் மட்டும்தான் தனியாக இருந்தனர். வண்டி நகர ஆரம்பித்ததும் மரகதத்தின் இதயம் பயத்தில் திக்திக் கென்று அடித்துக் கொள்ள ஆரம்பித்தது. சிவராஜன் பக்கம்கூட திரும்பிப் பார்க்கத் துணிவின்றி அவள் வெளியே பார்த்தபடியே உட்கார்ந்திருந்தாள்.

''வண்டியில் ஏறுமுன் உங்கப்பாவுக்கு ஒரு கடிதம் எழுதிப் போட்டுவிட்டு வந்தேன். உன்னை நான் வந்து அழைத்துக் கொண்டு போகிறேன் என்ற சங்கதி அவருக்கு நாளைக் காலைத் தபாலில் தெரிந்துவிடும்'' என்று கூறினான் சிவராஜன்.

திடீரென்று அதைக் கேட்ட மரகதம் திடுக்கிட்டுப் போனாள். தனது மனத்திற்குள்ளே அலைபாய்ந்து கொண்டிருந்த திருட்டு யோசனைகளை அவன் எப்படி அறிந்துகொண்டான் என்ற வியப்பு அடைந்த அவள், திகைப்புடன் ஜன்னலினின்று திரும்பிப் பார்த்தாள். அது வரையிருந்த கடுமையான பாவம் சிவராஜன் முகத்தினின்று மறைந்திருந்தது.

அதற்குப் பதில் அவன் கண்களில் பாசமும் பரிவும் மிதந்து கொண்டிருந்தன. அவனது முகத்திற்கே உரித்தானது போன்ற அந்த சாகஸப் புன்னகை அவனது இதழ்களில் தவழ்ந்து விளையாடிக் கொண்டிருந்தது. கண்களைத் தாழ்த்திக்கொண்டு கீழே உற்றுப் பார்ப்பவள்போல் வளாவிருந்தாள் அவள்.

''ஆமாம் நீ ஒன்றும் சாப்பிடவில்லையே! பகலில் உங்கள் வீட்டில் சாப்பிட்டதுதான் இல்லையா? எனக்கு பசிக்கிறது. ஸ்டேஷனில் தயிர்ச்சாதப் பொட்டலம் இரண்டு வாங்கி வைத்திருக்கிறேன். இதைச் சாப்பிடு'' என்று தணிவாகக் கூறிய சிவராஜன், அவளருகில் ஒரு காகிதப் பொட்டலத்தை வைத்தான். மரகதம் அவனைச் சுட்டுவிடுகிறவள் போல் கோபத்துடன் விறைத்துப் பார்த்துவிட்டு முகத்தைத் திருப்பிக் கொண்டாள். சிவராஜன் தனது போஜனத்தை முடித்துக்கொண்டு கையைக் கழுவிவிட்டு, திரும்பி வந்து ஆசனத்தில் உட்கார்ந்து கொண்டான்.

மரகதத்தின் அருகிலே சாதப் பொட்டலம் அவிழ்த்து பாராது அப்படியே கிடந்தது ''ஏன் சாப்பிடப் போவ தில்லையா? உண்ணாவிரதமோ?'' என்று பரிகாசமாகக் கூறிக்கொண்டு அருகில் வந்து உட்கார்ந்து கொண்டான். மின்சாரத்தினால் தாக்குண்டவள் போல் துள்ளிக் குதித்து எழுந்து நின்ற மரகதம் ஒரே எட்டில் கதவு அருகில் போய் நின்று கொண்டாள். ''என்ன இது? ஏன் இப்படி என்னைக் கண்டு மிருளுகிறாய் பட்டிக்காட்டு மாட்டைப்போல்!'' என்று பரிகாசமாகக் கேட்ட சிவராஜன் எழுந்து அவள் அருகில் சென்றான்.

வண்டியின் கதவைப் பிடித்துக்கொண்ட மரகதம் கோபத்துடன் புலிபோல் உறுமிக் கொண்டு அவன் பக்கம் திரும்பி ''என் அருகில் வந்தால் தெரியுமா? நான் வண்டியிலிருந்து குதித்துச் செத்துவிடுவேன்!'' என்றாள். அவளது கண்ணில் பெருகிய கண்ணீர் தாரை தாரையாக கன்னங்களின் மீதும் வழிந்தோடியது.

அவளது வார்த்தைகளைக் கேட்ட சிவராஜன் ஒரே கணத்தில் திகைத்துப்போய் நின்றான். ஆனால் மறுகணம்



அவனுக்குத் தாங்கொணாக் கோபம் பொங்கிக் கொண்டு வந்தது. சட்டென ஒரு அடி முன் வந்து அவளது கரத்தைப் பிடித்து அவளை கரகரவென்று இழுத்துச் சென்று ஆசனத்தில் பலவந்தமாக உட்கார வைத்தான்.

தனது கரங்களை அவனது பிடியினின்று கோபத்துடன் உதறிவிடுவித்துக்கொண்ட மரகதம், கண்ணீர் வழிந்த தனது அழகிய விழிகளால் அவனைக் குரோதமும் வெறுப்பும் பொங்க ஆத்திரமாகப் பார்த்தாள். உன்னைச் சாது என்று எண்ணி ஏமாந்துவிட்டேன். ரொம்ப அடம்பிடிக்கிறாயே. ஆனால் உன் அடம் என்னிடம் பலிக்காது என்பதைத் தெரிந்துகொள். இந்தத் தடவையும் போனால் போகிறது என்று உன்னை மன்னிக்கிறேன். ஊம், ஆகட்டும், சாதத்தை முதலில் சாப்பிடு. சாப்பிட்டுவிட்டு, பிறகு அழலாம்!'' என்று கடினமான குரலில் அதட்டினான் சிவராஜன்.

இதற்குள் வண்டி ஒரு ஸ்டேஷனில் வந்து நின்றது. அவர்கள் இருந்த பெட்டியில் இரண்டு பிரயாணிகள் அவசரமாக ஓடி வந்து ஏறிக்கொண்டனர். இதுதான் சமயம் என்று காத்திருந்தவள் போல் புடவைத்தலைப்பால் முகத்தைத் துடைத்துக் கொண்டு, மிகவும் துணிச்சலுடன் அருகிலிருந்த சாதப் பொட்டலத்தை எடுத்து சிவராஜன் பார்த்துக் கொண்டிருக்கையிலேயே ஜன்னல் வழியே வெளியே விட்டெறிந்தாள் மரகதம்.

## 6

அதற்குப்பின் அவர்களது நீண்ட பிரயாணம் மௌனத்திலேயே முடிந்தது. பொழுது புலரும் தருவாயில் வண்டியை விட்டு ஒரு சிறு ஸ்டேஷனில் இறங்கிய அவர்கள், மீண்டும் தங்கள் பிரயாணத்தை மாட்டுவண்டி

ஒன்றில் ஆரம்பித்தனர். மரகதத்திற்குத் தான் செல்லும் இடம் இன்னதெனப் புரியவில்லை. ராஜபாட்டை யினின்று குறுக்கே திரும்பிய மாட்டுவண்டி கரடு முரடானதொரு சிறு பாதைக்குள்ளே புகுந்து மெல்ல ஆடி அசைந்து கொண்டு சென்றது.

கண்ணுக்குத் தெரிந்த பிரதேசமெல்லாம் ஆள் மட்டத்திற்கு கள்ளிப் புதர்களும், ஓங்கி உயர்ந்த மரங்களுமாக ஒரே பசுமையாகக் காட்சியளித்தன. செப்பனிடாத பாதையிலே சிரமத்துடன் சென்று கொண்டிருந்த வண்டி இப்படியும் அப்படியும் குலுக்கியதினால் மரகதத்தின் முதுகு இரண்டாகிவிடும் போல் நோவு எடுத்தது. முடிவே அற்றது போல் பயமுறுத்திக் கொண்டிருந்த அந்தப் பிரயாணம் சூரியன் உச்சியை அடைந்த தருவாயில் ஒரு வழியாக முடிந்தது.

மலைப்பாங்கான ஒரு இடத்திற்கு வந்ததும் வண்டி சட்டென்று நின்றது. வண்டிக்காரனுக்குக் கூலியைக் கொடுத்து அனுப்பியபின் சிவராஜன், சமீபத்தில் தெரிந்த ஒரு ஒற்றையடிப் பாதைக்குள் நுழைந்தான். இன்னும் போக வேண்டுமா? என்று கேட்பதுபோல் அலுப்புடன் பெருமூச்செறிந்தாள் மரகதம். அவளது அந்தரங்க சிந்தனையை அறிந்து கொண்டவன்போல் சிவராஜன் சிறிது தூரம்தான் இருக்கிறது. கவலை வேண்டாம்'' என்றான்.

கொஞ்சதூரம் சென்றதும் ஒரு சிறு கூரை வீட்டின் முன் வந்து நின்ற சிவராஜன் பையிலிருந்த சாவியை எடுத்து வாயிற் பூட்டைத் திறந்தான். மரகதம் சுற்றும் முற்றும் திகைப்புடன் பார்த்துக் கொண்டாள். அந்தச் சிறு வீட்டைத் தவிர வட்டாரத்திலே கண்ணுக்குத் தெரிந்தமட்டில் வேறு வீடு ஒன்றும் காணப்படவில்லை.



வானளாவிய அடர்ந்த பெரிய மரங்களும், இடையிடையே, கறுத்த பெரும் பூதம்போல் தனித் தனியே சிதறிக் கிடந்த பெரும் கற்பாறைகளும், வெகு தொலைவில் தெரிந்த நீண்டதொரு மலைத்தொடரும் அவளுக்கு மிக்க பயத்தை உண்டுபண்ணியது. ''இதுதான் நான் வேலை செய்யும் இடம். இனி நீ என்னுடன் உன் வாழ்நாள் முழுவதும் இந்த வீட்டில்தான் வசிக்க வேண்டும்'' என்று கூறிய சிவராஜன் வீட்டிற்குள்ளே மிகவும் சுவாதீனமாகச் சென்றான்.

எதிரே தெரிந்த மரங்களின் நிழலில் அங்கங்கே சேமித்து வைக்கப்பட்டிருந்த சிறு கற்களின் குவியலைக் கண்ணுற்ற மரகதம் மௌனமாக அவனைத் தொடர்ந்து உள்ளே சென்றாள். அவள் எதிர்பார்த்ததுபோல் அந்த வீடு கவனிப்பாரற்று தூசியும் துப்பலுமாக இருக்கவில்லை. அதற்குப் பதில் தரை நன்றாக மெழுகி வைக்கப்பட்டு மிகவும் சுத்தமாக இருந்தது. அடுப்பருகில் அவர்கள் வரப்போவதை முன்கூட்டி அறிந்தவர்கள் போல் யாரோ தயாராகச் சமைத்து மூடிவைத்திருந்ததைக் கண்ட அவளுக்கு வியப்பாக இருந்தது.

புழக்கடைக் கதவைத் திறந்து சென்ற சிவராஜன், சிறிது நேரத்தில் குளித்துவிட்டு உள்ளே வந்தான். எதிர்ப்புறமாக இருந்த சிறு அறைக்குள்ளே சென்ற அவன், சில நிமிஷங்களில் சலவை செய்த சுத்தமான ஆடைகளை அணிந்து கொண்டு வெளியே வந்தான். ''எல்லாம் உனக்கு ஒரே அதிசயமாக இருக்கிறதா?'' வீடு சிறியதாக இருந்தாலும் உனக்கு குறைவு ஒன்றும் இருக்காது!'' என்றான் புன்னகையுடன்.

அதற்குப் பதில் சுடச்சுடக் கூறவேண்டும் என்று ஆத்திரத்துடன் வாயைத் திறந்த மரகதம் யாரோ அங்கு வரும்

காலடி ஓசை கேட்டு திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தாள். ''தம்பி! பெண்ஜாதியைக் கூட்டி வந்துட்டியா? அந்திப் பொழுதான் வருவீங்கன்னு நினைச்சேன். எதுக்கும் கொஞ்சம் ஆக்கி வச்சிருப்போமின்னு காலையிலே சமைச்சு வச்சிட்டு ஊட்டுக்கு போயிருந்தேன்'' என்று உரத்த குரலில் கூறிக்கொண்டு உள்ளே நுழைந்த கிழவி மரகதத்தை விழுங்கி விடுகிறவள் போல் ஆர்வத்துடன் ஏற இறங்கப் பார்த்தாள்.

''இந்த ஆயாதான் எனக்கு இத்தனை வருஷமாச் சோறு சமைத்துப் போட்டு வீட்டைக் கூட்டி சுத்தமாக வைத்திருந்தவங்க. இனிமே இவங்களுக்கு பென்ஷன் கொடுக்க வேண்டியதுதான். நமது தனிமையைக் கலைக்க யாரும் குறுக்கிடுவதை நான் விரும்பமாட்டேன். நாம் இன்று இங்கே வரப்போறது இவங்களுக்குத் தெரியும். பக்கத்து கிராமத்திலே இருந்து, பாவம், வெயிலைப் பொருட்படுத்தாமல் நடந்து வந்திருக்காங்க'' என்று சிவராஜன் அந்தக் கிழவியை அறிமுகப்படுத்தினான்.

''தம்பி நீ சாப்பிட உட்கார். அந்தப் பொண்ணு போய்க் குளிச்சிட்டு வரட்டும். பாவம் ராவு முழுவதும் தூங்காதது போல இருக்கு. மூஞ்சி வாடிக்கிடக்குது'' என்றாள் கிழவி.

''ஆயா சொல்றது காதில் கேட்கலையா? போய் புழக்கடைக் கிணற்றுக்குச் சென்று குளித்துவிட்டு வா. பசி வயிற்றைக் கிண்டுது. சாப்பிட வேண்டாமா?'' என்றான் சிவராஜன்.

'அப்படி அதட்டாதே தம்பி! இப்பத்தானே வீட்டுக்கு வந்திருக்கு. அதுக்கு என்ன தெரியும்?'' என்று பரிந்து பேசிய கிழவி, விழித்துக்கொண்டு நின்ற மரகதத்தை எதிர்ப்புறத்து அறைக்குள்ளே அழைத்துச் சென்றாள்.



''உனக்கு வேண்டிய சாமான் எல்லாம் தயாராக வாங்கி வச்சிருக்கு. அந்தப் பீரோவுக்குள்ளே எல்லாம் இருக்கு. எடுத்துக்க'' என்று கூறி மெல்ல நகைத்தாள் கிழவி.

சுற்றிலும் ஒரு முறை கவனித்த மரகதத்திற்கு தன் கண்களையே நம்ப முடியவில்லை. சிவராஜன் சுகபோகத்தை மிகவும் ரசிக்கிறவன் என்று அறிவுறுத்துவது போல், அறையின் ஒரு பக்கத்தில் பெரிய மரக் கட்டிலும், அதன்மீது மிருதுவானதொரு பஞ்சணையும் கிடந்தது. எதிர்ப்புறத்து மேஜையை ஒட்டினாற்போல் முழு உருவமும் தெரியக் கூடிய பெரிய நிலைக்கண்ணாடி தொங்கிக் கொண்டிருந்தது. மேஜை மீது வரிசையாக வைக்கப் பட்டிருந்த பவுடர் டப்பா, சோப்புப் பெட்டி, சீப்பு, தைல பாட்டில்கள் முதலிய அழகு சாதனங்களைக் கண்டதும் அவளுக்கு மிகவும் ஆச்சரியமாக இருந்தது.

''உனக்குத் தேவையான சேலைகளை இந்த பீரோவில் வச்சிருக்கு. எடுத்துக்கம்மா'' என்று கூறிய கிழவி மிகவும் உரிமையுடன் அறையின் மூலையிலிருந்த சிறு மர பீரோவைத் திறந்தாள். அடுக்காக மேல் தட்டுகளில் சலவையிலிருந்து வந்த சிவராஜனின் ஆடைகள் வைக்கப்பட்டிருந்தன. கீழ்த்தட்டு ஒன்றில் நான்கு புதிய நூல் சேலையும், அதற்கு ஏற்ற ரவிக்கைகளும் வைத்திருப்பதைக் காண அவள் வியப்படைந்து போனாள்.

'போன வாரம் டவுனுக்கு போனப்போ தம்பி இதையெல்லாம் வாங்கி வந்தது. ஆறு மாசமா உங்கப்பா உன்னை இங்கே அனுப்பமாட்டேன்னுட்டாராமே அதனால் உன்னை கூட்டிவரச்சே வெறும் கையுடன் கூட்டியாரப் போறதினாலே முதல்லே உனக்கு வேண்டியதெல்லாம் வாங்கி வச்சாகணுமின்னு சொல்லிக்கொண்டு இதை

யெல்லாம் வாங்கியாந்தது. ஏதாவது ஒரு சேலையை எடுத்துக்கிட்டு போய் கிணற்றடியிலே இருக்கிற சின்ன அறையிலே குளிச்சிட்டு வாம்மா. நேரமாகுது'' என்றாள்.

தன்னைப்பற்றி அந்தக் கிழவியிடம் சிவராஜன் இன்னும் என்னவெல்லாம் கூறியிருக்கிறானோ என்று நினைக்கையிலேயே மரகதத்திற்கு அவமானம் தாளமுடியவில்லை. அவளை எப்படியாவது இங்கே அழைத்து வந்துவிடுவது என்று சிவராஜன் முன்கூட்டியே திட்டமிட்டிருக்கிறான் என்பதை ஆயாளிடமிருந்து அறிந்ததும் அவளுக்கு அவன் மீது ஏற்கெனவே ஏற்பட்டிருந்த கோபம் இன்னும் அதிகரித்தது.

இருக்கட்டும், மரகதம் எப்படிப்பட்டவள் என்பதை இவருக்குக் காண்பிக்கிறேன் எனத் தனக்குள்ளே ஆத்திரத்துடன் கறுவிக் கொண்டு, பீரோவில் கைக்கு எட்டிய புடவை ஒன்றை வெறுப்புடன் எடுத்துக்கொண்டு குளிக்கப் புழக்கடைக்குச் சென்றாள்.

''வயிறு மந்தமாக இருக்கிறது. ராத்திரி சாப்பிடுகிறேன். என்னைத் தொந்தரவு செய்யாதீங்க பாட்டி!'' என்று கூறிவிட்டு, தாழ்வாரத்தில் களைப்புடன் படுத்துவிட்டாள் மரகதம். பசி, இரவு முழுவதும் விழித்திருந்த சோர்வு, கருணையற்று எரித்துக் கொண்டிருந்த வெயில் எல்லாம் சேர்ந்துகொள்ளவே அவள் தன்னையுமறியாது தூங்கிவிட்டாள்.

திடுக்கிட்டு எழுந்து உட்கார்ந்த அவள், சூரியன் அஸ்தமித்து நன்றாக இருட்ட ஆரம்பித்துவிட்டதை உணர்ந்தாள். ''எழுப்பவேண்டாமின்னு பார்த்தேன் நேரமாச்சு. நான் கிராமத்துக்குத் திரும்பணும். இங்கிருந்து மூணு கல்லு தூரம் நடக்கணும். ராத்திரிக்கு சமையல் செய்து வச்சுட்டேன்.



இனிமேலே நீதான் உன் புருஷனைக் கவனிக்கணும். இன்னும் ஒரு பத்து நாள் இந்தப் பக்கமே வரமுடியாது. என் பேரனுக்கு பக்கத்து ஊரிலே கலியாணம். பேரன் பொண்டாட்டி வந்துட்டாக்க நான் வீட்டை விட்டு அதிகமாக அங்குமிங்கும் போக முடியாது. தம்பிகிட்ட சமைச்சு போட வேறே யாரினாச்சும் ஆள் இனி பார்த்துக்க வேணுமின்னு சொல்லிக்கிட்டிருந்தேன். நல்லவேளை உன்னை கூட்டியாந்து விட்டது! நான் போய் வரட்டுமா? கதவை எப்பவும் சாத்தி வச்சுக்கோ. யாரினாச்சும் தட்டினா பெயரைக் கேட்டுத்தான் திறக்கணும். தம்பி அப்படி உன்னைத் தனியா விட்டுவிட்டு எங்கேயும் போயிடாது. இருந்தாலும் நீ ஜாக்கிரதையா இருந்துக்க. போயிட்டு வரேன்'' என்று கூறிவிட்டு கிழவி விடை பெற்றுக்கொண்டு சென்றாள்.

கதவைத் தாளிட்டுக் கொண்டு உள்ளே வந்த மரகதம், எதிர்புறத்து அறையில் ஒரு ஹரிக்கேன் விளக்கின் அருகில் பத்திரிகை ஒன்றை படித்துக்கொண்டு படுக்கை மீது சாய்ந்தவாறே சிவராஜன் உட்கார்ந்திருப்பதைக் கண்டாள்.

''ஆயா வீட்டுக்கு புறப்பட்டு விட்டதா? போகும் முன்னாடி உபதேசம் பலமாக இருந்ததே! ஆமாம் உனக்குச் சமைக்கத் தெரியுமா? தெரியாவிட்டாலும் பரவாயில்லை. எனக்கும் உனக்கும் தெரிந்ததைக் கொண்டு சமாளித்து விடலாம். இந்தச் சிறு வீட்டிலே நம் இருவரைத் தவிர வேறு யாரும் வசிப்பதை நான் விரும்பவில்லை. ஆயாள் இனி வர முடியாது என்றதும் எனக்கும் சந்தோஷமாகத்தான் இருக்கிறது. அந்தக் கிழவிக்கு சமையல் ஞானம் ரொம்பவும் குறைவு. ஐந்தாறு வருஷமாக எனக்கு அவள் சமையலை சாப்பிட்டு நாக்கு அலுத்து விட்டது'' என்று பரிகாசமாகக் கூறியபடி அவன் எழுந்தான்.

மரகதத்தின் இருதயம் பயத்தில் படபடவென்று அடித்துக் கொண்டது. திடீரென்று அவளுக்கு அதுவரை இருந்த தைரியமெல்லாம் மறைந்து விவரிக்க இயலாத ஒருவிதக் கலக்கம் அவளைப் பிடித்துக் கொண்டது. சுவரை ஆதாரமாகப் பிடித்துக் கொண்டு தனது பீதியை வெளியே அதிகம் காட்டிக் கொள்ளாமல் அவள் ஏளனமாக நின்று கொண்டிருந்தாள்.

''ஏ ராணி! இனி உன்னை நான் அந்தப் பெயரில் தான் கூப்பிடப்போகிறேன். என் பெயர் சிவராஜன். நீ எனது ராணி! கையை கழுவிக்கொண்டு வா. பகல்கூட நீ பட்டினி. இருவரும் சேர்ந்து சாப்பிடுவோம் வா'' என்று கனிவுடன் அழைத்தான். சாட்டையால் அடிபட்ட சர்க்கஸ் புலிபோல் அவனைக் குரோதமாக நிமிர்ந்து பார்த்த மரகதம்,''எனக்குச் சாப்பாடு வேண்டாம்!'' என்றாள் கோபத்துடன்.

''எத்தனை நாள் சேர்ந்தாற்போல் பட்டினி கிடப்பாய், என் கண்மணி! உண்ணாவிரதம் போதும். வா உட்கார். நான் சாப்பாடு எடுத்துப் போடுகிறேன். ரொம்பப் பிகு செய்தாயானால் குழந்தைக்குக் கொடுப்பது போல் உனக்கு நான் சாதம் பலவந்தமாக ஊட்ட நேரிட்டுவிடும்'' என்று சரஸமாகக் கூறியபடி, அவன் அவளது கரத்தை அன்புடன் பற்றினான்.

வெடுக்கென்று கரத்தை அவனது பிடியினின்று எடுத்துக்கொண்ட மரகதம் துள்ளிக் குதித்து ஒரு அடி பின் வாங்கி நின்றாள். பயம், இன்பம் என்று விவரிக்க இயலாத ஏதோ ஒரு புது உணர்ச்சியில் அவளுக்கு உடலே அனலாய்ப் பற்றி எரிவது போல் தோன்றியது. ''என் அருகில்



வந்தால் தெரியுமா?'' என்று மிரட்டும் குரலில் கிரீச்சிட்டுக் கத்தினாள்.

''ஏன் சபித்து விடுவாயோ?'' என்று பரிகாசமாகக் கேட்ட சிவராஜன் அவளை நெருங்கினான். ''என்னைத் தொடாதீர்கள். ஐயோ!'' என்று அலறிய மரகதம் ஆவேசம் பிடித்தவள்போல் ஒரே தாண்டலில் அடுப்பின் அருகில் பாய்ந்து சென்று, கிழவி சமையலுக்கு காய்கறி நறுக்க உபயோகித்த மாடத்திலே வைத்திருந்த சிறு கத்தியைக் கையில் எடுத்துக் கொண்டாள். ''என்னை நீங்கள் துன்புறுத்தினால் இதனால் குத்திக்கொண்டு நான் செத்துவிடுவேன். என் அருகில் வராதீர்கள். வந்தால் நிச்சயமாக நான் செத்து விடுவேன்'' என்று பைத்தியக் காரிபோல் கூக்குரலிட்டபடி, கத்தியைக் கரத்தில் நீட்டிப் பிடித்துக்கொண்டு நின்றாள்.

சிவராஜன் ஒரு விநாடி திகிலினால் ஸ்தம்பித்துப் போய் நின்றான். ஆனால் அடுத்த கணம் மரகதம் எதிர்பாராத விதம் அவன் அவளை நெருங்கி அவளது கரத்தை இறுக்கமாகப் பிடித்துக்கொண்டு விட்டான். அவளது கரத்திலிருந்த கத்தி தானே நழுவிக் கீழே விழுந்தது.

அதைக் காலால் உதைத்து தூரத்தள்ளிவிட்ட சிவராஜன், ''என்னை என்னவென்று நினைத்துக் கொண்டு இப்படி ஆட்டங்காட்டுகிறாய்?'' என்று உறுமியபடி, அவள் முகத்தை உற்றுப் பார்த்தான். மரகதத்தின் உடல் பயத்தால் நடுங்கியது. சிவராஜனது இரும்புப் பிடியினின்று தன்னை விடுவித்துக் கொள்ள முடியாத அவளுக்கு வீடே வேகமாக சுழல்வதைப் போன்ற ஒரு பிரமை ஏற்பட்டது. கண்கள் இருண்டன. மரகதம் கொடிபோல் துவண்டு மயக்கமாகக் கீழே சரிந்து விட்டாள்.

# 7

ஜன்னல் வழியே சில்லென்று வீசிய காற்றும், அத்துடன் முகத்தில் விழுந்த நீர்த்துளிகளும் மரகதத்திற்கு விழிப்பைக் கொடுத்தன. விசுக்கென எழுந்து உட்கார்ந்த அவளுக்கு தனது சூழ்நிலையைப் பற்றி அறிந்து கொள்ளச் சில நிமிஷங்கள் சென்றன. சிவராஜனின் மிருவான பஞ்சணை மீது அவள் படுத்திருந்தாள் வெளியே சோவென்று மழை கொட்டிக் கொண்டிருந்தது.

மேஜையருகிலிருந்த சாய்வு நாற்காலி ஒன்றில் சாய்ந்த வாக்கில் இவ்வுலக நினைவற்றவன் போல் நிம்மதியாகத் தூங்கிக் கொண்டிருந்தான் சிவராஜன். மரகதம் துயிலின்று எழுந்திருந்தால் சாப்பிடுவதற்காக ஒரு கண்ணாடி டம்ளரில் பால் கை எட்டுமிடத்தில் பத்திரமாக மூடி வைக்கப் பட்டிருந்தது.

விர்ரென ஜன்னல் வழியே வீசிய காற்றில் அணைந்து விடும் போல் மேஜை மேலிருந்த ஹரிகேன் விளக்கு துடித்தது. எழுந்து உட்கார்ந்த மரகதம் ஜன்னல் கதவுகளை ஓசைப்படாது சாத்திவிட்டாள். சுவரில் மாட்டியிருந்த கடிகாரத்தை நிமிர்ந்து பார்த்தாள். இரவு மணி இரண்டாகிக் கொண்டிருந்தது. அவளுக்கு திடீரென்று ஒரு புதிய யோசனை தோன்றியது. படுக்கையை விட்டு மெல்ல எழுந்து அறையை விட்டு அடிமேல் அடிவைத்து வாசற்பக்கம் வந்தாள்.

தாழ்ப்பாளை ஓசைப்படாது திறந்துகொண்டு வெளியே எட்டிப் பார்த்தாள். கண்ணுக்கு ஒன்றும் புலப்படாத இருட்டு சில்லென்று வீசிய குளிர்ந்த காற்று கொட்டிக் கொண்டிருந்த மழை - இவற்றை ஒன்றும் பொருட்



படுத்தாதவள் போல் துணிச்சலுடன் அவள் வந்த வழியே தலைதெறிக்க ஓடினாள்.

சிறிது தூரம் கூடச் சென்றிருக்கமாட்டாள். இருளில் அவளுக்கு திக்குத் திசை ஒன்றும் புலப்படவில்லை. எதற்காக ஓடுகிறோம். எங்கே ஓடுகிறோம் என்ற யோசனை யின்றி பித்தம் பிடித்தவள்போல் கால் வந்த வழியே ஓடிக் கொண்டிருந்த மரகதம், மழையினால் ஊறிப் பதமாயிருந்த சேற்றில் வழுக்கித் தரையில் மடாலென்று விழுந்து விட்டாள்.

எழுந்திருக்க முயன்ற தன்னை இரு கரங்கள் ஆதரவாக அணைத்துத் தூக்குவதை உணர்ந்த அவள், பயத்தால் கிரீச்சிட்டு அலறிவிட்டாள். "உம், போதும் உன் சாகஸம்! இப்படி நடக்கும் என்று எதிர்பார்த்தேன்.

"நான் தூங்குவதாகப் பாவனை செய்து கொண்டு தான் படுத்திருந்தேன். ஒவ்வொரு நிமிஷமும் காவல் காத்துக் கிடந்த என் கண்ணில் மிளகாய் பொடி தூவி விட்டு மழையில் ஓட ஆரம்பித்து விட்டாயே! எங்கே செல்வதாக யோசனை? இன்னும் கொஞ்சதூரம் சென்றிருந்தால் மலையிலிருந்து சிறுத்தைப்புலி உன்னை அடித்துத் தின்றிருக்கும். பைத்தியக்காரி" என்று அதட்டிய சிவராஜன், சிறு குழந்தையை வாரி அணைத்துத் தூக்குவதைப் போல், அவளைத் தூக்கிக் கொண்டு வந்து வீட்டிற்குள் சேர்த்தான்.

தனது முயற்சிகள் ஒன்றும் சிவராஜனிடம பயன் பெறாது தோல்வியடைந்ததைக் கண்டு அவமானமும் ஆத்திரமுமடைந்த மரகதத்திற்கு துக்கம் தாள முடிய வில்லை. கைகளால் முகத்தை மூடிக்கொண்டு தேம்பித் தேம்பி அழ ஆரம்பித்தாள்.

''அழுகை, ஆத்திரம், சண்டை, பேஷ்! நமது முதல் சந்திப்பு மிகவும் அழகாக இருக்கிறது. போய் உள்ளே சென்று முதலில் ஆடைகளை மாற்றிக்கொள். ஈரத்தில் ஊறிக் கொண்டிருந்தால் பிறகு ஜுரம் வந்து தொலைக்கும்'' என்று உத்தரவிட்ட சிவராஜன் நனைந்து போன தனது ஆடைகளை மாற்றிக்கொள்ள உள்ளே சென்றான்.

கண்ணீர் பெருகியபடி அப்படியே ஈர உடைகளுடன் பிடிவாதமாக உட்கார்ந்திருந்த மரகதத்தைக் காண, அவனுக்குக் கோபம் பீறிக்கொண்டு வந்தது. ''சொல்வதை கேட்கப் போகிறாயா, இல்லையா? உன்னுடன் எனக்குப் பெரும் ரோதனையாகப் போய் விட்டதே!'' என்று கர்ஜித்த அவன், அவளது கரங்களை முரட்டுத் தனமாகப் பற்றியபடியே அறைக்குள்ளே இழுத்துச் சென்றான்.

'ஐயோ!' என்று கூவியபடி சிவராஜன் தனது கரங்களை உடனடியாக எடுத்துக்கொள்ள நேரிட்டது. கோபம் தாளாத மரகதம் பெண்புலிபோல் தோள்மீது பலமாக பற்கள் அழுந்தி ரத்தம் துளிர்க்கும் வரைக் கடித்து விட்டாள். அவன் மேற்பார்வை செய்த இடத்தில் கல்லுடைக்கும் கூலிப் பெண்கள், தங்கள் கணவரிடம் வந்து சண்டையிடும் பொழுது உபயோகிக்கும் தற்காப்பு யுத்த சாதனத்தை, அவனது அன்பான மனைவி அவனிடமே உபயோகித்து விட்டாள்.

தோளின்மீது ஏற்பட்ட காயத்தை அழுத்திப் பிடித்துக் கொண்டு அப்படியே சிறிது நேரம் செயலற்று நின்று விட்டான். கௌரவமான குடும்பத்திலே சீரும் சிறப்புமாக வளர்ந்த அவனது மனைவி, கல்லுடைத்துப் பிழைக்கும் நாடோடி ஜாதிப் பெண்களைக் காட்டிலும் எந்த விதத்தில் உயர்ந்தவள்? அருவருப்புத் தாளாது சிவராஜன் சரேலென்று வெளியே சென்று விட்டான்.



அடுத்த நாள் தூக்கத்தினின்று எழுந்து மரகதம் தலைநோவு தாளாது தள்ளாடிக்கொண்டு தரைமீது உட்கார்ந்து விட்டாள். வெளியே செல்வதற்கு வேற்றுடை அணிந்துகொள்ள அறைக்குள்ளே வந்த சிவராஜன், மனைவியின் சோர்ந்த முகத்தையும் சிவந்த கண்களையும் கண்டு திடுக்கிட்டுப் போனான்.

பதினைந்து நாட்கள் மரகதம் இருமலும் ஜுரமுமாக படுத்த படுக்கையாகி விட்டாள். நோயின் வாதனை யினாலும் ஜுர வேகத்தினாலும் முதல் இரண்டு நாட்கள் தன்னுணர்வு கூட இன்றிச் சோர்ந்து கிடந்தாள் மரகதம். நோய் சிறிது குணம் அடைந்து ஜுரம் குறையத் தொடங்கிய பின்புதான், அவள் வீட்டில் ஏற்பட்டிருந்த மாறுதல்களை உணர முடிந்தது.

அன்றைய இரவு சம்பவத்திற்குப் பிறகு சிவராஜன் அவளிடம் நேரிடையாகப் பேசுவதையே விட்டு விட்டான். நோயாளியை கவனிக்கவும், வீட்டை நிர்வகிக்கவும் ஒரு சிறு பெண் அமர்த்தப்பட்டிருந்தாள். ஏறக்குறைய மரகதத்தின் வயதுடைய அந்தப் பெண்ணை அவன் சிட்டி என்று செல்லப் பெயரிட்டு அழைத்தான்.

''மரகதம் தூங்கினாளா? கஞ்சி சாப்பிட்டாளா? என்று தெரிந்து கொள்ள வேண்டிய விஷயங்களை அவன் மனைவியிடம் நேரிடையாக விசாரிக்காது, சிட்டியிடம் கேட்டு அறிந்து கொண்டான். நோயாளி படுத்திருந்த அறைக்குள் மிக முக்கியமான காரியமிருந்தால் ஒழிய, அவன் நுழைய முற்படவேயில்லை. ஏதேனும் சாமானை எடுக்க உள்ளே வந்தாலும் அந்தச் சமயங்களில் அவன் மரகதத்தின் முகத்தைக் கூட பார்க்க முயலவில்லை.

முதலில் மரகதம் கணவரின் பாராமுகத்தை வெகுவாகப் பாராட்டவேயில்லை. கணவன் தன்னிடம் அசட்டையாயிருப்பது ஒரு விதத்தில் நல்லதுதான் என்றும் ஆரம்பத்தில் எண்ணினாள்.

ஆனால் நாட்கள் செல்லச் செல்ல அவளையுமறியாது அவனது பாராமுகம் மரகதத்தின் உள்ளத்தை வாட்டியது உண்மையே. தாயின் மடியில் படுத்துக் கொண்டு சிறு நோவிற்கும் அவள் அழுது ஆர்ப்பாட்டம் செய்யும் சுபாவமுடையவள். நெஞ்சைப் பிளந்து கொண்டு எழுந்த இருமலின் வேதனையை அவளால் தாள முடிய வில்லை. "ஏன் இருமுகிறாய்? வேதனையாக இருக்கிறதா? மருந்து சாப்பிடுவதுதானே?" என்று வெறும் உபசரணையாக வேனும் ஏதும் விசாரிக்காது, புஸ்தகம் ஒன்றைக் கையில் எடுத்துக் கொண்டு விளக்கடியில் உட்கார்ந்திருந்த கணவனது அசட்டை அவளுக்கு நோயைக் காட்டிலும் இரட்டிப்பு மடங்கு வேதனையைக் கொடுத்தது. மரகதம் அவ்வளவு முரண்டு கொண்டிருந்தும் முதல்நாள் அவன் அவளிடம் காட்டிய அந்தப் பரிவு இப்பொழுது எங்கே? திடீரென்று அது மறைந்து போனதற்குக் காரணம்?

சிவராஜனிடம் அந்தச் சில நாட்களில் ஏற்பட்டிருந்த மன மாறுதலின் காரணம் யாது என்பதையும், அவளால் ஊகித்தறிய முடியாமற் போகவில்லை. சிட்டி அந்த வீட்டில் வேலைக்காரி என்ற நிலையில் இல்லாது மிகவும் உரிமையுடன் பழகியதை மரகதம் கவனித்தாள். நோயாளி என்று கண்களை மூடிக்கொண்டு கட்டிலில் படுத்திருந்தாலும், வீட்டில் நடந்த ஒவ்வொரு விஷயத்தையும் அவளது சுறுசுறுப்பான மூளை விரைவில் கிரகித்துக்கொண்டு விட்டது.



"சிட்டி!" என்று அழைத்த சிவராஜன் குரல் மிகவும் கனிவாக ஒலித்தது. அவன் கூப்பிடு முன்பே அவனது ஏவலுக்காகப் பறந்து ஓடிச் சென்ற அந்தப் பெண் அலாதியான உற்சாகம் காட்டினாள். வெளியிலிருந்து சிவராஜன் கதவைத் தட்டுகையில் அவள் கண்களில் மின்னலைப் போல் தோன்றி மறைந்த அந்த மகிழ்ச்சிக் குறி - ஒவ்வொன்றையும் மரகதம் காணத் தவறவில்லை.

'சிட்டி என்ற இந்தப் பெண் யார்? இவளுக்கு சிவராஜனிடம் இவ்வளவு உரிமை என்ன? சிவராஜனுக்கு ஏன் சிட்டியிடம் இத்தனை பாசம்?' என்று பலவாறு எண்ணிய மரகதத்தின் உள்ளம் பொறாமையினால் கொந்தளித்தது.

ஆம்! மரகதம் சிவராஜனை வெறுக்கவில்லை. வெறுத்தால் அவள் மனம் ஏன் அவனது பரிவிற்காக ஏங்க வேண்டும். அவனது அசட்டை, அவளது உள்ளத்தை ஏன் உறுத்த வேண்டும்? எல்லாவற்றையும் விட அந்தப் பெண்ணிடம் காட்டும் பரிவு அவள் மனதிலே ஏன் பொறாமையைக் கிளறி விடவேண்டும்?

அன்று பகல் மரகதம் படுக்கையினின்று எழுந்து உட்கார்ந்திருந்தாள். சிட்டி புழக்கடையில் வேலையாக இருந்தாள். மரகதம் நோயாகப் படுத்திருப்பதைக் கேள்விப் பட்ட கிழவி அவளைக் காண கிராமத்திலிருந்து வந்திருந்தாள்.

கிணற்றடியில் சோற்றுப் பானையைக் கழுவிக் கொண்டிருந்த அந்தப் பெண்ணைக் கண்டதும் கிழவி முகத்தை வெறுப்புடன் சுறுக்கினாள். "ஆமாம்! உனக்கு உடம்புக்கு காயல் என்றதும் என்னையேன் கூப்பிட்டனுப்பவில்லை? இவளை எதற்காக உள்ளே விட்டாய்?

இவள் மிகவும் பொல்லாதவள் ஆயிற்றே'' என்றாள் கிழவி தாழ்ந்த குரலில்.

அவள் சொல்லப்போகும் விஷயத்தை ஒருவாறு மரகதத்தினால் ஊகிக்க முடிந்தது. எனினும் அவள் நெஞ்சு ஆவலில் படபடத்தது. ''ஏன் அப்படிச் சொல்றீங்க பாட்டி?'' என்று நாத்தடுமாற முகம் சிவக்கக் கேட்டாள்.

''உன் நன்மைக்குத் தான் சொல்கிறேன். இவளை முதலில் வெளியில் அனுப்பிவிடு. உன்னைக் கட்டிக் கிறதுக்கு முந்தி இந்தப் பெண்ணுடன் உன் புருஷன் கொஞ்சம் சிநேகமா இருந்தான்னு இந்தப் பக்கத்திலே எல்லோரும் பேசிக் கொள்றாங்க'' என்று ரகசியமாகக் கூறினாள் கிழவி.

மரகதத்தின் உள்ளம் அலை பாய்ந்தது.

''அப்படியா?'' என்று கேட்ட அவளுக்குத் துக்கம் நெஞ்சை அடைத்தது.

''கல்யாணம் இல்லாது தனியா வயது வந்த புருசன் இருந்தால் அப்படித்தானே முன்னே பின்னேன்னு இருப்பாங்க. நடந்ததைப் பற்றி நினைச்சு வருத்தப் பட்டால் ஒண்ணும் லாபமில்லை. நாளைக்கே அந்தப் பெண்ணை முதல்லே வெளியிலே அடிச்சித் துரத்தி விட்டு மறு வேலை பார். உனக்கு உடம்பு சரியில்லை. இந்தச் சமயத்திலே இந்த மினுக்கி இங்கே தங்கி இருப்பது ரொம்ப ஆபத்திலே முடியும்'' என்று! உபதேசித்தாள்.

''சரி பாட்டி!'' என்று கூறிய மரகதம் பல்லைக் கடித்துக் கொண்டாள்.



சிவராஜன் அவள் கணவன்! அவனது அன்பு அவள் ஒருத்திக்குத்தான் சொந்தம். அதை அடைய வேறு யாருக்கும் உரிமையில்லை. என்ன முட்டாள்தனம்! சிவராஜன் எவ்வளவு அன்பான கணவன். அவன் அன்பை அறிந்து கொள்ள பொறுமையின்றி உதறித்தள்ளி அவனது வெறுப்பை யல்லவா சம்பாதித்துக் கொண்டாள் மரகதம்.

இனி அவள் அவனது அன்பை மீண்டும் திரும்பப் பெறுவது எப்படி? அதுவும் சிட்டி போன்ற ஒரு மோகனாங்கி வீட்டிற்குள் வந்து உட்கார்ந்து கொண்டு , சொக்குப் பொடி தூவி அவனைத் தன் பக்கம் இழுத்துக் கொள்ள ஒவ்வொரு நிமிஷமும் முயற்சி செய்து கொண்டிருக் கையில்...

அன்று இரவு மரகதத்திற்குத் தூக்கமே வரவில்லை.

## 8

சில தினங்கள் சென்றன. மரகதம் நோயினின்று பூரணமாகக் குணமடைந்து முன் போல் நன்றாக நடமாட ஆரம்பித்து விட்டாள். அன்று பகல் சாப்பாட்டிற்காக வீட்டிற்குத் திரும்பிய சிவராஜன், வீட்டிலே மரகதம் மட்டும் தனியே இருப்பதைக் கண்டு திடுக்கிட்டுப் போனான்.

''சிட்டி! ஏய் சிட்டி!'' என்று இரைந்து கூப்பிட்டான் அவன். அவனது குரலில் தொனித்த பரிவு மரகதத்திற்கு கோபத்தையும் துயரத்தையும் கொடுத்தது. எனினும், அவள் அதை வெளியே காட்டிக் கொள்ளாமல் ''சிட்டி இங்கே இல்லை. இனி அவள் தேவையில்லாததினால் அனுப்பி விட்டேன். எனக்கு உடம்பு நன்றாகி விட்டது.

நானே வீட்டுக்காரியங்களைக் கவனிக்கப் போகிறேன்'' என்று மூச்சு விடாது பேசி முடித்தாள் மரகதம்.

பல நாட்களுக்குப் பிறகு மிகவும் சகஜமாக கணவனிடம் அப்படிப் பேசுவதற்குள் அவளுக்கு சங்கோஜத்தினால் முகம் குப்பென்று சிவந்து போயிற்று. நெஞ்சு படபடவென்று துடித்தது. சிவராஜன் அதற்குப் பதில் அளிக்காது கூரை முகட்டை அண்ணாந்து பார்த்துக் கொண்டு வாளாவிருந்தான்.

''சம்பளப் பாக்கியையும் கணக்குத் தீர்த்துக் கொடுத்து அனுப்பிவிட்டேன்'' என்று கூறிய மரகதம் பதிலுக்கு அவன் முகத்தை ஆவலுடன் திரும்பிப் பார்த்தாள். ''உம்!'' என்று முனகிய சிவராஜன், அவள் பேசுவதை மேலும் கேட்க விரும்பாதவன் போல் எழுந்து அப்பால் சென்று விட்டான்.

அடுப்படியிலே சென்று உட்கார்ந்து கொண்டு சோற்றைக் கிண்டி விட்ட மரகதத்தின் உடல் அவமானத்தி னால் குன்றிப் போயிற்று. வெட்கத்தை விட்டு அவளே வெளியே சென்று சிவராஜனிடம் பேச்சுக் கொடுக்க முற்பட்டும் அவன் அவளை அசட்டை செய்தான்.

மரகதம், கணவன் வீடு வந்து, மாதங்கள் மூன்று சென்று விட்டன. சிட்டியை வெளியே அனுப்பி விட்டு நிர்வகிக்க முற்பட்ட தினத்திலிருந்து, அவளது வாழ்க்கையில் எவ்வித அபிவிருத்தியும் ஏற்படவில்லை. நாட்கள் செல்லச் செல்ல அவளுக்கும் அவளது கணவனுக்கும் இடையே ஏற்பட்டிருந்த மனப்பிளவு இன்னும் அதிகரித்துச் சென்றதைப்போல அவளுக்கு மிகவும் பிரமையளித்தது.



மரகதத்தின் பொறுமையும் அவளது முயற்சிகளும் சிவராஜன் மனதைச் சிறிதும் திருப்பவில்லை. வீட்டில் மனைவி என்பவள் ஒருத்தி இருக்கிறாள் என்ற உணர்வே அற்றவன்போல் சிவராஜன் மிகவும் விசித்திரமாக நடந்து கொண்டான். காலையில் எழுந்து ஸ்நானம் செய்து விட்டு வேற்றுடை உடுத்திக்கொண்டு மௌனமாக மனைவி அளித்த காலைப் பலகாரத்தைச் சாப்பிட்டுவிட்டு வேலைக்கு புறப்பட்டால் பகல் பொழுதுதான் அவன் வீடு திரும்புவான்.

கடுகடுவென்று இருக்கும் அவனது முகத்தை நிமிர்ந்து பார்க்கக்கூட சில சமயங்களில் மரகதத்திற்கு அச்சமாக இருக்கும். மௌனமாகவே அவள் அவனுக்கு பகல் போஜனம் பரிமாறுவாள். இரவு சாப்பாட்டிற்குப் பிறகு அவன் அறைக்கு வெளியே ஒரு கயிற்றுக் கட்டிலில் படுக்கையை விரித்துக் கொண்டு படுத்துவிடுவான்.

வெளியே செல்லுமுன் அவளிடம் சொல்லிக் கொண்டு போவதேயில்லை. குடிக்கத் தண்ணீர் வேண்டும் என்றால் கூட அவன் கேட்க விரும்பாதவன் போல் தானே சென்று எடுத்துக் கொள்வான்.

வலிய இரண்டொருமுறை தானே பேச்சுக் கொடுத்தும் அவன் சரியான பதில் கூறாததைக் கண்ட மரகதத்திற்கு மிகவும் அவமானமாகப் போய்விடவே, அவளும் பேசா மடந்தையாக மாறிவிட்டாள். சமையலுக்கு இது வேணும், வீட்டில் உப்பில்லை, பருப்பில்லை என்று அவள் வாய் திறந்து எதுவும் கேட்பதை நிறுத்திவிட்டாள்.

ஆனால் அவளுக்குக் கேட்கும்படியான திரப் பந்தத்தில் சிவராஜன் வீட்டைப் புறக்கணித்து விடவில்லை. அன்றாடம் வேலைக்குப் போய்விட்டு வீடு திரும்புகையில்

அவன் வீட்டிற்குத் தேவையான சாமான்களை வாங்கிக் கொண்டு வந்து போட்டு விடுவான். வாரத்திற்கு ஒருநாள் வந்த விடுமுறை தினத்தில்கூட அவன் வீட்டில் தங்குவதில்லை. ஊருக்கு பக்கத்து ஊரில் வாரந்தோறும் கூடும் சந்தைக்கு சாமான் வாங்கிவரச் சென்றுவிட்டு, அஸ்தமிக்கும் சமயத்தில்தான் அவன் வீட்டிற்கு வருவான்.

தனிமையும் கணவனது கடினமான பாராமுகமும் மரகதத்தின் உள்ளத்தை வெகுவாகத் துயரத்தில் ஆழ்த்தியது. கோபம் தணிந்து, வெறுப்பு மறைந்து, அந்தப் பழைய ஆர்வத்துடன் அவன் தன்னிடம் ஒரு வார்த்தை பேச மாட்டானா என்று ஏங்கி அவள் உள்ளம் நைந்து போய் விட்டாள்.

அன்று மாலை கிழவி கிராமத்திலிருந்து வந்தாள். வரும்பொழுது கையில் அவளுக்காக ஒரு சரம் மல்லிகைப் பூவை வாங்கிக்கொண்டு வந்திருந்தாள். பல நாட்களுக்குப் பிறகு மலரைக் கண்ணில் கண்ட மரகதத்திற்கு பலவிதமான இன்ப நினைவுகள் எழுந்தன. அபிராமியம்மாள் எவ்வளவு பொறுமையுடன் அவளது நீண்ட கூந்தலை வாரிப்பின்னித் தாழம்பூவை அழகாக வைத்து விடுவாள் என்று எண்ணிக் கொண்ட அவளுக்கு அவர்கள் எல்லோரையும் பார்க்க வேண்டும் என்ற அவா எழுந்தது.

"தலையைப் பின்னி பூவை வச்சுக்கோ! நேரமாகலை, தம்பி வீடு திரும்பர நேரம். முகத்தைக்கூட துடைச்சுக்காமல் இப்படி இருக்கிறியே. என் பேரன் பெண்சாதி உன்னாட்டம் இவ்வளவு அழகாகக் கூட இருக்கவில்லை. சுத்த கறுப்பு அந்தக் குட்டி. இருந்தாலும் அவள் பண்ணிக்கிற அலங்காரமும் மினுக்கும், அப்பப்பா சொல்ல முடியாது. ஆனால் நான் அவளைக் குத்தம் சொல்லலை. களைச்சுப்போய் வீட்டுக்கு



வர்ற புருஷனுக்கு சொகுசா பெண்டாட்டி நல்லா தலையைச் சீவிச் சிங்காரித்துக் கொண்டிருந்தால் தானே பார்த்துப் பேசப் பிடிக்கும்'' என்றாள்.

கடைசியாக கிழவி கூறிவிட்டு விடை பெற்றுக் கொண்ட அந்த வார்த்தைகள், மரகதத்தின் நெஞ்சை விட்டு அகலவேயில்லை. கணவன் மனதைக் கவர வேண்டுமானால் மனைவி சீவிச் சிங்காரித்துக் கொண்டு அவனை வரவேற்க வேண்டும்.

சே! என்ன முட்டாள்தனம். மாசு படிந்த ஆடையும், வாராது அலங்கிய கூந்தலுமாக தனது தோற்றத்திலே அவ்வளவு நாட்களும் அவள் அசட்டையாக இருந்ததினால் தான், சிவராஜன் அவளிடம் பாராமுகமாக இருக்கிறான். சோர்ந்த முகமும், கண்ணீரால் சிவந்த கண்களுமாகத் தினசரி அவள் எதிர்பட்டால் கணவனுக்கு அதைக் காண ஏன் வெறுப்பு ஏற்படாது? இந்தச் சிறு உண்மையை வயது வந்த பெண்ணான அவள் ஏன் அறிந்து கொள்ளவில்லை?

கிழவி வெளியே சென்றதும் மரகதம் அன்று தனது தோற்றத்திலே சிரத்தை செலுத்த ஆரம்பித்தாள். அநேக நாட்கள் அவசரத்தில் பின்னிக் கொள்ளப் பொழுதில்லாது கூந்தலை அள்ளிச் சொருகிக் கொண்டு பொழுதைக் கழித்த அவள் அன்று நிதானமாக தனது நீண்ட கரிய கூந்தலை மெல்ல வாரி அழகாகப் பின்னி முடித்தாள். முகத்தை கழுவிவிட்டு கண்ணாடி எதிரில் நின்று மிகவும் சிரத்தையுடன் அலங்காரம் செய்து கொள்ள ஆரம்பித்தாள்.

பொழுது அஸ்தமித்து நன்றாக இருட்டிய பின்பு தான் சிவராஜன் அன்று வெளியினின்று வீட்டிற்குத் திரும்பி வந்தான். புழக்கடைக்குச் சென்று அவசரமாகக் குளித்து விட்டு உள்ளே வந்த அவன், முதலில் ஒன்றையும்

கவனிக்கவேயில்லை. இலையில் சாப்பிட உட்கார்ந்த பொழுதுதான் கம்மென்று வீசிய மல்லிகை மலரின் மணத்தை உணர்ந்து திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தான்.

சாதத் தட்டை ஏந்தியபடி அழகு தேவதைபோல் என்றுமில்லாப் புதுபொலிவுடன் எதிரே வந்த மனைவி யைக் கண்டதும் அவனது உள்ளம் மகிழ்ச்சியால் துடித்தது. வைத்த கண் வாங்க மனமற்றவன்போல் தன்னை விழித்துப் பார்த்த கணவனின் முகத்தை நேருக்கு நேர் உற்றுப்பார்க்க மரகதத்திற்கு மிகவும் லஜ்ஜையாக இருந்தது.

விவரிக்க இயலாத ஆனந்தத்தில் அவனது உள்ளம் கொந்தளித்தது. லேசாகச் சிவந்த தனது முகத்தை மெல்லத் திருப்பிக்கொண்டு, உணர்ச்சியினால் நடுங்கிய கரங்களால் அவனுக்குச் சாதம் பரிமாறினாள். போஜனத்தை முடித்துக் கொண்டு கை கழுவி விட்டு கயிற்றுக் கட்டிலின்மீது வழக்கம் போல் உட்கார்ந்து கொண்டான் சிவராஜன்.

அவனது முகத்திலே அதுவரை குடியிருந்த அந்தக் கடுமை மறைந்து முன்போல் அந்த பழைய பரிவு அவனது கண்களில் மெல்ல மிதக்க ஆரம்பித்ததைக் கடைக் கண்ணால் பார்த்து அறிந்து கொண்ட மரகதம் மெய் மறந்து போனாள். வெற்றி! வெற்றி! என்று அவளது இருதயம் வெற்றி முரசு கொட்டுவதுபோல் ஆனந்தத்தில் வேகமாக அடித்துக் கொண்டது.

சிகரெட் ஒன்றைப் பற்ற வைத்துக்கொண்டு கட்டிலின் மீது உட்கார்ந்திருந்த சிவராஜனின் கண்கள் ஆர்வத்துடன் தன்னைப் பின்தொடர்வதை மரகதம் பார்க்காமலே உணர்ந்து கொண்டாள். சிவராஜன் அவளை உண்மையில் வெறுக்கவில்லை. அவனது அன்பை அவள் முயன்றால் திரும்பி அடைந்துவிட முடியும்.



வேலைகளை முடித்துக்கொண்டு புழக்கடைக் கதவைத் தாளிட்டுவிட்டு, தயங்கிக்கொண்டு கணவன் இருந்த பக்கம் வந்தாள் மரகதம்.

கையிலிருந்த சிகரெட்டைத் தூர எறிந்துவிட்டு எழுந்து உட்கார்ந்த சிவராஜன் அவளிடம் ஏதோ பேச வாயைத் திறந்தான். மரகதம் முகம் சிவந்து நெஞ்சு துடிக்க ஆவலுடன் அவன் முகத்தை நிமிர்ந்து பார்த்தாள் . அவளது இன்பத்தைக் குரூரமாகக் கலைக்க முற்பட்டதுபோல் வாசற்கதவை யாரோ தடதடவென்று தட்டினார்கள்.

''யாரது?'' என்று கேட்டுக்கொண்டு சிவராஜன் கதவைத் திறந்தான். இரவின் அந்த வேளையில் கண்ணீரும் கம்பலையுமாக உள்ளே வந்து நின்ற சிட்டியைக் கண்டதும் மரகதம் திடுக்கிட்டுப் போனாள்.

''சாமி, சங்கிலி என்னோட சண்டைபோட்டு ரகளை செய்துவிட்டாள். அவ புருஷன் என்னை அடிக்க வந்து விட்டான்'' என்று தேம்பி அழ ஆரம்பித்தாள் சிட்டி. சங்கிலி என்பவள் யார்? அவள் புருஷன் சிட்டியை அடிக்க முற்படுவானேன்? என்று மரகதத்திற்கு விவரம் ஒன்றும் விளங்கவில்லை. எனினும், அவளுக்கு அதுசமயம் அழுது கொண்டு வந்துநின்ற சிட்டியைக் காண எரிச்சல்தான் பற்றிக்கொண்டு வந்தது.

''நாளைக் காலை அவளுக்கு சரியான பாடங் கற்பிக்கிறேன். நீ ஒன்றும் கவலைப்பட வேண்டாம்'' என்று சமாதானம் கூறிய சிவராஜனின் முகம் கோபத்தில் மிகவும் கடுமையாக மாறியது.

''அவள் புருஷன் செய்த திருட்டைப் பற்றி உங்களுக்கு நான்தான் சொன்னேன் என்று அவங்க எல்லோரும் என்

மேல் சங்கிலிகிட்டப் புகார் சொன்னார்கள். சங்கிலி என்னிடம் சண்டைக்கு வந்துவிட்டாள். என்னைக் குத்திக் கொன்று விடுவதாக அவள் புருஷன் கத்தியைக் காட்டி மிரட்டுகிறான். ஏதாவது பதிலுக்குச் சொன்னால் ஐயாவிடம் போய் சிபாரிசு கேள், உனக்கு உதவி செய்வார் என்று அந்த வாயாடிகள் என்னை கேலி செய்து கொக்கரிக்கிறார்கள்'' என்று உளறிக் கொண்டு கூறி விம்மியழுத சிட்டி சிவராஜன் காலடியில் உட்கார்ந்து விட்டாள்.

''இருக்கட்டும். நாளைக் காலை நான் அவர்களை கவனித்துக் கொள்கிறேன். இந்த நாடோடிக் கழுதைகளை ஒரேயடியாக ஒழித்து முழுகிவிட்டு வேறு கூலியாட்களை நான் ஒரு வண்டியில் அடுத்த ஊரிலிருந்து கொண்டு வருகிறேன். இவர்கள் என்னை என்னவென்று நினைத்துக் கொண்டார்கள்? இது நான்காவது தடவை இப்படி அவர்கள் நடப்பது!'' என்று ஆத்திரத்துடன் உரத்த குரலில் கத்தினான் சிவராஜன்.

என்னையும் வேலையிலிருந்து தள்ளி விடுவீர்களா?'' என்று விம்மிக்கொண்டு துயரத்துடன் கேட்டாள் சிட்டி.

''உனக்கு மட்டும் தனிச்சலுகை காட்டப்படும். கவலைப்படாதே. முகத்தை துடைத்துக்கொள்'' என்று தனிவான குரலில் சிவராஜன் பதில் சொன்னான்.

''சாமி,அங்கே திரும்பிப்போக எனக்குப் பயமாக இருக்கிறது'' என்று நடுங்கிய குரலில் சிட்டி சொன்னாள்.

''நீ இனி அங்கே போகத் தேவையில்லை. இந்த வீட்டு வேலைகளை கவனித்துக்கொண்டு நீ இங்கேயே நிம்மதியாக இருக்கலாம்'' என்று கூறிய சிவராஜன், வாசற்கதவைத் தாளிட்டுவிட்டு, கட்டிலின் மேல் வந்து



உட்கார்ந்து கொண்டான். மரகதத்திற்கு அதற்குமேல் நின்று கொண்டிருக்கப் பிடிக்கவில்லை.

அறைக்குள்ளே சென்று படுக்கைமீது தொப்பென்று ஆத்திரத்தில் உட்கார்ந்துகொண்ட அவள் கோபத்துடன் தலையில் சூடியிருந்த மல்லிகை மலரை எடுத்துக் கசக்கி ஜன்னல் வழியே விட்டெறிந்தாள்.

சிவராஜன் சிட்டியின்மீது காட்டிய பரிவை அவளால் பொறுக்க முடியவில்லை. கிழவி சொன்னதில் உண்மை இருக்கத்தான் இருந்தது. அந்தக் குட்டி சிட்டி, மரகதம் நோயாக இருந்த சில தினங்களில் உள்ளே வந்து இருந்து கொண்டு அவனுக்குச் சொக்குப் பொடி தூவி தன் பக்கம் கவர்ந்து கொண்டு விட்டாள்! என்ன அக்கிரமம்? என்ன அக்கிரமம்? மரகதம் அவனது அன்பிற்கு ஏங்கித் தவிக்கும் பொழுது அந்தப் பெண்ணை மிக்க துணிச்சலுடன் அவளுக்குச் சமதையாக வீட்டில் வைத்துப் பராமரிக்க முன் வந்து விட்டானே!

அந்த அறைக்குள்ளே பூனைபோல் வந்து தரைமீது தனக்குத் துணையாகப் படுத்துக்கொண்ட சிட்டியை மெல்லக் கண் திறந்து பார்த்த மரகதம் பொறாமையினால் பற்களைக் கடித்துக் கொண்டாள்.

'என்னை என்னவென்று நினைத்துக் கொண்டீர்கள்? இந்த அற்பக் கழுதையை வீட்டிலே வைத்துப்போஷிக்க உங்களுக்கு என்ன தைரியம்?' என்று சிவராஜனிடம் கூச்சலிட்டு சண்டை பிடிக்க வேண்டுமென்ற ஆத்திரத்தில் துடித்தாள் அவள். ஆனால் அவ்வளவு துணிச்சல் அவளுக்கு ஏனோ ஏற்படவில்லை. அன்று அதற்குப் பதிலாக இரவு முழுவதும் அழுது கொண்டே இருந்தாள்.

சிட்டி அவர்கள் வீட்டிற்குள் புகுந்து நான்கு மாதங்கள் சென்று மறைந்தன. முன்போல் சிவராஜன் மரகதத்திடம் அசட்டையாகவே நடந்து கொண்டான். தனியாக இருந்த அவர்கள் இடையே அபூர்வமாக மின்னல்போல் எழ இருந்த அந்த அன்பையும் சிட்டி வந்து முட்டுக்கட்டை போட்டுத் தடுத்து விட்டாள்.

மரகதம் ஒவ்வொரு வினாடியும் சிட்டியை விஷம் போல வெறுத்தாள். அவளை முன்போல் வீட்டை விட்டு விரட்ட அவளுக்குத் துணிச்சல் ஏற்படவில்லை. வேண்டுமென்றே சிவராஜன் அவளை வேலைக்கு அமர்த்தியிருந்தான்.

மரகதம் வெளியே போகச் சொன்னால் சிவராஜன் மிகவும் கோபித்துக் கொள்வான்.இதுவரை அவனுக்கு அவள் மேல் ஏற்பட்டிருக்கும் மனஸ்தாபத்தைத் தீர்க்க வழி தெரியாமல் திகைத்துக் கொண்டிருக்கையில், இன்னும் அவனது கோபத்தை மேலே தூண்டிவிட மரகதத்திற்கு துணிச்சல் ஏற்படவில்லை.

சிட்டியையும் சிவராஜனையும் ஒவ்வொரு நிமிஷமும் அவள் பொறாமையுடன் கண்காணித்துக் கொண்டு வந்தாள். கிழவி சொல்லியபடி சிவராஜனைச் சிட்டி தனது மோக வலையில் எளிதாக வீழ்த்திக்கொள்ள முடியவில்லை என்பதை உணர்ந்து கொண்ட மரகதத்திற்கு, மன நிம்மதி சிறிது ஏற்பட்டது. எனினும், அவளால் சிறிதும் சஞ்சலப் படாதிருக்க முடியவில்லை.

சிட்டி சுபாவத்தில் எஜமான் பின்னால் குழைந்து கொண்டு ஓடிச்செல்லும் நாய்க்குட்டியைப் போன்ற மனப்பான்மை கொண்டிருந்தாள். சிவராஜன் அவளிடம் அசட்டையாகவும் கோபமாகவும் நடந்து கொண்டால் கூட



அவள் சளைக்கவில்லை. ஒவ்வொரு சமயம் குழைந்து மிகவும் கொஞ்சலாகத் தன் முன் வந்து நின்ற அந்தப் பெண்மீது அவன் கோபங்கொள்ளவும் செய்தான்.

''போ உள்ளே ஏன் இங்கே வந்து நிற்கிறாய்? உன் வேலையைக்கவனி'' என்று தன் முன்னே வந்து நின்ற சிட்டியை அதட்டுவதை மரகதமும் கேட்கத் தவறியதில்லை.

ஆனால் சிட்டிக்கு சிவராஜனின் கோபம் கொஞ்சம் கூட வருத்தத்தைக் கொடுக்கவில்லை. வீட்டில் நடந்த எல்லாவற்றையும் உன்னிப்பாகக் கவனித்து வந்த மரகதம் ஒரு உண்மையை அறிந்து கொண்டாள்.

சிவராஜன் பெண்களைக் கண்டு மயங்கி எளிதில் வழிக்கு வந்துவிடும் ஆசாமியல்ல. சிட்டி விரித்த மோக வலையை அவன் சிறிதும் லட்சியம் செய்யவில்லை. மரகதத்திடம் நடந்து கொண்டது போல் சிட்டியிடமும் அவன் மிகவும் அசட்டையாகவேதான் இருந்தான். அது வரை மரகதம் பிழைத்தாள் என்றுதான் கூற வேண்டும். ஆனாலும் அவளால் கவலைப்படாது இருக்க முடியவில்லை.

என்னதான் திடசித்தனாக இருந்தாலும் ஆண்களின் மனம் சில சமயங்களில் உறுதி தவறிவிடும் என்று அடுத்த வீட்டு அபிராமியம்மாள் அடிக்கடி தன் தாயிடம் சொல்லக் கேட்டிருந்தாள். கிழவி கூறியபடி சிட்டி மிகவும் பொல்லாதவள்தான், மரகதம் வீட்டில் இருக்கையிலேயே துணிச்சலுடன் அவள் தனது வட்டக் கருவிழிகளால் சிவராஜனை விழுங்கி விடுகிறவள்போல் அன்பு கனியப் பார்த்துப் புன்முறுவல் செய்தாள்.

தலையிலே நெருப்பை வைத்துக்கொண்டு ஆட முயல்பவள் போல் வீட்டிலே அந்தச் சாகசக்காரியை

வைத்துக்கொண்டு மரகதத்திற்கு ஒரு நிமிஷமும் நிம்மதியாக இருக்க முடியவில்லை. முன்னை விட வாழ்க்கை நரகவேதனையாகத் தோன்றியது.

இந் நரகவேதனையை அனுபவிக்க அவளைவிட்டு வேடிக்கை பார்த்த சிவராஜன் மீது அவளுக்கு உள்ளூரக் கோபம் பொங்கிக் கொண்டு வந்தது. அந்தக் கோபத்தில் கடின மனம் கொண்ட அவனைவிட்டு தெரியாமல் ஊருக்கு ஓடிவிட்டால் என்ன என்று அடிக்கடி அவள் உள்ளத்திலே ஒரு விபரீத எண்ணம் கூடவே எழுந்து மறைய ஆரம்பித்தது.

## 9

ஒரு நாள் மாலை வேலையிலிருந்து திரும்பி வந்த சிவராஜன் கூடவே ஒரு விருந்தாளியைக் கூட்டிக் கொண்டு வந்திருந்தான்.

''மரகதம் சவுக்கியமா?'' என்று பல்லைக்காட்டிய மாமன் மகன் சிங்காரத்தைக் கண்டதும் அவளுக்கு ஒரே ஆச்சரியமாகப் போய்விட்டது.

''நீங்க எங்கிருந்து வராப்போல?'' என்று மரகதம் குசலம் விசாரித்தாள்.

''இப்போ புடவை வியாபாரம் ஆரம்பித்திருக்கிறேன். மதுரையிலிருந்து சேலைகளெடுத்து வந்து இந்தப் பிராந்தியத்திலே நான் விக்கிற வழக்கம். இந்த வாட்டி உங்க ஊர் பக்கம் போயிருந்தப்போ அத்தானையும் பார்த்துவிட்டு வந்தேன். நீ இருக்கிற ஊரு விலாசம் சரியா அவங்களுக்கு சொல்லத் தெரியலை. நானா விசாரித்துக் கொண்டு இந்தப் பக்கம் வந்தேன். அப்பாவுக்கும் அம்மாவுக்கும் நீ கடிதாசி கூடப் போடறதில்லையா?'' என்றான் அவன்.



''போட வேண்டும். எங்கே பொழுது போத வில்லை'' என்று கூறிவிட்டு அத்துடன் பேச்சை நிறுத்திக் கொண்டாள்.

கணவன் வேலைக்குச் சென்றதும், மெல்ல ஊர் சமாச்சாரங்களை சிங்காரத்திடம் விசாரித்தாள் அவள்.

''உங்கம்மாவை பார்க்கவே முடியவில்லை. இளைத்துத் துரும்பா இருக்கிறாங்க. கந்தசாமிப்பிள்ளை கடனுக்காக கடையையும் கட்டிக்கொண்டு விட்டதினால் உங்க அப்பா சும்மா வீட்டிலேதான் வேலையற்று இருக்கிறார். சம்பாத்தியமும் இல்லாமல் சும்மா ஒரு மனுஷன் உட்கார்ந்திருந்தால் குடும்பத்திற்கு கஷ்டம் ஏற்படாதிருக்குமா? அத்தையினால் எனக்கு ஒரு வேளை சோறுகூட போட முடியவில்லேன்னா பார்த்துக்கொள்'' என்று சிங்காரம் விவரித்ததைக் கேட்ட மரகதத்தின் கண்களில் நீர் வந்து விட்டது.

''பாவி, என்னால் அல்லவா அவர்கள் அவ்வளவு கஷ்டத்திற்கு உள்ளானார்கள்' என எண்ணி மனம் நொந்து கொண்டாள். உடனே அந்த நிமிஷத்திலேயே பறந்து சென்று தாயைக் கண்டு தேறுதல் கூறவேண்டும் போல் அவள் மனம் துடியாகத் துடித்தது.

நாலைந்து தினங்கள் சென்றன. சிங்காரம் அடுத்த நாள் ஊரை விட்டுப்போகப் போவதாகச் சொல்லிக் கொண்டிருந்தான். அதைக் கேட்டதும் மரகதத்திற்கு திடீரென்று ஒரு யோசனை தோன்றியது.

''நாளைக்கு நீங்க ஊருக்குப் போகும்போது என்னையும் கூட்டிக்கொண்டு போறீங்களா? அம்மாவைப் பார்க்கணும்னு ரொம்ப ஆசையாக இருக்கிறது'' என்றாள் அவள்.

''ஐயோ! அதெப்படி முடியும்? மாப்பிள்ளை உங்க அப்பாமேலே ரொம்ப கோபமாக இருக்கிறாப்போல தோணுது. நேத்து நான் சும்மா கேட்டான். ஊரிலே தேர்திருவிழா வருகுதே, மரகதத்தை பத்துநாள் அனுப்பி வைக்கிறீங்களான்னு கேட்டேன். தேருமாச்சு, மண்ணாங் கட்டியுமாச்சு ஊருக்கு அவளை இந்த ஜென்மத்திலே ஒரு நாள்கூட அனுப்ப முடியாதுன்னு கோபமாகப் பேசினாரே அப்படியிருக்கையிலே எப்படி நீ வருவே?'' என்றான் அவன்.

அவர் கிடக்கிறார். எங்கம்மாவைப் போய்ப் பார்க்கிறதைப் பத்தி இவருக்கு என்னவாம்? நீங்க எனக்கு ஒரு உபகாரம் செய்யணும். நாளை போகும் போது என்னையும் கூட்டிக்கொண்டு போகணும். இந்த முரட்டு மனுஷங்கிட்ட நான் ஆறு மாசமாகக் கிடந்து படுகிற அவதி என்னால் தாளவில்லை'' என்று கூறி முடிக்காது, விக்கி விக்கி அழ ஆரம்பித்தாள்.

சிங்காரம் மரகதத்தின் கண்ணீரைக் கண்டு கரைந்து விடவில்லை. ஊருக்குத் திரும்பிச் செல்வதற்கு அவனிடம் பணம் இருக்கவில்லை. மாப்பிள்ளையைத் துணிந்து கடனாகக் கேட்டு கொஞ்சம் பணம் வாங்கிக்கொண்டு ஊர் போய்ச் சேர்வது என்று எண்ணி தனது பிரயாணத்தை தயக்கத்துடன் ஒத்தி போட்டுக் கொண்டு வந்த அவனுக்கு, மரகதத்தின் போதனை மிகவும் அனுகூலமாகப்பட்டது. ''மாப்பிள்ளை கோபிப்பா ரென்று பயமாக இருக்கிறது. உங்கம்மா ஏன் அழைத்து வந்தாயின்னு கோபித்துக் கொண்டால் நான் பொறுப்பாளியாக மாட்டேன். ஊர்வரை வேண்டுமானால் துணைக்கு வருகிறேன். ஆனால் உங்க வீட்டுக்கு நான் வரமாட்டேன்'' என்றான்.



''சும்மா துணைக்குக் கூடவந்து என்னை ஊரில் சேர்த்தாப்போதும்'' என்றாள் அவள் பிடிவாதமாக. ரயிலுக்கு டிக்கட் வாங்குவதற்கென்று அவள் தனது விரலில் போட்டிருந்த ஒரு பவுன் தங்க மோதிரத்தை கழற்றி அவனிடம் கொடுத்து விட்டாள்.

பக்கத்து ஊரில் அதை அன்று பகலிலேயே விற்றுப் பணமாக்கிக்கொண்டு வந்த சிங்காரம், அவளுக்கு ஊருக்குப் புறப்படுவதற்கு யோசனை சொல்லிக் கொடுத்தான்.

அன்று மாலை அவர்கள் தங்கள் உத்தேசப்படி ஊருக்குப் புறப்பட மிகவும் வசதியாக இருந்தது. காலையில் அடுத்த ஊர் சந்தைக்கு சென்றிருந்த சிவராஜன் வீடு வருவதற்கு இரவு அதிக நேரம் ஆகும் என்பது மரகதத்திற்குத் தெரியும். பகல் போஜனத்திற்குப் பின் கிராமத்திற்கு ஏதோ காரியமாகப் போயிருந்த சிட்டியைக் கூட காணவில்லை.

இதுதான் சமயம் என்று மரகதம் அவசரமாக தனது சாமான்களை எடுத்து ஒரு சிறு மூட்டையாகக் கட்டிக் கொண்டாள். ''இரவு ஏழு மணிக்கு ஒரு வண்டி இருக்கிறது. புறப்படு'' என்று துரிதப்படுத்திய சிங்காரத்துடன் கணவனுக்குத் தெரியாமல் அவள் ஊருக்குக் கிளம்பி விட்டாள். நான்கு மைல் தூரம் கல்லிலும் முள்ளிலும் விழுந்தடித்துக்கொண்டு குறுக்குப் பாதை வழியே நடந்த அவர்கள் ஸ்டேஷனை அடைவதற்குள் ஏழுமணி வண்டி சென்று விட்டது. இனி மணி ஒன்பதுக்குத்தான் அடுத்த வண்டி. இங்கே உட்கார்ந்திரு. ''நான் சென்று டிக்கெட் வாங்கி வருகிறேன்'' என்று கூறிய சிங்காரம் அவளைப் பிளாட்பாரத்தில் விளக்குக் கம்பம் ஒன்றின் அருகில் உட்கார வைத்துவிட்டு வெளியே சென்றான். மரகதம் தன்னந்தனியே ஸ்டேஷனில் உட்கார்ந்திருந்தாள். மணி ஒன்பதடித்தது. டிக்கெட் வாங்கப்போன சிங்காரத்தைக் காணவேயில்லை.

எங்கே போயிருப்பான் என்ற திகிலில் அவள் நெஞ்சு படபடவென்று அடித்தது. சிங்காரத்தைக் காணவில்லை. மரகதத்திற்குப் பயமும் கலக்கமும் ஏற்படவே இருப்புக் கொள்ளாமல் அவள் எழுந்திருந்தாள்.

"ஐயா, திருப்பாப்பேட்டை போகும் ஒன்பது மணி வண்டி எப்போ வரும்?" என்று பச்சை விளக்கைத் தூக்கிக் கொண்டு ஓடி வந்த ஒரு ஆளிடம் அவள் விசாரித்தாள்.

"திருப்பாப்பேட்டை போகிற வண்டியா? இங்கிருந்து நேரடியாக அங்கே போக வண்டி கிடையாதம்மா. யாரு உங்களுக்கு அப்படிச் சொன்னது. கிழக்கே போகிற வண்டி விடியற்காலை நாலு மணிக்குத்தான் வரும். இப்போ மேற்கேயிருந்து மெயில் வண்டிதான் வரப்போகுது" என்றான்.

மரகதத்திற்கு தலை சுழன்றது. சிங்காரம் பாவிப்பயல் அவளை ஏமாற்றி விட்டு ஓடிவிட்டானே என்று நினைக்கையிலே அவளுக்கு அழுகை வந்து நெஞ்சை அடைத்துக் கொண்டது. "இருட்டில் தனியாக இனி எப்படி வீடு திரும்பிப் போவோம். அதற்குள் அவர் வந்து விட்டால்?" என்று எண்ணிக் கலக்கமடைந்த அவள், ஸ்டேஷனில் வந்து நின்ற மெயில் வண்டியைக் கலவரத்துடன் பார்த்துக்கொண்டு நின்றாள்.

வண்டியின் கடைசிப் பெட்டியிலிருந்து இறங்கிய மனிதனைக் கண்டதும் அவளுடைய சப்த நாடியும் ஒடுங்கிவிட்டது. விளக்குக் கம்பத்து நிழலில் அவள் மறைந்து கொள்ள முயலுமுன் சிவராஜன் அவளைக் கண்டு கொண்டு விட்டான். இரண்டே தாவலில் சுமந்த சாமான் மூட்டைகளுடன் அவள் அருகில் ஓடிவந்த சிவராஜன்



"இங்கே என்ன செய்து கொண்டிருக்கிறாய்?" என்று வியப்பும் சந்தேகமும் கலந்த குரலில் அதட்டினான்.

தனது கணவனுடன் ஆரம்பித்த இல்வாழ்க்கையின் அத்தியாயம் அன்றுடன் முடிவடைந்து விட்டது என்பதை அவனது ஒரு பார்வையிலே அறிந்துகொண்ட மரகதத்திற்குப் பதில் பேசவே வரவில்லை.

ஸ்டேஷனுக்கு வெளியே வந்த சிவராஜன் அவள் கையிலிருந்த மூட்டையை வாங்கி மாட்டு வண்டிக்குள் விட்டெறிந்து விட்டு, "ஏறிக்கொள் சந்தையிலிருந்து நான் திரும்பி வருவதற்குள் ஊருக்குக் கிளம்பிட்டியே! பேஷ்!" என்றான் கடுமையாக.

அதற்குப்பின் வீட்டை அடையும் வரை அவன் அவளிடம் பேசவேயில்லை. வண்டிக்காரனுக்கு கூலியைக் கொடுத்து அனுப்பிவிட்டு, உள்ளே வந்த கணவனைப் பார்க்க அஞ்சி முகத்தைத் தாழ்த்திக் கொண்டு மரகதம் கிலியுடன் நின்று கொண்டிருந்தாள்.

"சிட்டி! ஏய், இங்கே வா" என்று உரத்த குரலில் கூச்சலிட்டு அழைத்தான் சிவராஜன். தோசைக்கு மாவு அரைத்துக்கொண்டு வெளித் தாழ்வாரத்தில் உட்கார்ந்திருந்த சிட்டி ஓடி வந்தாள். கையை கழுவிக்கொண்டு நீ உன் சாமான்களை எடுத்துக்கொண்டு முதலில் கிளம்பு" என்றான் சிவராஜன்.

சிட்டி அதுவரை அவனை அவ்வளவு கோபத்தில் பார்த்ததில்லை. எனவே அவளுக்கு அவனது விசித்திரமான தோற்றம் அச்சத்தை உண்டு பண்ணியது. "வீட்டைக் கவனித்துக்கொள்ளச் சொல்லி நான் போயிருக்கையில் நீ எங்கே போனாய்? உண்மையைச் சொல்" என்று அதட்டிக் கேட்டான்.

"கிராமத்துக்குப் போயிருந்தேன்" என மென்று விழுங்கினாள் அவள்.

"அப்படியா! நான் இரவு வண்டிக்கு ஊருக்குப் போகிறேன். வர நாட்கள் செல்லும். அதனால் நீ இனி இங்கே இருக்கத் தேவையில்லை. உன் சம்பளப் பாக்கியை வாங்கிக் கொண்டு புறப்படு" என்றான் கோபத்துடன்.

"உம்!" என்று பதில் கொடுத்த சிட்டி கோபத்துடன் தாழ்வாரத்திற்குச் சென்று தனது கையை அவசரமாகக் கழுவிக்கொண்டாள்.

"கிடக்கிறார் இவர். இவ்வளவு அன்பாக நடந்து கொண்டு நான்கு வருஷமாக ஒரு பயனும் இல்லை" என்று எண்ணி வெகுண்ட அவள், தனது சேலைகளை எடுத்து ஒரு மூட்டையாகக் கட்டிக் கொண்டாள்.

இனி சிவராஜன் முகத்தில்கூட விழிப்பதில்லை என்று கறுவிக்கொண்டவள் போல் விசுக்கென்று வேகமாக வெளியே சென்று மறைந்து போனாள். ஒரு சனி ஒழிந்தது என்று வாய்விட்டுக் கூறிய சிவராஜன், கதவைப் படீரென்று சாத்திக்கொண்டு மனைவியின் பக்கம் திரும்பினான்.

"ஆறுமாத காலமாக உன்னிடம் காணப்பட்ட மாறுதல்களைக் கண்டு நீ திருந்திவிட்டாய் என்று எண்ணி ஏமாந்தல்லவா போய்விட்டேன்! உன் பிறந்த வீட்டிற்குத் தானே போகவேண்டும்? அதற்குச் சொல்லிக் கொள்ளாமல் ஓடுவானேன்? நானே உன்னை அங்கு கொண்டு சேர்த்து விடுகிறேன். விடியற்காலை நாலு மணிக்கு ஒரு வண்டி இருக்கிறது. அதில் நாம் புறப்படுவோம். "உன் சாமான்களையும் எடுத்து வைத்துக்கொள். நீங்கள் எல்லோரும் ஒழிந்ததும் நான் நிம்மதியாகப் பெண்கள் என்ற



பேச்சிற்கே ஒரு முழுக்குப் போட்டு விட்டு இருக்க உத்தேசிக்கிறேன்" என்று கூறி விட்டு, உள்ளே சென்றான்.

பீரோவைத் திறந்து மேல்தட்டில் எதையோ ஆராய்ந்த சிவராஜன், திடுக்கிட்ட குரலில் "என் மணி பர்ஸ் எங்கே?" என்று கேட்டான்.

"பர்ஸ்...?" என்றாள் மரகதம்.

"ஓடுவதுடன் நில்லாது திருடவும் துணிந்து விட்டாய். எடுத்துக்கொள். உனக்கு நகை செய்து போட்டு அழகு பார்க்க திடீரென்று எனக்கு ஒரு அல்ப ஆசை தோன்றியது. போனவாரம் பாங்கிலிருந்து இருநூறு ரூபாய்களை எடுத்துக்கொண்டு வந்து வைத்தேன். உன்னுடைய பணத்தை நீயே திருடிக்கொண்டாய். அழகாக இருக்கிறது உன்னுடைய நடத்தை" என்று ஏளனமாகச் சொன்னான் சிவராஜன்.

மரகதத்திற்கு பளிச்சென்று உண்மை புலனாகியது. பாவிப்பயல் சிங்காரம் அவளுக்கு பெரும் மோசமல்லவா செய்துவிட்டான்.

மோதிரம் விற்ற பணத்துடன் கம்பி நீட்டிய அவன் சிவராஜன் பீரோவினின்று பர்ஸையும் அல்லவா திருடிக் கொண்டு சென்றிருக்கிறான். இவ்வளவு அயோக்கிய சிங்காரத்தை நம்பிக்கொண்டு அவள் புருஷனிடம் சொல்லிக் கொள்ளாமல் ஊருக்குப் புறப்பட்டாளே அவளது புத்தியை என்னவென்று சொல்வது?

"நான் எடுக்கவில்லை பணம் பர்ஸில் இருந்தது கூட எனக்குத் தெரியாது!" என்று நாத்தடுமாறினாள் மரகதம்.

"சே! நிறுத்து. பொய் வேறே பேச ஆரம்பித்து விட்டாயே! உன்னை நான் என்னவெல்லமோ எண்ணிக்

கொண்டிருந்தேன். பொய் திருட்டு ஒன்றிற்கும் அஞ்சாத வஞ்சகி! இனி உனது கண்ணீரையும் அழுகையையும் கண்டு நான் மனம் கசிந்து ஏமாறப்போவதில்லை. ''உனக்கும் எனக்கும் இன்றுடன் வாழ்க்கை முடிந்து விட்டது என்பதை உணர்ந்துகொள். நீ உன்னுடைய அப்பனுடனேயே வாழ்நாள் முழுவதும் நிம்மதியாக இருக்கலாம். மூட்டையைக் கட்டிக்கொள்'' என்று படபடவென்று கோபத்துடன் இரைந்த சிவராஜன் தொப்பென்று கட்டிலில் போய் உட்கார்ந்து கொண்டான்.

ஆறு மாதங்களுக்குப் பிறகு ஒரு நாட்காலை தங்கள் வீட்டு வாயிலில் வந்து நின்ற குதிரை வண்டியைக் கண்டு செங்கமலம் வியப்புடன் வெளியே எட்டிப் பார்த்தாள். மரகதமும் அவள் புருஷனும் வண்டியிலிருந்து இறங்கி உள்ளே நுழைவதைக் கண்டு அவளுக்கு ஆச்சரியமாக இருந்தது.

''இந்தாங்க உங்களைத்தானே! மருமகப்பிள்ளையும் பெண்ணும் ஊரிலிருந்து வந்திருக்காங்க'' என்று குதூகலத்துடன் காமிரா உள்ளில் தூங்கிக் கொண்டிருந்த மாணிக்கம்பிள்ளையை அவசரமாக எழுப்பினாள் அவள்.

நடந்ததையெல்லாம் மறந்துவிட்டவர் போல் ''வாங்க மாப்பிள்ளை'' என்று வரவேற்றார் மாணிக்கம் பிள்ளை.

''உங்கள் பெண்ணுக்கு என்னுடன் வாழப் பிடிக்க வில்லை. அதனால் அவளை நீங்களே வைத்துக்கொண்டு காப்பாற்றலாம். அவள் செலவிற்கு பணம் மாதம் தவறாது முடிந்ததை அனுப்பி விடுகிறேன்'' என்று அவர் முகத்தைக் கூட பாராது சுருக்கமாகச் சொல்லிவிட்டு, பதிலுக்குக் காத்திராமல் வேகமாக வெளியே சென்ற சிவராஜன், உடனே வந்த வண்டியில் திரும்பி விட்டான்.



''இதெல்லாம் என்னடி!'' என்று ஆச்சரியத்துடன் கேட்டாள் செங்கமலம். கோவென்று கதறிக்கொண்டு தாயின் மடியில் வீழ்ந்த மரகதம் தனது இதயமே வெடித்து சுக்கல்களாகி விடும்போல் வாய்விட்டு கதறி அழுதாள்.

சிங்காரம் கூறியபடி அவளது பெற்றோர்கள் மரகதத்தைக் காணவில்லையே என்று ஏங்கிக் கொண்டிருக்கவில்லை. நிலம், கடை இவைகளை கடனுக்கு ஒப்படைத்ததுடன், மகளைப் பற்றிய கவலையும் விட்டது என்று மனதை ஒழித்து விட்டிருந்த மாணிக்கம் பிள்ளைக்கு மரகதம் கணவனுடன் சண்டை போட்டுக் கொண்டு வீட்டிற்கு திரும்பிவந்தது சிறிதும் பிடிக்கவேயில்லை. மகள் வந்த சில தினங்களிலேயே அவர் தமது வெறுப்பை வெளிப்படையாகக் காட்டிக் கொண்டு விட்டார்.

''நல்லவனோ கெட்டவனோ, எங்களைக் கேட்காது கட்டிக்கொண்டாய். இனி நீ அவனுடன்தான் வாழ்நாள் முழுவதும் இருக்கக் கடமைப்பட்டவள். உன்னால் இந்த ஒரு வருஷ காலத்திற்குள் நான் பட்ட துயரம் போதாது போல் மறுபடியும் தொல்லை கொடுக்க திரும்பி வந்து விட்டாயே? என்ன செய்வாயோ எனக்குத் தெரியாது இன்னம் கொஞ்ச நாட்கள்தான் நீ இங்கு இருக்கலாம். பிறகு எப்படியாவது சமாதானம் செய்து கொண்டு நீ புருஷன் வீட்டிற்குப் போய்விட வேண்டும். முதலிலேயே சொல்லி விட்டேன், ஆமாம்!'' என்று மாணிக்கம்பிள்ளை மகளுக்கு எச்சரிக்கை செய்து விட்டார்.

செங்கமலம்கூட வழக்கத்திற்கு மாறாக மகளிடம் கடுமையாக நடந்து கொண்டாள். அவளைக் குறை சொல்லிப் பயன் இல்லை. ஒரு வருஷ காலமாக அவள் பணமுடையில் தவித்துக் கொண்டிருந்தாள். மரகதத்தின்

விபரீதக் கல்யாணத்தின் காரணமாக கடனில் மூழ்க்கிப் போன அவளது குடும்பம் அதற்குப் பிறகு நிமிரவே முடியவில்லை.

ஏற்கனவே முன் கோபக்காரரான மாணிக்கம் பிள்ளை இல்லாமைக் கொடுமையினால் துர்வாசராக மாறிவிட்டார். வீட்டில் கணவனது கடும்மொழி, பணக் கஷ்டம், வெளியில் ஊரார் அவர்கள் குடும்பத்தைப் பற்றிப் பேசிய அவதூறு என்று இருபுறமும் இடிபட்டு நொந்துபோன அவளது உள்ளத்தில் மரகதத்தின்பால் கொண்டிருந்த தாய்மை அன்புகூட வற்றி விட்டது.

"ஓடிப்போனவள் என்று ஊரார் உன்னைச் சொல்லி யழைப்பது போதாதுன்னு வாழாவெட்டி என்ற பட்டமும் கட்டிக்கொள்ள வந்து விட்டாயா?" என்று மகளிடம் அவள் இரைந்தாள்.

"அம்மா? உன்னைப் பார்க்கணும்னு ஆசையில்தான் அவரிடம் சண்டை போட்டுக்கொண்டு கிளம்பினேன். அப்பாவுக்கு என்னைக் கண்டால் பிடிக்கலை, உனக்கும் பிடிக்கவில்லை. அவருக்கும் பிடிக்கவில்லை; நான் இருப்பதைவிட செத்துப் போவதுதான் மேல்" மரகதம் கண்ணீர் விட்டழுதாள்.

"சீரும் சிறப்புமாகக் கணவனுடன் வாழ்கிறதை விட்டு இப்படி சந்தி சிரிக்க வந்து நிற்பதைவிடச் செத்துப் போவது எவ்வளவோ மேல். நாங்கள் உன்னை பார்க்கணும் என்று ஆசைப்பட்டிருந்தால், காயிதம் போட்டிருக்க மாட்டோமா? உன்னைக் கூட்டிப்போய் விட்டதாக மருமகப் பிள்ளை யிடமிருந்து கடிதாசி வந்தது. அதுவும் நல்லதுன்னு இருந்தோம். அதற்குள்ளே நீ எங்க தலையிலே இப்படி ஒரு இடியைக் கொண்டு வந்து போட்டு விட்டாய்? உன்னை



பெற்றதற்கு....!" என்று முடிக்காமல் ஆத்திரத்துடன் தலையில் அடித்துக் கொண்டாள் செங்கமலம்.

பெற்றோர்களின் உண்மையான மனநிலையை அறிந்து கொண்ட மரகதம் அன்றுடன் கண்ணீர் விட்டு அழுவதை நிறுத்திக் கொண்டாள். அவர்களைச் சொல்லிப் பயன் இல்லை. குற்றம் மரகதத்தினுடையதே. சிவராஜன் எவ்வளவு அன்பான கணவன். அவனைச் சரியாகப் புரிந்து கொள்ளாது ஏன் முரண்டு கொண்டு அவள் தனது வாழ்வைப் பாழ்படுத்திக் கொண்டாள்? தனக்கும் அவளுக்கும் இனிச் சம்பந்தம் இல்லையென்று அவளை உதறிவிட்டுப் போய் விட்டானே! இனி அவன் அன்பை எப்படித் திரும்பப் பெற முடியும்?

இரவு பகலாக அவளது சிந்தனை முழுவதும் ஒரே ஒரு பிரச்னையைப் பற்றித்தான் சுற்றிச் சுழன்று கொண்டிருந்தது. "உயிரே போவதானாலும் சரி, சிவராஜனிடம் அவள் மீண்டும் சென்று எப்படியாவது வாழ்க்கையைப் புதிதாகத் தொடங்கி விட வேண்டும். வாழாவெட்டி என்று ஊராலும் பெற்றவர்களாலும் நிந்திக்கப்பட்டு அவள் ஒருக்காலும் வாழ்க்கை நடத்த முற்படக்கூடாது. சிவராஜனது கோபத்தைத் தீர்த்து அவனது அன்பை வளரச் செய்யும் மார்க்கங்கள் எவை?" என்பதுதான் அவளது தீராப்பிரச்சினை.

சிவராஜன் வாக்களித்துச் சென்றபடி ஒவ்வொரு மாதத் தொடக்கத்திலும் அவளது செலவிற்குப் பணம் கொஞ்சம் அனுப்பி வைத்துக் கொண்டிருந்தான். செலவுக்கு பணம் இவ்வளவு அனுப்பியிருக்கிறேன் என்பதைத் தவிர அவனிடமிருந்து அவளுக்கு வேறு கடிதங்கள் எதுவும் வரவில்லை.

# 10

பிறந்தகம் வந்து இரண்டு மாதம் முடிவதற்குள் மரகதம் எலும்பாக மாறிவிட்டாள். மனக்கவலை காரணமாக ஊணும் உறக்கமுமின்றி வேதனையில் தவித்த அவள் இளைத்துக் கறுத்து உருமாறிப் போய்விட்டாள். குணத்திலும் அவள் மிகவும் மாறிவிட்டிருந்தாள். கலகலவென்று அவளது சிரிப்பும் துடிப்பான பேச்சுகளும் இருந்த இடம் தெரியாது சென்று மறைந்து விட்டன.

ஊரார் முன்னிலையில் வர அவளுக்கு மனம் கூசியது. கோவில், குளம், ஆறு முதலிய பொது இடங்களுக்கு முன் போல் போய்வரத் துணிவின்றி வீட்டிற்குள்ளே அடைந்து கிடந்தாள். வெறுப்பு மிகுந்திருந்த தாயின் முகத்தையும் கோபத்துடன் வெறுத்துப் பார்த்த தந்தையின் கடுமையான கண்களையும் வீட்டின் நான்கு சுவர்களையும் மாறிமாறிப் பார்த்து அலுத்துப்போன மரகதத்திற்கு வாழ்க்கை பயங்கர மாகத் தோன்றியது.

இந்தப் பயங்கரத்திலிருந்து விடுதலையடைய அவளுக்கு ஒரே ஒரு வழிதான் இருந்தது. கர்வத்தையும் வெட்கத்தையும் உதறிவிட்டு தனது தவறையெல்லாம் மன்னிக்கும்படி கெஞ்சிக் கேட்டு கணவனுக்கு ஒரு கடிதம் எழுதி அவனை வரவழைத்து ஊருக்குத் திரும்பிச் சென்று விடுவதுதான் அந்த கடைசி வழி.

ஒரு நாள் மனதைத் திடப்படுத்திக்கொண்டு முடிவில் கணவனுக்கு ஒரு கடிதம் எழுதி முடித்தாள். அதை எழுதி முடிப்பதற்குள் அவள் பலமுறை துயரம் தாளாது அழுதுவிட்டாள். தனது மனத்தின் உண்மை நிலையைக் கொண்டு எழுதியிருந்த அந்தக் கடிதம் கட்டாயம் சிவராஜன்



கோபத்தைக் குறைத்து அவனை கருணை கொள்ளச் செய்யும் என்று நம்பினாள். கடிதத்தைத் தானே எடுத்துச் சென்று தபாலில் போட்டுவிட்டு அவனுடைய பதிலை ஒவ்வொரு நாளும் ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்தாள்.

பத்துத் தினங்களுக்குப் பிறகு தனது விலாசத்திற்கு வந்த கடிதத்தைப் பிரித்துப் படிப்பதற்குள் பலவித உணர்ச்சியில் தத்தளித்த அவள் கரங்கள் பயத்தில் நடுங்கின. சிவராஜன் நாலைந்து வரிகளில் தனது பதிலைத் தெரிவித்திருந்தான்.

"அவளது கடிதத்தையோ அவளது பேச்சுக்களையோ இனி அவனால் நம்ப முடியாது. ஆகவே மரகதத்தை திரும்பி அழைத்துப்போக அவன் ஒருக்காலும் வரப் போவதில்லை" என்பதுதான் அந்தப் பதில்.

கடிதத்தைப் படித்து முடித்த மரகதம் அன்று சிந்திய கண்ணீருக்கு கணக்கேயில்லை. எவ்வளவோ கெஞ்சியும் சிவராஜன் அவளை மன்னிக்க மறுத்துவிட்டான்! அவனது மன மாறுதலுக்குக் காரணமும் அவளுக்கு நன்கு தெரிந்தது. மரகதம் வீட்டில் இருக்கையிலேயே துணிச்சலுடன் தனது விழிகளால் நோக்கி தன் மோக வலையில் அவனைச் சிக்க வைக்க முயன்று கொண்டிருந்த சிட்டி இப்பொழுது என்னவெல்லாம் செய்திருப்பாளோ?

சிட்டி நிம்மதியாக அவள் வீட்டில் ராணி போல் அதிகாரம் செய்துகொண்டு அவனுடன் வாழ்க்கை நடத்திக் கொண்டிருக்க வேண்டும். அதனால்தான் மரகதத்தை அவன் கலபத்தில் உதறிவிட்டான்! கேவலம் கூலி வேலை செய்து ஜீவிக்கும் ஒரு நாடோடிப் பெண்! கடைசியில் அவள் ஜெயித்து விட்டாளே!

சுட்டிய கணவனை நாடோடிப் பெண் ஒருத்திக்கு தத்தம் செய்துவிட்டு வந்துவிட்டாள் மரகதம்! சிவராஜனைப் பற்றி பலவிதமாகக் கற்பனை செய்து தன்னையே அணுஅணுவாகக் கொன்று கொண்டாள் மரகதம்.

மனதிலே வெறுப்பு ஏற்பட ஆரம்பித்துவிட்டால் சிறிய சம்பவங்கள் எல்லாம் மிகவும் மன்னிக்க முடியாத பெரும் தவறுகளாகத் தோன்றுவது இயற்கையே. சிறிதும் அன்பு இன்றிச் சுயநலம் மிகுந்தவர்களாக மாறி விட்டிருந்த பெற்றோர்கள் மீது மரகதத்தின் வெறுப்பு முற்றிக்கொண்டு வந்தது.

அதுபோலவே தங்கள் செல்வ நிலை குலைந்து சீர்கேடான வாழ்க்கையைக் கொடுத்து அவதிப் படுவதற்குக் காரணகர்த்தாவாக இருந்த மகள் மீது பெற்றவர்க ளிருவருக்கும் வெறுப்பு வளர்ந்து கொண்டு வரத்தான் செய்தது. இந்நிலையில் இரு பக்கத்தாருக்கும் சிறு சம்பவங்கள் மிக மிகப் பெரும் தவறுகளாகத் தோன்றியதில் வியப்பேயில்லை.

அன்றைக்குப் பகல் தாயாருக்குச் சமையலறையில் உதவி செய்து கொண்டிருந்த மரகதம், கைதவறி எண்ணெய் ஜாடியைக் கீழே போட்டு உடைத்துவிட்டாள்.

ஒருபடி எண்ணெய், புது ஜாடி! திருவிழாவில் வாங்கியது. உம்! ஒரு நிமிஷத்தில் ஐந்து ரூபாய்க்கு வெடிவைத்து விட்டாய்!'' என்று கடிந்து கொண்டாள். செங்கமலம்.

''என்ன உள்ளே சத்தம்!'' என்று கேட்டுக்கொண்டு வந்த மாணிக்கம்பிள்ளையின் மீசை துடித்தது. கண்கள் சிவக்க ''எருமை மாட்டு ஜென்மம், சாமானில் கருத்து



இருந்தால்தானே, யாரோ சம்பாதிச்சுப் போட்டு யாரோ குடித்தனம் நடத்தினால் அம்மா போட்டு உடைக்க மாட்டாளா? இதுவும் செய்வா, இன்னமும் செய்வா. எதுக்கு வந்திருக்கிறா? இந்தக் குடும்பத்தைத் துடைச்சி அப்பனையும் ஆத்தாளையும் முழுங்கி விடத்தானே வந்திருக்கிறாள். துடைகாலி!'' என்று கோபத்துடன் படபடவென்று மூச்சு விடாமல் பேசினார்.

அன்றொரு நாள் இதேபோல் நடந்த ஒரு சிறு சம்பவத்தை நினைத்துக் கொண்டாள் மரகதம். துக்கத்தினால் நெஞ்சு இரண்டாக வெடித்து விடும்போல் அவளுக்கு வேதனை ஏற்பட்டது.

கடையிலிருந்து தைத்து வந்திருந்தது புதிய ஷர்ட், அதை அணிந்துகொண்டு வெளியே செல்ல பீரோவினின்று அப்பொழுதுதான் எடுத்து மேஜை மீது வைத்திருந்தான் சிவராஜன். புஸ்தகமொன்றை எடுக்க விரைந்த மரகதம் மிக அவசரமாக எட்டி இழுத்தாள். நன்றாக மூடாது வைத்திருந்த மை புட்டி கவிழ்ந்து ஷர்ட் மீது பிரவாகமாக ஓடியது. 'ஐயோ!' என்று தன்னையும் மீறிப் பயத்தில் கூச்சலிட்டு விட்டாள் அவள். கணவன் கோபித்துக் கொள்வானே என்று அவளுக்கு நெஞ்சம் பதைத்தது.

தலையை அழகாக வாரிவிட்டுக் கொண்டு கண்ணாடி முன் நின்றுகொண்டிருந்த சிவராஜன் திரும்பிப் பார்த்தான். அவன் அவளிடம் ஏதும் சொல்ல வில்லை. ''சிட்டி! ஷர்ட்டை எடுத்துக் கொண்டுபோய் சோப்புப்போட்டு முதலில் துவை. பிறகு எலுமிச்சம் பழமிருந்தால் அறுத்து இங்கபட்ட இடமெல்லாம் நன்றாகத் தேய்த்துக் கழுவு'' என்று கூறிவிட்டு பீரோ விலிருந்த வேறு உடை ஒன்றை எடுத்து அணிந்து கொண்டு கிளம்பிவிட்டான்.

அவளது கைத் தவறுதலைக் குறித்துக் கடுமையாக ஒரு வார்த்தை கூட சொல்லவில்லை! அவ்வளவு தயை காட்டுவதற்கு அவள் சிறிதும் அருகதையற்றவள்தான். அந்தச் சம்பவத்தை நினைத்துக்கொண்ட மரகதத்திற்கு துக்கம் தாளாமல் கண்ணில் நீர் பொங்கியது. ''வேண்டுமென்றே செய்தேனா? கை தவறிவிட்டது அதற்கு என்னவெல்லாமோ சொல்கிறீர்களே அப்பா?'' என்று கோபத்துடன் சிணறினாள்.

''அடேயப்பா, பூப்பட்டால் கொப்பளிக்கும் பொன்னுத் திருமேனியா! சொன்ன சொல் தாளமுடியாது துடித்துப் போகிறாயே. அவ்வளவு ரோஷமுள்ளவளுக்கு இங்கே என்ன வேலை?'' என்றார் தந்தை.

''அதிகம் பேசவேண்டாம் அப்பா. நான் இனி ஒரு நிமிஷங்கூட இங்கே இருக்கப்போவதில்லை. அப்படி ஒன்றும் நான் நாதியற்றுப்போய் உங்கள் சோற்றுக்குக் காத்துக் கிடக்கவில்லை. என் புருஷன் மாதா மாதாம் என் செலவுக்கு பணம் அனுப்பி வைக்கிறார். அதைக் கொடுத்துவிட்டுத்தான் நான் சாப்பிட்டுக் கொண்டிருக்கிறேன்'' என்று ஆங்காரத்துடன் விம்மியழுதாள்.

''நிறுத்துடி மாய்மாலக் கள்ளி! உன் பிச்சைக் காசு யாருக்கு வேணும்? வீட்டை விட்டு ஒழிந்தால் பிடிச்ச பீடை விட்டதுன்னு நான் ஆற்றிலே தலை முழுகிவிட்டு நிம்மதியாக இருப்பேன்'' என்று கத்தினார் தந்தை.

''ரொம்ப அதிகம் பேசவேண்டாம். வீட்டைவிட்டுப் போகும்பொழுது நானும் உங்களுக்கு ஒரு முழுக்குப் போட்டுவிட்டு ஒழிந்து போகிறேன். என்னைக் கண்டால் உங்களுக்குப் பிடிக்கவில்லை. உங்களைக் கண்டால் எனக்குப் பிடிக்கவில்லை'' என்று பொருமிய மரகதம் விர்ரென்று



புழக்கடைக்குச் சென்று கிணற்று மேடையில் உட்கார்ந்து கொண்டாள்.

இருட்டி வெகு நேரம் ஆகியும் அழுதுகொண்டு உட்கார்ந்திருந்த அவளைத் தாயாவது தந்தையாவது சமாதானம் செய்து சாப்பிட அழைக்கவில்லை. அவளும் அன்று இரவு முழுவதும் ஒருவாய் தண்ணீர்கூட அந்த வீட்டிலிருந்து எடுத்துப் பருக மனமற்றவளாய் அகங்காரத்துடன் பட்டினியாய் படுத்துக்கொண்டாள்.

தூங்குமுன் அவள் மனம் ஒரு திடமான முடிவுக்கு வந்தது. எது எப்படியானாலும் சரி. அவள் மறு நாட் காலையிலே அந்த வீட்டை விட்டு வெளியேறிவிட வேண்டும் என்பதுதான் அந்த முடிவு.

மறுநாள் காலை கணவன் வெளியே சென்றதும் அபிராமியம்மாள் தாழ்வாரத்தில் வந்து உட்கார்ந்து கொண்டு அரிசியில் கற்களைப் பொறுக்குவதில் ஈடுபட்டிருந்தாள். மடமடவென்று ஆவேசம் வந்தவள் போல் உள்ளே வந்து நின்ற மரகதத்தைக் கண்டு அவள் ஒருகணம் திடுக்கிட்டே போய்விட்டாள். அடுத்த வீட்டாருடன் உறவைத் துண்டித்துக் கொண்டபின் அவள் மரகதத்தின் முகத்தைக் கூட பார்த்ததில்லை. ஆகவே அவள் கண்கள் ஆச்சரியத்தினால் அகன்றன.

''வாம்மா! என்ன சமாசாரம்?'' என்று மரியாதைக்கு வரவேற்ற அவள் பீதியுடன் வாசற்பக்கம் ஒரு முறை பார்த்துக்கொண்டாள். கடைக்குப்போன கணவன் எங்கேயாவது திரும்பி வந்து அடுத்த வீட்டவர்களுடன் என்ன உறவு என்று கோபித்துக் கொள்வாரோ என்ற பயத்தில் அவளுக்கு என்ன செய்வதென்றே தோன்றவில்லை.

"அத்தை! நீங்கள்தான் எனக்கு ஒரு உதவி செய்ய வேண்டும். கிராமத்தில் என் மாமனார் மாமியாரிடம் என்னைக் கொண்டு சேர்க்க உதவி செய்யணும்" என்று கெஞ்சும் குரலில் கேட்டாள்.

"என்னமோ வீட்டுக்குள்ளே வாசல்படி தாண்டி வந்தே. வான்னு கூப்பிட்டேன். உங்க வீட்டுச் சமாசாரம் ஒண்ணும் வேண்டாம். உன் புருஷன் வீட்டு விலாசமே எனக்குத் தெரியாது. அன்னையோட உங்களுக்கும் எங்களுக்கும் உறவு அத்துப்போச்சு" என்று அபிராமி கிலியுடன் சொன்னாள்.

"அத்தை! முன்னேயாவது நான் உங்களுக்கு அடுத்த வீட்டுப்பெண். இப்போது உங்களுக்கு உறவுப் பெண். முறையில் உங்களுக்கு நாட்டுப் பெண் ஆகி யிருக்கிறேன். நீங்கள் எனக்கு இந்த உதவி கட்டாயம் செய்யணும். வீட்டிலே நீங்கள்தான் விளக்கேத்தி வைக்கணும். நீங்க மாட்டேன்னா நான் ஆத்திலோ குளத்திலோ விழுந்து சாகவேண்டியதுதான் வழி" என்று விம்மியழுதுகொண்டு அபிராமியின் காலடியில் உட்கார்ந்து விட்டாள் மரகதம்.

மரகதத்தின் கண்ணீரைக் கண்டு அபிராமிக்கு மனம் இளகிவிட்டது.

"உன் வீட்டு விஷயமே எனக்கு ஒண்ணும் தெரியாது. உங்கப்பனும் உங்கம்மாவும் மறுபடி ஏதாவது சண்டைக்கு வந்தாலும் வரலாம். மேலும்..." என்று அவள் இழுப்பதற்குள் குறுக்கிட்ட மரகதம்.

"அத்தை! இந்தப் பாவிக்கு இன்னும் எவ்வளவு கஷ்டப்பட வேண்டுமென்று தலையில் எழுதியிருக்கிறதோ தெரியலை. உங்க மகன் என் மீது இப்போ கொஞ்சம் கோபமா



இருக்கிறார். அதனாலேதான் பிறந்த வீட்டிலே வந்து இருக்கவேண்டி வந்தது. அப்பனும் அம்மாவும் இங்கே என்னைப் பிடுங்கித் திங்கிறது என்னால் தாளவில்லை. அதனாலே நான் போய் என் மாமனார் வீட்டிலே இருக்கிறதுன்னு உத்தேசித்து விட்டேன். எப்போ உங்க மகனுக்கு மனசு சரியாகிறதோ, அப்போ வந்து கூட்டிக் கொண்டு போகட்டும். பிறந்த வீட்டிலே இருந்தாள் என்கிற பொல்லாப்பு இல்லாது புருஷன் வீட்டிலே போய் இருந்தேன்னு இருக்கட்டும். அதுக்கு உங்க உதவி தேவை அத்தை. நான் நல்லா வாழ்ந்தா உங்களை தினமும் நினைச்சுக் கும்பிடுவேன். உங்களை குலதெய்வமாக நினைப்பேன்" என்று இதயமே வெடித்து விடும்போல் கண்ணீர் விட்டுக் கதறி அழுதாள்.

அபிராமியின் மனம் பாகாய்க் கரைந்தது. ஆமாம் சிவராஜனுக்கு உன்மேலே என்னத்திற்காக கோபம் வந்தது? என்று கண்ணில் துளிர்த்த நீரை சட்டென்று துடைத்துக் கொண்டு ஆவலுடன் கேட்டாள்.

"ஒன்றுமில்லை. பிறந்த வீட்டுக்கு போகணும் னேன். போகக்கூடாதுன்னு சொன்னார். அவர் பேச்சைக் கேட்காமல் புறப்பட்டேன். கோபிச்சுக் கொண்டு இங்கே கொண்டு வந்து தள்ளிவிட்டு போய்விட்டார். மாதம் முதல் தேதிக்கு பணம் மட்டும் செலவுக்கு அனுப்பி விடுகிறார். காகிதம் போடுவ தில்லை" என்றாள்.

"அவன் கோபமாயிருக்கிறான் என்று நீ இங்கே உட்கார்ந்திருக்கலாமா? நேரே புறப்பட்டு அவன் இருக்கிற இடத்திற்கல்லவா போகணும்? அதைவிட்டு சுத்து வழி யெல்லாம் என்னத்துக்கு? கட்டின புருஷனைத் தனியா விட்டுவிட்டு பெண்பிள்ளைகள் பலநாள் பிறந்த வீட்டிலே

இருப்பது அவ்வளவு நல்லதல்ல. ஆண் பிள்ளைகள் மனம் ஒரு சமயம் இல்லாவிட்டால் ஒரு சமயம் எப்படியோ மாறிப் போயிடும்'' என்று உபதேசித்தாள் அபிராமி.

சிட்டியை அது சமயம் நினைத்துக்கொண்ட மரகதத்தின் உள்ளத்தில் திடீரென்று ஒருவிதப் பயம் ஏற்பட்டது. மரகதம் இனி எவ்வளவு முயன்றும் பயன் இல்லாது நிலைமை வெகுவாக மாறிவிட்டிருந்தால்...! தனது உள்ளத்தைக் கலக்கிய விஷயத்தை வெளியே சொல்லிக் கொள்ள மனமில்லாது, ''அப்படியொன்றும் அவர் மனம் மாறிவிடாது. அவர் ரொம்ப நல்லவர்'' என்று கண்ணீரிடையே புன்னகை செய்தாள் மரகதம்.

''உன் புருஷனை அப்படி நான் ஒன்றும் குறை கூறவில்லை. எப்பேர்ப்பட்ட யோக்கியனும் சில சமயம் சந்தர்ப்பக் கோளாறினால் மனசு மாறிப்போய் விடுகிறான். உலகப் போக்கை எடுத்துச் சொன்னேன். ஆமாம் அது கிடக்கட்டும் நீ இப்போ ஏதாவது...'' என்று இழுத்தாள்.

மரகதத்தின் முகம் நாணத்தினால் சிவந்தது. அவளது இருதயம் விவரிக்க இயலாத ஒருவகை உவகையினால் துடித்தது. ''இல்லை அத்தை, அப்படிப் பட்ட பாக்கியம் இன்னும் ஏற்படவில்லை'' என்று மெல்லிய குரலில் சொன்னாள்.

''அடுத்தவாட்டி பார்க்கும் பொழுதாவது நல்ல செய்தி என் காதுகளுக்கு எட்டட்டும். சுந்தரம்பிள்ளை பேரன் பிறக்கிறவரை இருந்துவிட்டுப் போகட்டும். பாவம் கிழவனார் ரொம்ப காயலாவாகக் கிடக்கிறாராம்'' என்றாள் அபிராமி.

''இது சமயம் நான் பிறந்த வீட்டிலே இருப்பதை விட்டு அவங்களுடன் இருந்தால் எவ்வளவோ நன்றாக இருக்கும்.



மருமகள் மாமனார் காயலாக இருக்கையிலே கூட இருந்து உதவி செய்தாள் என்று அவர்களுக்குத் திருப்தியாவது ஏற்படும். உங்க பிள்ளையின் கோபமும் கொஞ்சம் தீரும். கூட்டிக்கொண்டு போக வருவார். அவராக வந்தால் ஒழிய நானே போகக்கூடாது அத்தை. அவருக்கு எதிரா எது செய்தாலும் அவருக்குப் பிடிக்காது. அதனால்தான் எனக்குப் பயமாக இருக்கிறது'' என்றாள்.

அபிராமி விழித்தாள். மரகதத்திற்கு இது விஷயமாக உதவி செய்யவேண்டியது அவளது கடமை என்று அவளுக்குத் தோன்றியது. ஆனால் கணவன் என்ன சொல்லுவாரோ என்ற பயத்தினால் நேரிடையாக உதவி செய்ய அவளுக்குத் துணிச்சல் ஏற்படவில்லை.

ஆகவே அதைப்பற்றி யோசிக்க இரண்டு நாட்கள் அவகாசம் எடுத்துக்கொண்டாள். அந்த இரண்டு தினங்களும் மரகதத்திற்கு இரண்டு யுகங்களாகத் தோன்றின.

அன்று காலை மரகதம் கிணற்றிலே தண்ணீர் இறைத்துக் கொண்டிருந்தாள். அடுத்த வீட்டு புழக்கடையிலிருந்து யாரோ மெல்லக் கூப்பிடுவதை உணர்ந்த அவள் குடத்தைக் கீழே வைத்து விட்டு இடைச்சுவர் அருகில்போய் நின்று கொண்டாள்.

''ஒரு சங்கதி காதில் வந்து விழுந்தது. உனக்குச் சொல்ல ஓடி வந்தேன். இன்று ராத்திரி வண்டியிலே உங்க ஊருக்கு மூலை விட்டு குப்பம்மா மகள் ரங்கம் போகிறாள். அவள் புருஷன் வீடு உன் மாமனார் ஊருக்கு ரெண்டுகல் தூரத்திலேதான் இருக்கிறது. கூட வருவதானால் உன்னைக் கூட்டிப் போகிறாளாம். விசயம் ஒருத்தருக்கும் தெரிய வேண்டாம். வீட்டிலே இவர் காதில் பட்டால் என்னைக் கொன்று விடுவார்'' என்றாள் ரகசியமாக.

மரகதத்திற்கு ஆனந்தம் தாளவில்லை. "அத்தை இந்த உதவியை நான் சாகிறமட்டும் மறக்கமாட்டேன். நான் ரங்கத்துடனே இன்னிக்குப் புறப்பட்டுப் போய் விடுகிறேன். அப்புறம் விதி விட்ட வழி" என்றாள்.

ஊருக்கு புறப்படுவதற்கு துரிதமாக ஆயத்தம் செய்த மரகதம் விசயத்தை முதலில் தாயாருக்குக் கூட தெரிவிக்கவில்லை. வண்டிக்குச் செல்லச் சிறிதுநேரம் முன்புதான் தனது திட்டத்தை மெல்லத் தாயாருக்கு எட்டவிட்டாள்.

சங்கதியை மனைவியிடமிருந்து கேள்விப்பட்ட மாணிக்கம்பிள்ளை சூள்கொட்டினார். முத்துப்பிள்ளை கோவிலுக்குச் சென்றிருந்ததினால் தைரியமாக வீட்டில் நுழைந்த மரகதம் நன்றி உணர்ச்சி தாளமுடியாது அபிராமியம்மாள் காலில் விழுந்து நமஸ்கரித்தாள்.

"அத்தை போய்விட்டு வருகிறேன். அடுத்த வாட்டி வரும் போது உங்க ஆசீர்வாதம் பலிக்கட்டும்" என்று துக்கம் தொண்டையை அடைக்க, கண்களில் நீர் பெருக, விடை பெற்றுக் கொண்டாள்.

"போய்விட்டு வா. எங்கே இருந்தாலும் நீ நல்லா இருந்தா சரி" என்று அன்புடன் விடை கொடுத்த அபிராமி கண்களில் தாரையாக வழிந்தோடிய தனது கண்ணீரை வெட்கத்துடன் துடைத்து விட்டுக் கொண்டாள்.

மரகதம் தனது துணிச்சலை எண்ணி மிகவும் ஆச்சர்யப்பட்டுக் கொண்டாள். கோடிவீட்டுக் குப்பம்மாள் மகள் ரங்கத்தை துணையாகக் கொண்டு அவள் தைரியமாக அந்தப் பிரயாணத்திற்குக் கிளம்பிவிட்டாள்.



ஸ்டேஷனுக்கும் அவர்கள் வீட்டிற்கும் சில மைல் தூரமே இருந்தது. குதிரை வண்டியொன்றை வாடகைக்குப் பேசி அதில் மரகதத்தை ஏற்றிவிட்டு ரங்கம் தனது புருஷனுடன் வேறு திக்கில் தங்கள் ஊருக்குச் சென்று விட்டாள். மரகதம் தன்னந்தனியாக யாருடைய துணையுமின்றி முன்பின் பார்த்திராத தனது மாமனாரின் கிராமத்தை வந்தடைந்தாள்.

கூடத்திலே சுந்தரம் பிள்ளை கட்டிலில் இருமிக் கொண்டு படுத்திருந்தார். முற்றத்தின் குறட்டின் மீது உட்கார்ந்திருந்த அவரது இளைய மனைவி தாயாரம்மாள் தனது நாட்டுப்பெண் செந்தாமரைக்குத் தலை சீவிப் பின்னிக் கொண்டிருந்தாள். முற்றத்திலிருந்த கயிற்றுக் கட்டிலில் சோம்பலுடன் எழுந்திருக்க மனமற்றவன் போல் புரண்டு கொண்டிருந்தான் தாயாரம்மாளின் செல்லப் புதல்வன் துரைராஜன்.

கையில் சிறு மூட்டையுடன் வந்த சிறு பெண் தன் அருகில் வந்து நமஸ்கரிப்பதைக் கண்ட சுந்தரம்பிள்ளை திகைப்புடன் நிமிர்ந்து எழுந்து உட்கார்ந்து கொண்டார்.

"யாரம்மா நீ?" என்று அவர் கேட்பதற்குள் மரகதம் தானே துவங்கினாள்.

"நான் உங்க மூத்த மகன் பெண்ஜாதி. மாணிக்கம் பிள்ளை மகள் மரகதம். காயலாக கிடக்கிறீங்கன்னு கேள்விப் பட்டு உதவியாக இருக்க அவர் இங்கே அனுப்பிச்சார்" என்று தைரியமாக ஒரு பொய்யைக் கூறினாள். பின்னிக் கொண்டிருந்த ஜடையை விட்டு ஆத்திரத்துடன் தாயாரம்மாள் எழுந்து நின்றாள்.

"ஓகோ! சிவராஜன் இழுத்துக்கொண்டு போன பொண்ணு நீதானா? வீட்டை விட்டு ராங்கியா போனது

மில்லாமல் அந்தப் பாவிப்பயல் ஊரே எங்களைப் பார்த்து சிரிக்கும்படி ஒரு காரியம் செய்தானே. அதுக்கு உடந்தையா இருந்த மகராசி நீதானா? வாடியம்மா வா? நீ இங்கே வரலைன்னுதான் காத்திருந்தாங்க'' என்று கோபத்துடன் கத்தினாள்.

அங்கே கிடைத்த வரவேற்பைக் கண்டு மரகதம் நெஞ்சம் துணுக்குற்றாள்.

''இல்லை அத்தை! நீங்கள் அப்படி சொல்லக் கூடாது. ஏதோ அவர் முன்னால் தவறாக உங்களிடம் நடந்து கொண்டிருக்கலாம். அதுக்காக மன்னிப்புக் கேட்பதற்காகவே என்னை இங்கே சில நாள் இருக்கும்படி அனுப்பியிருக்கிறார். உங்களையெல்லாம் நேரே பார்க்க அவருக்கு வெட்கமாக இருந்ததினால் கூடவரவில்லை'' என்று துக்கத்துடன் கெஞ்சும் குரலில் சொன்னாள் மரகதம்.

''மூஞ்சியிலே முழிக்கக்கூட அவனுக்கு தைர்யமிருக்கா என்ன? வீட்டை விட்டு முறைச்சுக்கொண்டு போன கழுதை. அவனுக்குக் கலியாணம் ஒண்ணுதான் பாக்கியாக இருந்தது'' என்று அவள் மேலும் ஏதேதோ கூறுமுன் சுந்தரம்பிள்ளை குறுக்கிட்டு,

''சரி சரி நிறுத்து. அந்தப் பெண்ணே நம் வீடு தேடி வந்திருக்கு. மனசு கஷ்டப்படறாப்போல கன்னா பின்னாவென்று ஒன்றும் சொல்ல வேண்டாம். வாம்மா மரகதம். உள்ளே போயி குளிச்சிட்டு ஏதாச்சும் சாப்பிடு. சிவராஜனுக்கு இத்தனை நாள் கழிச்சாவது அப்பன் ஞாபகம் கொஞ்சம் ஏற்பட்டதே அதுவே போதும்'' என்றார்.

வீட்டை விட்டுக் கோபத்துடன் நான்கு ஆண்டுகளுக்கு முன் வெளியேறிய தனது மூத்த மகன் சிவராஜனை



நினைத்துக் கொண்ட சுந்தரம்பிள்ளை மனம் பெற்ற பாசத்தினால் ஊசலாடியது.

தாயாரம்மாளுக்கு மரகதத்தை அவ்வளவாகப் பிடிக்கவில்லை. இந்தக் குட்டிக்கு இந்த வீட்டில் என்ன உரிமை என்று அவள் உள்ளம் ஆத்திரத்தில் கொந்தளித்தது. எனினும் அவள் சில காரணங்களை உத்தேசித்து மௌனமாக இருந்துவிட்டாள். அவள் கணவன் சுந்தரம் பிள்ளை நோயாக இரண்டு வருஷமாக அவதிப்பட்டுக் கொண்டு இருந்தார். அவர் பிழைத்து எழுந்திருப்பது துர்லபம் என்று அவள் அறிவாள்.

உயிர் போகுமுன் கணவன் தனது சொத்து முழுவதையும் தன் பிள்ளை துரைராஜனுக்கே எழுதி வைத்துவிட்டுப் போகவேண்டுமென்று அவள் மன்றாடிக் கொண்டிருந்தாள். இளைய மனைவியின் பேச்சைக் கேட்டுத் தனது மூத்த மகன் சிவராஜனை ஆதி நாளில் மிகவும் கொடுமைப் படுத்தி விட்டதை நினைத்து, பச்சாதாபத்தில் உள்ளம் நைந்து போயிருந்த சுந்தரம்பிள்ளை, இதற்கு ஒப்புக் கொள்ளவில்லை.

தனது சொத்தில் மூத்தவள் மகனுக்கு ஏதும் இல்லாது எல்லாவற்றையும் இளையவள் பிள்ளைக்கு எழுதி வைத்து விடுவது பெரும் துரோகமாகும் என்று எண்ணி அவர் பிடிவாதமாக மறுத்துவிட்டார்.

ஆனால் தாயாரம்மாள் சுலபத்தில் தனது முயற்சியைக் கைவிட்டு விடவில்லை. சிவராஜன் மீது அப்போதைக்குப் போது ஏதாவது கோள் சொல்லிக் கொண்டு அவன் மீது தந்தைக்கு ஏற்பட்டிருந்த பாசத்தைக் குறைக்க முயன்று கொண்டிருந்தாள். ஆகவே அவள் தற்சமயம் சுந்தரம் பிள்ளைக்கு எதிராக ஏதும் செய்து, அவரது அதிருப்தியைச்

சம்பாதித்துக் கொள்ள இச்சைப்படாது வாளாவிருந்து விட்டாள்.

மரகதம் அங்கே தங்களுடன் வசிக்கட்டும் என்று அவள் அனுமதித்ததற்கு இன்னொரு காரணமும் இருந்தது. அதனால் அவளுக்கு வீட்டு வேலைகளை முன் போல செய்து வரமுடியவில்லை.

தாயாரம்மாளுக்கும் வயதாகிவிட்டதினால் குடும்பப் பாரம் பெரும் பாரமாகத் தென்பட்டது. மரகதம் வந்தது ஒரு விஷயத்தில் மிகவும் அனுகூலமாகத்தான் இருந்தது. வீட்டு வேலைகளைச் சரிவரக் கவனிக்க ஒரு வேலைக் காரியாவது வேண்டுமல்லவா?

மாமனார் வீடு வந்த மறுநாளே மரகதம் கணவனுக்குத் தான் இருக்குமிடத்தைப்பற்றி ஒரு கடிதம் எழுதிப்போட்டாள். அதற்கு அவனிடமிருந்து எவ்விதமான பதிலும் வரவில்லை. ஆனால் மாத தொடக்கத்தில் அவன் அனுப்பி வந்த செலவுப் பணம், அடுத்த மாதம் அவளுக்கு அந்த ஊர் விலாசத்திற்கே வந்து சேர்ந்தது.

சிவராஜன் மீது கொண்டிருந்த துவேஷத்தை தாயாரம்மாள் மரகதத்தின் மீது காட்டித் தனது வஞ்சத்தைத் தீர்த்துக்கொண்டாள். எவ்வளவு கருத்துடன் வீட்டுக் காரியங்களை மரகதம் கவனித்து வந்தாலும், மாமியாருக்குத் திருப்தி என்பதே ஏற்பட்டதில்லை. சிறு தவறுக்கெல்லாம் மாமியார் நாட்டுப் பெண்ணை மிகவும் கடுமையாகக் கோபித்துக் கொண்டாள்.

காலையில் விடிவதற்குமுன் எழுந்திருப்பாள் மரகதம். இரவு தூங்கத் தலை சாய்ப்பதற்குள் அவளுக்கு மனம் அலுத்து உடல் சோர்ந்துபோய் விடுவாள். ஒரு நிமிஷம்



ஓய்வு என்று இன்றி அவளுக்கு வேலைகள் சரியாக இருந்தன. காலை மாலை இருவேளை சமையற் காரியங்கள், நோயாளி மாமனாருக்குச் செய்ய வேண்டிய பணி விடைகள். கொட்டிலில் கட்டியிருந்த பசுக்களுக்குத் தீனி அரைத்து வைத்து அவற்றைக் கருத்துடன் கவனிக்க வேண்டிய பொறுப்பு சகலமும் மரகதத்தின் தலைமீது வந்து விழுந்தது.

இவ்வளவு வேலை செய்தும் மரகதத்திற்கு அந்த வீட்டில் சிறிதும் மதிப்பே இல்லாமலிருந்தது. கர்ப்பிணி என்ற சாக்குடன் வேலை ஒன்றும் செய்யாது உல்லாசமாகப் பொழுதைக் கழித்துக் கொண்டிருந்த செந்தாமரை மரகதத்தை மிகவும் துச்சமாகக் கருதினாள்.

மாமியார் தன் ஒருத்தியிடம் மட்டும் அதிகபட்சமாய் இருப்பதை அவள் அடிக்கடி வெளிப்படையாகக் காட்டிக் கொண்டு, ஓரகத்தாள் மனத்தை வேண்டுமென்றே சொற்களாலும், செய்கைகளினாலும் குத்திக்காட்டி வேதனை செய்து மகிழ்ந்தாள். தாயாரம்மாள் மூத்த மருமகளை வேலைக்காரியிலும் மிகவும் கேவலமாகவே நடத்தினாள்.

துரைராஜனும் அண்ணாவின் மனைவி என்ற மரியாதை கூட இல்லாமல் நடந்து கொண்டான். வீட்டிலுள்ள மற்றவர்கள் காட்டிய அலட்சியம் வீட்டில் வேலை செய்த ஆள் படைகளிடமும் பரவிவிடவே, மரகதத்தின் வேண்டு கோளை மாடு ஓட்டுகிறவன்கூட மதிக்காது அலட்சியம் செய்யத் தலைப்பட்டான்.

சுந்தரம் பிள்ளை ஒருவர் மட்டும் அவளிடம் சிறிது கருணை காட்டாதிருந்தால், மரகதம் தனக்கு அந்த வீட்டில் இழைக்கப்படும் கொடுமையைத் தாளாது குளத்திலோ, ஆற்றிலோ விழுந்து உயிரை மாய்த்துக் கொண்டிருப்பாள்.

இரண்டு நாட்களாக பச்சைத் தண்ணீரில் விடியு முன்னே சேர்ந்தாற்போல் முழுகியதினாலோ என்னவோ மரகதத்திற்கு ஜுரம் வந்துவிட்டது. லேசாக ஆரம்பித்த தலைவலி மண்டையைப் பிளந்து விடும்போல் கடுமையாக மாறிவிடவே பொறுக்க முடியாது சமையற் கட்டில் சுருண்டு படுத்து விட்டாள்.

கோவிலுக்குச் சென்றிருந்த தாயாரம்மாள் அன்று வெகு நேரம் சென்ற பின்புதான் வீடு திரும்பி வந்தாள்.

முற்றத்திலே வீசிக்கொண்டிருந்த நிலவில், அவளது மகனும் மருமகளும் உல்லாசமாகப் பேசிச் சிரித்துக் கொண்டு உட்கார்ந்திருந்தார்கள். சுந்தரம் பிள்ளை படுத்திருந்த இடத்தைத் தவிர வீடு முழுவதும் அந்தகாரத்தில் மூழ்கி இருப்பதைக் கண்டாள்.

''பொழுது போய் எவ்வளவு நேரமாச்சு, இன்னும் விளக்கைக் கூடத்தில் வைக்காமல் அந்த மூதேவி என்ன செய்கிறாளாம்?'' என்று தாயாரம்மாள் கோபத்துடன் கையிலிருந்த பிரசாதத் தட்டை தொப்பென தரைமீது வைத்தாள்.

''அட சனியனே, நீயா வழியிலே! பயந்து போய் விட்டேன்'' என்று இருட்டில் மரகதத்தின்மேல் தடுக்கி விழுந்த அவள் மருமகளை வாயார ஆசீர்வதித்தாள்.

''தலை வலிக்குது அத்தை. அதனால்...'' என்று முனகிக்கொண்டே எழுந்த மரகதம் விளக்கைப் பற்ற வைத்தாள்.

''ஏண்டி இன்னுமா உலைகூட வைக்கவில்லை? இருட்டுகிற மட்டும் எருமை மாதிரி என்ன தூக்கம்!'' என்று இரைந்து கத்தினாள் தாயாரம்மாள்.



''தூக்கமில்லை அத்தை. எனக்கு உடம்பு சரியில்லை. அதனாலே...'' என்று துக்கந் தாளாது நிறுத்தினாள் மரகதம்.

''உடம்புக்கு என்ன கேடு வந்தது? வேலைக்குச் சோம்பிக்கொண்டு வேஷம் போடுகிறாயே. நல்லாத் தானிருக்கு? ஒரு இலைச் சோறு வைத்துக்கொண்டு பகலில் தின்றவளுக்கு என்ன கேடு வந்து விட்டதாம்? நீ இப்படி படுத்துக்கிட்டா இங்கே வேலை செய்கிறது யாருன்னு நினைச்சே? கோயிலுக்குப் போய்விட்டு வரத்துக்குள்ளே என் உயிரே போயிட்டுது. அவள் வயிற்றுப் பிள்ளைக்காரி. அவ என்ன செய்வா? வேலைக்கு பயப்படறவ, உன் பிறந்த வீட்டில் சொகுசாக இருக்கிறதுதானே? உன்னை வெற்றிலை பாக்கு வச்சா அழைத்தோம்?'' என்று வீடே இடிந்து விடும் போல கூக்குரலிட்டாள்.

''கோவிக்காதீங்க அத்தை, தெரியாம தூங்கி விட்டேன்'' என்று முணுமுணுத்த மரகதம் அடுப்பை மூட்டத் தொடங்கினாள். பல்லைக் கடித்துக் கொண்டு எல்லா வேலைகளையும் செய்து முடித்த மரகதம் அன்று இரவு ஒரு விநாடிகூட தூங்கவில்லை. உடல்வலி மனவலி இரண்டும் சேர்ந்து கொள்ளவே அவள் அழுது கொண்டே யிருந்தாள்.

மரகதத்திற்கு வேண்டும் இத்தண்டனை. அவளது அகந்தைக்கு இன்னமும் வேண்டும்! எவ்வளவு அன்பான கணவன் சிவராஜன்? அவனை அறிந்துகொண்டு ஒழுங்காக அவனுடன் குடும்பம் நடத்தியிருந்தால் இப்படிப்பட்ட நரக வேதனைக்கு அவள் இலக்காக வேண்டியிருக்காதல்லவா என்று எண்ணிய அவள், சிவராஜனையும் அவனது அன்பையும் நினைத்துக் கொண்டு, ஏக்கத்துடன் பச்சிளங் குழந்தையைப் போல் விம்மி அழுது கொண்டேயிருந்தாள்.

அடுத்த நாள் மரகதத்தினால் எவ்வளவு முயன்றும் எழுந்திருக்கவே முடியவில்லை. மூத்த மருமகளுக்கு குளிரும் ஜுரமும் வந்துவிட்டது என்பதை அறிந்த தாயாரம்மாளுக்கு ஏற்பட்ட கோபம் கொஞ்ச நஞ்சமல்ல.

''வீட்டிலே பிடுங்கித் தின்கிற நோய் போதாதுன்னு இந்தச் சனியனும் கீழே படுத்துவிட்டது. இதுக்கு வேறே யார் இப்பொழுது மருந்துக்கும் மாயத்துக்கும் அலைகிறதாம்!'' என்று கடுத்துக் கொண்டாள்.

கூடத்து அறையில், கிழிந்த பாய் ஒன்றின்மீது மரகதம் படுத்துக் கொண்டாள். அன்று முழுவதும் அவளை ஏன் என்று ஒருவரும் கேட்கவேயில்லை. பொழுது அஸ்தமிக்கும் சமயத்தில் வீடு கூட்டும் வேலைக்காரி ஒரு சிறு பாத்திரத்தில் ஆறிய கஞ்சியையும், ஒரு கண்ணாடிப் பாட்டிலில் வயிற்றைக் குமட்டிய கசப்பான ஏதோ கஷாயத்தையும் கொண்டு வந்து வைத்து விட்டுப் போனாள்.

தாகம் தாளாது கஞ்சியை எடுத்துக் குடிக்கையில் மரகதத்தின் கண்ணில் நீர் தாரையாகப் பெருகிவந்தது. முன்னொருதரம் இருமலும் ஜுரமுமாக அவள் நோயாளியாக இருந்தபொழுது நடந்த பலவும் அவள் மனக்கண் முன் வந்து நின்றது.

மிருவான பஞ்சணை, வேளைக்கு மருந்தும் ஆகாரமும் கொடுக்க வேலைக்காரி ஒருத்தி, ''அவள் தூங்கினாளா! மருந்து சாப்பிட்டாளா?'' என்று மறக்காது சிவராஜன் அவ்வப்போது விசாரித்து அவளது உடல் நலத்தில் காட்டிய கருத்து எவ்வளவு? அவனுடைய அத்தனை அன்புக்கும் பிரதியாக அவள் அவனிடம் நடந்து கொண்ட முறைதான் என்ன?



தவறுக்கு மன்னிப்பு உண்டா? தவறை மறந்து அதற்கு அவள் இந்த பிராயச்சித்தம் செய்து கொள்ள சிவராஜன் அவளுக்கு இனி இந்த வாழ்க்கையில் இன்னொரு சந்தர்ப்பத்தை அளிப்பானா? தனக்குள்ளே எண்ணித் துக்கம் தாங்காது கண்ணீர் விட்டு அழுத மரகதம் கஞ்சியைச் சாப்பிட மனமின்றி பாத்திரத்தை அப்படியே வைத்து விட்டாள்.

''சே! இனி நாம் எதற்காக உயிர்வாழவேண்டும். இந்த ஜுரம் வந்தது நல்லதாயிற்று. 'செத்து ஒழிந்தால் சகல கவலையும் விட்டது!'' என்ற விரக்தியினால் மருந்து பாட்டிலிலிருந்து கஷாயத்தை அறையின் மூலையிலே விசிறிக் கொட்டி விட்டு பட்டினியாகப் படுத்துக் கொண்டு விட்டாள்.

## 11

மறுநாள் காலை மரகதம் விழித்துக்கொண்டு எழுந்தவுடன் ஜுரம் சிறிது தணிந்திருப்பதை உணர்ந்தாள். மருந்தும், கவனிப்பும் ஒன்றுமின்றி உடம்பு தானே குணமாகி விட்டதைக் காண அவளுக்கு சிறிது ஆச்சரியமாகத் தானிருந்தது. அதைவிட ஆச்சர்யத்தை அளித்தது அவளது மாமியார் தாயாரம்மாள் திடீரென்று அவளிடம் காட்டிய அபிமானம்.

''மரகதம்! ஏன் அம்மா! ரா முழுவதும் இருமிக் கொண்டு இருந்தே. என்னைக் கூப்பிடுகிறதுதானே. மிளகு பொடித்துப் போட்டு, கொஞ்சம் நெய்யாவது தொண்டைக்கு இதமாக காய்ச்சிக் கொடுத்திருப்பேன்!'' என்றாள்.

மரகதத்திற்கு தன் காதுகளை நம்பவே முடிய வில்லை. தாயாரம்மாளுக்கு தன்மேல் ஏன் இந்த திடீர் அன்பு என்று ஊகிக்க முடியாது அவள் மிரள மிரள விழித்தாள்.

"இந்த அறை ஒரே புழுக்கமாய் இருக்கிறது. நீ கூடத்திலே அந்தக் கயிற்றுக் கட்டிலில் படுத்துக்க, செந்தாமரையிடம் படுக்கையை எடுத்துப் போடச் சொன்னேன். எழுந்திரம்மா!'' என்று மேலே உபசாரம் செய்தாள். கனவில் நடப்பவள் போல் பிரமையுடன் மரகதம் மாமியாரின் கட்டளைப்படி எழுந்து பின் தொடர்ந்து வெளியே வந்தாள்.

' அதற்குப்பின் நோயாக அவள் படுத்திருந்த மூன்று தினங்கள் அவளுக்கு ராஜ உபசாரம் நடந்தது. "மரகதம்! தூங்கம்மா! மரகதம், இந்த ஆரஞ்சுப் பழத்தைச் சாப்பிடு!'' என்று மிகவும் கனிவுடன் மாமியார் அவளை மிகவும் உபசரித்தாள்.

"இதெல்லாம் என்ன?'' என்று யோசித்து திகைப் படைந்திருந்த மரகதத்திற்கு விஷயம் விளங்கியதும் திகைப்பு ஒரே நொடியில் நீங்கிவிட்டது. மரகதம் தூங்கு கிறாள் என்ற எண்ணத்தில் சிறிது உரத்த குரலில் தாயாரம்மாளும் செந்தாமரையும் நிகழ்த்திய சம்பாஷணையி லிருந்து மரகதம் ஏன், மாமியாருக்கு தன்மேல் இவ்வளவு அன்பு ஏற்பட்டது என்ற காரணத்தை கண்டு கொண்டு விட்டாள்.

சுந்தரம் பிள்ளையின் உடம்பு நாளாவட்டத்தில் மிகவும் பலஹீனமாகிக் கொண்டு வந்தது. ஞாபகம் சரியாக இருக்கும் பொழுதே தாயாரம்மாளுக்கு தன் மகனுக்கே எல்லாச்



சொத்தையும் எழுதி வாங்கிக் கொள்ள வேண்டும் என்ற யோசனை.

முதலில் அவள் இஷ்டத்திற்கு உடன்பட்டு மூத்தவள் மகனை வீட்டை விட்டு வெளியேறும்படி துன்புறுத்திக் கொடுமை செய்த தகப்பனுக்கு கடைசி காலத்தில் மனம் மாறி விட்டது. சாகும்பொழுது தன் மூத்த மகனுக்கு துரோகம் செய்து விட்டு செல்ல அவருக்கு மனம் வரவில்லை.

சொத்து அவருடைய சுய சம்பாத்தியம். அதை இஷ்டப்படி விநியோகிக்க அவருக்கு பூரண உரிமை இருந்தது. இளையவள் பிள்ளை துரைராஜுவுக்கே எல்லாவற்றையும் எழுதி வைத்துவிட்டுச் சென்றாலும், குற்றங் கண்டு உரிமை கொண்டாட சிவராஜனால் முடியாது. எனினும், அவருக்கு சிவராஜனுக்கு துரோகம் செய்ய மனம் வரவில்லை.

ஆகவே அவர் தனது உயிலை எழுத மறுத்து நாட்களைத் தள்ளிக்கொண்டே வந்தார். உயில் ஒன்றும் எழுதாது அவர் திடீரென்று மரணமடைந்து விட்டால், சட்ட பூர்வமாக பாதிச் சொத்து சிவராஜனுக்குச் சென்று விடும். அதைத் தடுக்க தாயாரம்மாள் பெரிதும் விரும்பினாள்.

எப்படிக் காரியத்தை சாதிப்பது என்று அவளது மூளை தீவிரமாக யோசித்து ஒரு முடிவிற்கு வந்தது. பிள்ளையைப் பார்க்க வேண்டும் என்று தந்தை பெரிதும் துடித்துக் கொண்டிருந்தார். அதைச் சாக்காக வைத்துக் கொண்டு மகனை அழைத்து வருவதாக சிவராஜன் இருந்த இடத்திற்கு தாயாரம்மாள் புறப்படுவது,

சிவராஜன் முந்திய விஷயங்களை நினைத்துக்கொண்டு அவளிடம் முகங்கொடுத்துப் பேச மறுக்கலாம்.

ஆகவே, அப்படி நேராதிருக்கக் கூடவே மரகதத்தை அழைத்துக்கொண்டு செல்வது. எப்படியும் பெண்சாதி பேச்சுக்கு அவன் கட்டுப்பட்டவனாக இருக்க வேண்டும். மாதா மாதம் தவறாமல் ஒருத்திக்கு ஐம்பது ரூபாய் செலவுக்கு அனுப்பிவிடுகிறானே, பெண்சாதி பக்தன் என்பதற்கு அது ஒன்றே போதாதா? மரகதம் எடுத்துச் சொன்னால் அவன் எதுவும் செய்யக்கூடும்.

அப்பா சொத்திற்கும் அவனுக்கும் ஒரு சம்பந்தமுமில்லையென்று அவன் கைப்பட ஒரு விடுதலைப் பத்திரம் வாங்கிக் கொண்டு வந்துவிடுவது. பிறகு கிழவன் எக்கேடாவது கெட்டுப்போகட்டும் என்ற ஒரு பெரும் திட்டம் போட்டிருந்தாள். மாமியார் கடுகடுவென்று இருந்தால், அந்தக்கள்ளி மரகதம் அவளுக்கு இது விஷயத்தில் உதவி செய்வாளா? செய்ய மாட்டாள். மருமகள் தன் சூழ்ச்சிக்கு உதவி செய்ய வேண்டி தாயாரம்மாள் திடீரென்று இரக்க தேவதையாக மாறிவிட்டிருந்தாள்.

மாமியாரின் சூழ்ச்சியை அறிந்துகொண்டாலும் மரகதம் அதைச் சிறிதும் வெளியே காட்டிக் கொள்ள வில்லை. விடுதலைப் பத்திரத்தை தாயாரம்மாள் எழுதி வாங்கிக் கொண்டாலும் சரி. இனி தன் துன்ப வாழ்க்கைக்கு ஒரு விடுதலை ஏற்படப் போகிறது என்ற ஆனந்தத்தில், அவள் அந்தப் பிரயாணத்தை ஒவ்வொரு நாளும் ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்தாள்.



சிவராஜனை நேரில் கண்டு பழைய மனஸ் தாபத்தை மறந்து வீட்டிற்கு அழைத்துவரப் போவதாக வீட்டில் சொல்லிக் கொண்டு தாயாரம்மாள் ஒருநாளில் ஊரை விட்டு மருமகள் சகிதம் கிளம்பினாள். மரகதம் தனது வாழ்க்கையிலே அதுவரை அனுபவித்திராத ஒரு ஆனந்தத்தை அடைந்தாள். சிவராஜனைப் பார்க்கப் போகிறோம் என்ற குதூகலத்தில் அவளது உள்ளம் கூத்தாடிக் கொண்டிருந்தது.

ஸ்டேஷனை விட்டிறங்கி மாட்டு வண்டியொன்றில் மாமியாரும் மருமகளும் ஏறிக் கொண்டனர். மரகதத்தின் உற்சாகமெல்லாம் திடீரென்று மறைந்து அதற்குப் பதில் அவள் மனம் கலக்கமடையத் தொடங்கியது. கணவன் உத்தரவுடன் மாமியார் வீட்டில் தங்கியிருக்க வந்ததாக அவள் ஒரு பெரும் பொய் சொல்லியிருந்தாள்.

அப்படியொன்றும் தான் சொல்லவில்லை என்று சிவராஜன் நிரூபித்து விட்டால், அவள் அதற்குப் பிறகு தாயாரம்மாள் முகத்தில் எப்படி விழிப்பாள்? இனி உனக்கும் எனக்கும் உறவு அறுந்துவிட்டது என்று சிவராஜன் அவளை உதறித் தள்ளிவிட்டுப் போய் விட்டானே? தானே வலியச் சென்ற போதும் உள்ளே நுழையக் கூட அனுமதிக்காது புறக்கணித்தால், அவள் என்ன செய்வாள்? எனப் பலவாறு தனக்குள்ளே எண்ணிக் கிலியடைந்த அவளுக்கு வீடு சமீபிப்பதைக் கண்டதும் நெஞ்சு திக்திக் என்ற அடித்துக் கொண்டது.

அன்று சிவராஜன் வீட்டிலேதான் இருந்தான். இடுப்பிலே சிறிய மூட்டையைத் தூக்கிக் கொண்டு உள்ளே

நுழைந்த சிறிய தாயாரைக் கண்டதும் அவனுக்கு ஆச்சர்யத்தில் சிறிது நேரம் பேசக் கூடத் தோன்ற வில்லை.

பூனைபோல் அவள் பின்னால் மறைந்துகொண்டு உள்ளே அடிமேல் அடிவைத்து வந்து நின்ற மனைவியைக் கண்டதும் அவன் திடுக்கிட்டுப் போனான். தன்னை ஒருவாறு சமாளித்துக்கொண்டு "வாங்கம்மா! ஏது இவ்வளவு தூரம்?" என்றான்.

"என்னவோ அப்பா! நீ எங்களையெல்லாம் மறந்து விட்டாலும் உன்னை நாங்கள் மறக்கவில்லை. உங்கப்பா உன்னைப் பார்க்கத் துடியாய்த் துடிக்கிறார். உன் பெண் சாதியை மட்டும் அப்பாவைப் பார்க்க அனுப்பிவிட்டு நீ இங்கே தனியா இருக்கத் துணிஞ்சிட்டே!" என்று அங்க லாய்த்துக் கொண்டாள்.

ஆச்சர்யத்துடன் தன்னைப் பார்த்து விழித்த கணவன் முகத்தை எதிர்நோக்கப் பயந்த மரகதம் தலையைக் குனிந்து கொண்டு நின்றாள். என்ன பதில் சொல்வானோ என்ற பயத்தில் அவளது நெஞ்சு படீர் படீர் என்று அடித்துக் கொண்டது. ஆனால் சிவராஜன் ஒன்றும் பதில் சொல்லவில்லை.

"ம்! அப்புறம்" என்றான் ஏளனமான குரலில்.

"அப்புறம் என்ன? நாங்களே உன்னைப் பார்த்து ஊருக்குக் கூட்டிப்போகப் புறப்பட்டு வந்தோம்" என்றாள் தாயாரம்மாள்.

சுற்றுமுற்றும் ஒரு முறை பார்த்து பெருமூச்சு விட்டு தாயாரம்மாள் தொடர்ந்தாற்போல், "வீடு முழுவதும்



தூசியும் தும்பலுமாக இருக்கிறதே. வேலையாள் ஒருத்தியும் கிடையாதா? ஆமாம், சாப்பாட்டுக்கு நீ இதுவரை என்ன பண்ணிக் கொண்டிருந்தாய்? சுடு காட்டிலே வந்து குடியிருக்காப்பலே இங்கே வந்து தனியா இருக்கிறாயே? பக்கத்திலே ஹோட்டல் கீட்டல் எதுனாச்சும் இருக்குதா!" என்று, அவனது நலனைப் பெரிதும் கருதுகிறவள் போல், அன்பு கனிந்த குரலில் விசாரித்தாள்.

"வேலைக்காரர்கள் எதற்கு? வீட்டை நானே கவனித்துக் கொள்கிறேன். நானே சமைத்துக் கொள்கிறேன். அதனால் ஹோட்டலைப் பற்றி எனக்கு அக்கறை யில்லை. ஏன் நிக்கிறீங்க? போய் புழக்கடைக் கிணற்றிலே சென்று குளித்து விட்டு வாங்க. பகலுக்கு சோறு வடித்து சுண்டை வத்தல் குழம்புசெய்து வைத்திருக்கிறேன். எல்லோரும் கொஞ்சம் சாப்பிடுவோம்" என்று கூறிவிட்டு எழுந்திருந்து அறைக்குள்ளே சென்று விட்டான்.

"நல்லபிள்ளை. இன்னமும் பிடிவாதம் போக வில்லை" என்று முணுமுணுத்த தாயாரம்மாள் கிணற்றடிக்கு சென்றாள். தனியே தயங்கிக் கொண்டிருந்த மரகதம் தலையை நிமிர்ந்து பார்த்தாள். வைத்த கண் வாங்காது சிவராஜன் அவளையே வெறித்துப் பார்த்துக் கொண்டு நின்று கொண்டிருந்தான்.

பரிகாசம் மிதந்தோடும் அவனது கண்ணில் கடுமை தான் நிரம்பியிருந்தது. இளைத்துக் கறுத்து அவள் தோற்றம் பார்ப்பதற்கு மிகவும் மாறிப்போயிருந்தது. மரகதத்தின் நெஞ்சில் துக்கம் அடைத்துக் கொண்டது.

ஏதோ சொல்ல அவள் உதடுகள் துடித்தன. ஆனால் ஏனோ அவளால் ஒன்றும் பேச முடியவில்லை.

நீண்ட நேரம் அவளை வெறித்துப் பார்த்த சிவராஜன் "ஓகோ! இதுவும் உன் சூழ்ச்சிகளில் ஒன்றா? இந்த சிவராஜனை உன்னால் ஜெயிக்க முடியாது என்பதைத் தெரிந்துகொண்டு விடு" என்று கடுமையான குரலில் கூறிவிட்டு வெளியே சென்று விட்டான்.

## 12

ஒருவார காலம் சென்று மறைந்தது. தாயாரம்மாளுக்கு அங்கே இருப்புக் கொள்ளவில்லை. வீட்டைக் கவனித்துக் கொண்டு வேலை செய்வதில் மரகதத்திற்கு உதவியாக இருக்க அவள் அங்கு வரவில்லை. மரகதம் புலியையோ சிங்கத்தையோ கண்டு மிரள்வதைப்போல் புருஷனைக் கண்டு அஞ்சுவதைக் காண அவளுக்குச் சிறிதும் பிடிக்கவில்லை.

"இந்தப் பெண் கணவனிடம் சொல்லிக் காரியத்தை சாதித்துவிடுவாள் என்று ஏமாந்தல்லவா இவளை அழைத்துக் கொண்டு வந்தோம். பேயைக் கண்டு மிரளுவதைப்போல் புருஷனைக் கண்டு பதுங்கி விடுகிறாளே!" என்று உள்ளூர அலுப்படைந்து போனாள்.

அன்று இரவு வீட்டிற்கு வந்த சிவராஜனிடம் அவள் நேரிடையாகவே கேட்டு விட்டாள். "ஊருக்கு எப்பொழுது வரப் போகிறாய்?"

"ஊருக்கா? நான் ஒருக்காலும் வரப்போவதில்லை. என்னைப் பார்த்துவிட்டுப் போக வந்தீர்கள்



என்று அல்லவா நான் நினைத்தேன்" என்றான் சிவராஜன் குரோதமாக.

"உன்னோடு பேச முடியாது. ஊருக்கு நீ வரா விட்டால் ஒரு காரியம் செய். உனக்கும் அப்பாவுக்கும் சம்பந்தம் ஒன்றுமில்லை என்று ஒரு விடுதலைப் பத்திரம் எழுதிக் கொடுத்துவிடு" என்று ஆத்திரத்தை அடக்கிக் கொண்டு சொன்னாள் தாயாரம்மாள்.

"என்னத்திற்காகவாம்?" என்று கேட்டான் சிவராஜன்.

"சாகக்கிடக்கும் அப்பனை வந்து பார்க்க மறுக்கிறாய். நாலஞ்சு வருஷமாக வீட்டை விட்டுப் போனவன் திரும்பி வந்து ஒருமுறை அவரைப் பார்க்கலை. இந்த லக்ஷணத்தில் உனக்கும் உங்கப்பனுக்கும் என்ன சம்பந்தம் இருக்கிறது? நான் கேட்கிறேன்" என்று கத்தினாள் தாயாரம்மாள்.

"ரத்த பந்தம் இருக்கிறதம்மா? நீங்க எத்தனை முயற்சி செய்தாலும் அதைப் பிரிக்க முடியாது. நான் அப்பாவைப் பார்க்கவேண்டும் என்று ஆசை தோன்றுகிற போது நானே வந்து பார்ப்பேன். அழைப்புத் தேவையில்லை. விடுதலைப் பத்திரம் எதற்காக எழுதித்தர வேண்டும்? நான் செய்த குற்றமென்ன? அப்பாவே மனம் வந்து அவர் சொத்து முழுவதையும் இளையவனுக்கு எழுதி வைப்பதாக இருந்தால் செய்து கொள்ளட்டும். நானாக வலிய எனக்குச் சம்பந்தமில்லை என்று எழுதித் தரமாட்டேன். நீங்கள் வந்த காரியம் என்னிடம் பலிக்காது" என்று பரிகாசமும் குரோதமும் கலந்த குரலில் சொன்னான்.

"நீ இப்படிப் பேசுவாய் என்றால் நான் இத்தனை நாள் வீணே தங்கியிருக்க மாட்டேன். நாளை காலையிலே நான் புறப்பட்டுப் போகிறேன். நீ வந்து உன் அப்பனைப் பார்த்தாலும் சரி பார்க்காவிட்டாலும் சரி" என்று கோபத்துடன் கத்திய தாயாரம்மாள் உள்ளே சென்று விட்டாள். ஆனால் அவளுக்கு அத்துடன் விஷயத்தை விட்டுவிட மனமில்லை.

"இந்தா மரகதம்! நேரமாயிற்றே. இன்னும் என்ன அடுப்படியில் குனிந்து கொண்டிருக்கிறாய்?" என்று தணிந்த குரலில் மாமியார் விசாரித்தாள்.

"பத்துப் பாத்திரங்களை வழித்துப் போட்டுக் கொண்டிருக்கிறேன். ஏன், என்ன வேணும்?" என்றாள் மரகதம்.

"நான் வேண்டுமானால் வேலையைக் கவனிக்கிறேன். நீ இந்தப் பாலை எடுத்துக் கொண்டு போய் அவனுக்குக் கொடு. தூங்குகிற நேரமாயிற்று. அப்படியே கொஞ்சம் அவனுக்கு எடுத்துச் சொல்லி கொஞ்சம் அவன் மனதைத் திருப்பு. நீ சொன்னால் ஒரு சமயம் அவன் கேட்பான்" என்றாள்.

வெட்கத்தினால் மரகதத்தின் முகம் குப்பென்று சிவந்து போயிற்று. "அப்படி ஏதாவது சொன்னால் ரொம்ப கோபித்து கொள்வார் அத்தை!" என்றாள் தடுமாற்றத்துடன்.

வந்ததிலிருந்து முகம் கொடுத்துப் பேசாமல் நீ என் பின்னால் ஓடி ஒளிந்து கொள்வதைக் காணத்தான் அவனுக்குக் கோபம் போலிருக்கிறது. புலியா, சிங்கமா? உன்னை அடித்து முழுங்கி விடுவானா என்ன? கட்டின



புருஷனிடம் ஞாயத்தை எடுத்துப் பேச உனக்குப் பயம் என்ன? பால் ஆறிப்போகுது. எடுத்துக்கொண்டு போ!" என்று தூண்டினாள்.

சிவராஜனிடம் வலியச்சென்று பேச்சுக் கொடுக்க தனக்கு தைரியம் இல்லை என்று ஒப்புக் கொள்ள மாமியாரிடம் அவளுக்குப் பயம்! ஒரு சமயம் சிவராஜன் அவளை மறுபடியும் புறக்கணித்து விட்டால் மறுபடி அவள் புக்ககத்தில் தானே சரணடைய நேரிடும். சிவராஜன் அறைக்குள்ளே செல்லவும் அவளுக்கு துணிச்சல் இல்லை. தாயாரின் வற்புறுத்தலால் புருஷனை மயக்க சூழ்ச்சி செய்து கொண்டு வெட்கமின்றி வந்து விட்டாள் எனத் தவறாக எண்ணிக் கொண்டால்?

மிகவும் தயங்கிக் கொண்டு உள்ளே வந்து நின்றாள் மரகதம். புத்தகமொன்றைப் படித்துக் கொண்டு படுக்கையில் சாய்ந்த வாக்கில் உட்கார்ந்திருந்த அவன், அவளைத் திகைப்புடன் ஏறெடுத்துப் பார்த்தான்.

"கணவன் மீது கருணை பொங்கி வழிகிறதே!" என்று பரிகாசமாகக் கேட்ட அவன் மேஜை மீது அவள் வைத்த பால் டம்பளரைக் கையில் எடுத்துக் கொண்டு பருகினான். மரகதம் தலையை நிமிராது மௌனமாக நின்று கொண்டிருந்தாள்.

"அம்மாவுக்கு நமது அந்தரங்கம் ஒன்றும் தெரியாது. நீ சொல்லவில்லையென்று எனக்குத் தெரியும். உண்மை தெரிந்திருந்தால் உன்னை தன் சூழ்ச்சியில் பயன்படுத்திக் கொள்ள நினைத்துப் புறப்பட்டு வந்திருக்க மாட்டாள். நீ என்ன சொல்ல வேண்டுமென்று இங்கே வந்தாய்.

சீக்கிரம் சொல்லி விட்டுப் போய்விடு. எனக்குத் தூக்கம் வருகிறது" என்றான் சிவராஜன்.

வெட்கமும் துயரமும் தாளாத மரகதம் கரங்களினால் முகத்தை மூடிக்கொண்டு தேம்பியழ ஆரம்பித்தாள்.

"உஸ்! நான் என்ன சொல்லி விட்டேன். எதற்காக இந்த அழுகை. வெளியே போய் அழு. என் தூக்கத்தை கெடுக்காதே. போ!" என்று அதட்டினான் சிவராஜன்.

அதற்கு மேல் அங்கே நிற்கவும் மனம் பொறுக்காத மரகதம் அவமானம் தாளாது அறையினின்று வெளியே வந்து உட்கார்ந்து கொண்டு அழுதாள். சிவராஜன் அவளை ஒரு பொழுதும் மன்னிக்க மாட்டான் என்று உணர்ந்த அவளுக்கு இருதயமே வெடித்துவிடும் போல் துக்கம் குமுறிக்கொண்டு வந்தது.

மறுநாள் பகல் தாயாரம்மாள் மறுபடியும் மகனுடன் ஒரு முறை சண்டை போட்டு விவாதித்துவிட்டு தோல்வியின் அதிர்ச்சி தாளாது ஊருக்குக் கிளம்பினாள்.

"அவன் கிடக்கிறான். நீயும் கிளம்பு! தானே வேண்டுமானால் உன்னைக் கூட்டிக் கொண்டு போக வரட்டும்" என்று அதட்டின மாமியாரை எதிர்த்துப் பேசவோ மறுக்கவோ மரகதத்திற்கு ஒரு வழியும் தோன்றவில்லை.

"மாட்டு வண்டியை வரச்சொல்லியிருக்கிறேன். வந்ததும் நீங்கள் தாராளமாக கிளம்பிப் போகலாம்" என்று சிவராஜன் கூறியதைக் கேட்ட மரகதம் தனது நிலைமையை நன்கு புரிந்து கொண்டு விட்டாள்.

சிவராஜன் அவள் அங்கே தங்கி இருப்பதை விரும்ப வில்லை. தாயுடன் அவளும் புறப்பட்டுச் சென்றுவிட



வேண்டுமென்றுதான் எதிர்பார்த்தான்! கணவனால் உதறித் தள்ளப்பட்ட அவள், இது சமயம் மாமியாருடன் முரண்டு கொண்டால் அவள் கதி அதோ கதிதான். வேறு வழியின்றி மரகதம் மௌனமாகத் தனது மாமியாருடன் திரும்ப ஊருக்குக் கிளம்பினாள்.

வழி நெடுகிலும் தாயாரம்மாள் மகனைத் திட்டிக் கொண்டே வந்தாள். பிடிவாதக்காரன், அயோக்கியன், நேர்மையற்றவன் என்று அவள் சிவராஜனுக்கு ஆயிரம் பெயர்களை அரைக்கணத்தில் சூட்டி அவனை நிந்தனை செய்து கொண்டிருந்தாள். கேட்டுக் கொண்டே வந்த மரகதம் வண்டி பாதிவழி சென்றதும், திடீரென்று "நிறுத்து வண்டியை" என்று கிரீச்சிட்டுக் கத்தினாள்.

"என்னடி உனக்கு கொள்ளை வந்து விட்டது? ஏன் கத்துகிறாய்" என்று அதட்டிய மாமியாரை, அவள் பொருட்படுத்தவில்லை. "அத்தை, நான் உங்களுடன் வரவில்லை. நான் இங்கேயே இருக்கப் போகிறேன்" என்று பைத்தியக்காரி போல் அவள் கிரீச்சிட்டுக் கத்தினாள்.

"உனக்குப் புத்தி தடுமாறித்தான் போயிருக்கு. ஊருக்கு கிளம்புங்கன்னு அவன் கல்தா குடுத்துவிட்டான். இனிமேலே நமக்கு அங்கே என்ன வேலை? ஏறு வண்டியில்" என்று அதட்டினாள் தாயாரம்மாள்.

மரகதம் தன்னுடன் ஊருக்கு திரும்பினால் கட்டாயம் அவளை அழைத்துப் போக ஒரு நாள் இல்லாவிட்டால் ஒரு நாள் சிவராஜன் கிராமத்திற்கு வந்தாக வேண்டும். ஆகவே அந்த ஒரு பிடிப்பையும் விட்டுவிட அவளுக்கு மனமில்லை.

''உங்களுக்கு அவரிடம் ஒன்றும் வேலை இல்லை. ஆனால் என் வாழ்வு அவர் கிட்டேதானே இருக்கிறது. நான் உங்களுடன் வரவில்லை. நான் போகிறேன் வீட்டிற்கு'' என்று படபடவென்று பதிலளித்த மரகதம் கால்கள் தடுமாற, அந்தி மயங்கும் வேளையில் வீட்டை நோக்கி ஓடினாள்.

வியப்புடன் சிறிது நேரம் பார்த்துக்கொண்டு வாளா விருந்த தாயாரம்மாள், ''சனியன் ஒழியட்டும். நீ வண்டியை ஸ்டேஷனுக்கு விடு அப்பா!'' என்று உத்தரவிட்டாள் முடிவில்.

அன்று மாலை வேலைகளை முடித்துக்கொண்டு சோர்வுடன் வீட்டை நோக்கி மெல்ல நடந்து கொண்டிருந்த சிவராஜனின் கண்கள் வியப்பினால் மலர்ந்தன! அவனது வீடு வழக்கம்போல் அந்தகாரத்தில் மூழ்கியிராமல், பிரகாசமாக விளக்கு எரிந்து கொண்டிருந்ததைக் கவனித்தான். சமையலறையிலிருந்து வெளிவந்த வெங்காயக் குழம்பின் மணம் அவனது நாசியைத் துளைக்கவே, ஆச்சர்யத்துடன் மெல்லக் கதவைத் திறந்து கொண்டு உள்ளே வந்து நின்றான்.

முன் வீட்டிலே தரைமீது உட்கார்ந்துகொண்டு கீரையைக் கிள்ளிக்கொண்டிருந்த மரகதம் திடுக்கிட்டு எழுந்து நின்றாள். கதவைத் தாளிட்டுவிட்டு நிதானமாகத் தன்னை நெருங்கி சிவராஜன் வருவதைக் காண அவள் உள்ளம் படபடவென்று துடிக்க ஆரம்பித்தது.

''இதற்கு அர்த்தம் என்னவோ?'' என்று அதே கடுமையான குரலில் கேட்டான் சிவராஜன்.



''அர்த்தம் ஒன்றும் இல்லை. கஷ்டங்களை அனுபவித்து இவ்வளவு நாளைக்குப் பிறகு எனக்கு புத்தி வந்தது என்று துக்கத்துடன் கூறினாள் மரகதம்.

''மாமியாருடன் கூடிக்கொண்டு புருஷனுக்கு எதிராகச் சதிசெய்ய புத்தி வந்ததாக்கும். மாமியாரை அனுப்பி விட்டு இங்கே தனியாக வந்திருப்பதன் நோக்கம் என்ன? மீண்டும் இது ஒரு சூழ்ச்சியா?'' என்று அதட்டினான் அவன்.

''ஒரு பெண்ணிற்கு வேண்டியது கணவனின் அன்பு என்று இப்பொழுதுதான் எனக்குப் புத்தி வந்தது. அதனால்...'' என்று முடிக்க முடியாது விம்மினாள்.

சிவராஜனின் முகத்திலிருந்த அந்தக் கடுமை மின்னலைப் போல் மறைந்து ஓடிவிட்டது. பரிவும் பாசமும் கலந்த அந்தப் பார்வை அவனது கண்களில் எங்கிருந்தோ ஓடி வந்து குடி கொண்டது.

''உண்மையாகவா சொல்கிறாய் மரகதம்! பொய் சொல்லி என்னை ஏமாற்றிவிட்டு மறுபடியும் ஓடிவிட மாட்டாயே!'' என்று கொஞ்சும் குரலில் கேட்ட அவன் அவளது முகத்தை தன் கரங்களால் ஆர்வத்துடன் நிமிர்த்தினான்.

''உயிர் போகும்வரை பிரியாதிருக்கவே வந்திருக் கிறேன். என்னை மன்னித்துவிடுங்கள்'' என்று கெஞ்சிய மரகதம், அவனது பரந்த மார்பிலே தன் முகத்தை வைத்துக்கொண்டு விம்மியழுதாள்.

வாழ்க்கையின் துயரத்தினின்று அவளை இனி ஒவ்வொரு கணமும் காத்து நிற்கும் என்று உறுதியளிப்பன போல் அவனது பலமான கரங்களிரண்டும் அவளை ஆரத்தழுவி அணைத்துக் கொண்டன.

(முற்றும்)